# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 16 வெள்ளிக்கிழமை (31.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 035


# குடாநாட்டு கொலைகள் குறித்து நாடாளுமன்றத்தில் பிரேரணை

## கூட்டமைப்பு நடவடிக்கை

கொழும்பு, டிசெம்பர் 31

**யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் கொலைகள், கொள்ளைகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமொன்றைக் கோர உள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விவாதம் நடத்தும் வகையில் பிரேரணை கொடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

''எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளது. அன்றைய தினம் காலை யாழ். குடாநாட்டுத் தொடர் கொலைகள், கொள்ளைகள், அடாவடித்தனங்கள் தொடர்பாக ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றுக்கான முன்னறிவித்தல் கொடுக்கப்படும்'' என்றார் பிரேமச்சந்திரன். (27ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகளை நிறுத்தக் கோரி யாழ். மாநகர சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ, 31

யாழ். மாவட்டத்தில் அண்மைய நாள்களாகத் தொடரும் கொலை, கொள்ளைச் சம்பங்களைத் தடுக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்று யாழ். மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் அனைத்துக்கும் அரசே பொறுப்பு என்றும் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ். மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான இறுதிக் கூட்டம் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அரச, எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் உரையாற்றும் போது, இங்கு இடம்பெறும் கொலைகள், கொள்ளைகளைக் கடுமையாகக் கண்டித்தனர்.

இறுதியில் அனைத்து உறுப்பினர்களதும் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(27ஆம் பக்கம் பார்க்க)


உதயன் 2011 நாள்காட்டி இன்று கேட்டு வாங்குங்கள்


## உரும்பிராயில் இளைஞர் கடத்தல்?

யாழ்ப்பாணம், டிசெ.31

உரும்பிராய் பகுதியில் இளைஞர் ஒருவர் வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டார் என்று பரவிய செய்தி காரணமாக நேற்று அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் எவரும் கடத்தப்பட்டார்கள் என்று தமக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று கோயிலடி வீதியில் மீன் சந்தைக்கு அருகில் வைத்து இளைஞர் ஒருவர் கட்டத்தப்பட்டார் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த (27ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மேஜர் பலி 5 சிப்பாய்கள் காயம்

### பம்பலப்பிட்டியில் விபத்து

கொழும்பு, டிசெ.31

பம்பலப்பிட்டியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ மேஜர் ஒருவர் உயிரிழந்தார். ஐந்து இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விருந்து வைபவம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பியபோதே இவர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து, பிரதேசவாசிகள் உடனடியாக அவர்களை வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் இராணுவ மேஜர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# உலகின் மிகச் சிறந்த படையினரால் கொலைகளைத் தடுக்க முடியாதா?

### மாநகர சபை உறுப்பினர்கள் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

''பயங்கரவாதத்தைத் தோற்கடித்த உலகின் மிகச் சிறந்த படைகள் தம்முடையவை என்று அரசு பெருமை பேசுகிறது. அப்படிப்பட்ட படைகளால் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியாமல் இருப்பது வேடிக்கையானது.'' யாழ். மாநகர சபையின் நேற்றைய கூட்டத்தில் உரையாற்றிய அரச மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு கடும் விமர்சனத்தை முன் வைத்தனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களால் குடாநாட்டு மக்கள் பீதியடைந்துள்ளனர். இவற்றுக்கு முன்னாள் ஆயுதக் குழுக்களே காரணம் என்று இராணுவம் கூறுகின்றது. ஆனால் அவர்களால் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய முடியவில்லை. இது ஏன்?

பயங்கரவாதத்தைத் தடுக்க இந்தப் படையினரிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்று வெளிநாடுகளிடம் அரசு கூறிவருகிறது. அத்தகைய சிறந்த படையினரால் கொலை, கொள்ளைகளைத் தடுக்க முடியாது என்றால் என்ன பொருள்? நடக்கும் சம்பவங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படுபவையாகவே தெரிகின்றன. கொள்ளை என்ற போர்வையில் நாளை இந்தச் சபை உறுப்பினர்கள், மேயர், ஊடகவியலாளர்கள் என அனைவரை நோக்கியும் துப்பாக்கிகள் நீட்டப்படலாம் - என்று அவர்கள் தெரிவித்தனர். *(விரிவான செய்தி 27ஆம் பக்கத்தில்)*

# வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமில்லை சாட்சியமளிக்கவே ஐ.நா. நிபுணர் குழு வருகிறது

### அரசு மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிச.31

"அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை. ஐ.நா. நிபுணர் குழு ஜனாதிபதி நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கவே இலங்கை வருகிறது.''

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்றவை தொடர்பாக புலனாய்வு செய்ய இலங்கை வருவதற்கே அரசு (27ஆம் பக்கம் பார்க்க)


கரிகணன்
நாளைய நாளிதழுடன் 2011 நாட்காட்டி

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....
சொல்பெக் EW 050



உயிர்க் கொல்லி டெங்கு நுளம்புகளை அழிக்க சொல்பெக் 80 மி.லி. இனை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்
Hayleys ஹேலீஸ் காட்சியறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292

NIBM BUILDING COMPETENCIES
Jaffna யாழ்ப்பாணம்



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

மாபெரும் இலவச கணினிக் கருத்தரங்கு

காலம்.: 02.01.2011 (ஞாயிற்றுக் கிழமை) நேரம்: காலை 10.00 மணி
இடம்: தேசிய வியாபார முகாமை நிறுவனம்
இல-40, கல்லூரி வீதி (யாழ். இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

பதிவுகளுக்கு: 021 222 0360/0361/0362 வயதெல்லை: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச் 1 என் 1 தடுப்பு ஊசி ஏற்றுவதில் விழிப்பு நிலை தேவை

யாழ்ப்பாணம், டிசெ. 31

பன்றிக் காய்ச்சல் எனப்படும் இன்புளுவென்சா எச்1 என்1 நோய்த் தடுப்பு மருந்து ஏற்றுவதில் பொது மக்கள் விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஏற்றப்படும் மருந்தின் காலாவதித் திகதியை சரிபார்த்த பின்னரே அவற்றை ஏற்றுமாறு துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள் கேட்டுள்ளனர்.

எச்1 என்1 நோய்த் தடுப்பு மருந்து நாட்டின் பல பாகங்களிலும் ஏற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக வைத்தியசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் அலுவலர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், துறைமுகம் மற்றும் விமான நிலையப் பணியாளர்கள் ஆகியோருக்கு இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஏற்றப்பட்ட இந்தத் தடுப்பு மருந்து காலாவதியானது என்ற முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்தத் தொகுதியில் இருந்த மருந்துகள் அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

அந்த மருந்துகள் காலாவதியாகவில்லை என்றும் நாளை வரை (அதாவது இன்று) அதற்கான காலக்கெடு இருக்கின்றது என்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

குறித்த தடுப்பு மருந்துப் போத்தல்களில் காலாவதியாகும் திகதி திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. பதிலாக மாதம் மற்றும் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால், சுகாதார அமைச்சின் நோய்த் தொற்றுத் தடுப்புப் பிரிவினால் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்களுக்கும் மருத்துவ நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில், ஒவ்வொரு தொகுதி மருந்தும் எப்போது காலாவதியாகின்றது என்ற திகதிகள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த 9 ஆம் திகதியிடப்பட்டு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்றப்பட்ட மருந்து கடந்த 17ஆம் திகதியுடன் காலாவதியாகி இருந்ததாக சர்ச்சை எழுந்தது. ஆனால் ''நீங்கள் நினைப்பது போல் பிரச்சினை ஏதுமில்லை'' என்று பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.



Epidemiology Unit
Ministry of Healthcare and Nutrition
231, De Saram Place, Colombo 01000, Sri Lanka

December 09, 2010

All Regional Director of Health Services
All Heads of Medical Institutions

சுற்றறிக்கை

Expiry dates of Influenza A H1N1 Vaccine

Action is being taken to distribute the following batches of the above vaccine to Regional Medical Supplies Divisions island wide.


Please take action to use vaccine expiring first, in immunization services in order to ensure minimum wastage.

Dr. Sudath Peiris
Actg. Chief Epidemiologist

நோய்த் தொற்றுத் தடுப்பு பிரிவு விடுத்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலாவதித் திகதிகள்.

| தொகுதி இல. | காலாவதி திகதி |
| --- | --- |
| 090208701 | 16.12.2010 |
| 090208801 | 17.12.2010 |
| 090209001 | 18.12.2010 |
| 090208901 | 18.12.2010 |
| 090209201 | 31.12.2010 |
| 090209101 | 31.12.2010 |
| 090209301 | 06.01.2011 |
| 090209401 | 07.01.2011 |
| 090209501 | 08.01.2011 |

இருப்பினும் காலாவதியான மருந்து ஏற்றப்பட்டது என்று தமக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்று மாலை தெரிவித்தனர்.



வைத்தியசாலையில் ஏற்றப்பட்ட எச்1 என்1 மருந்து 17ஆம் திகதியுடன் காலாவதியாகின்றது எனத் தெரிவிக்கும் சுற்றறிக்கை சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறதே என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை உதயன் கேட்டதற்கு, ''அவ்வாறான சுற்றறிக்கை எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை; சிலவேளை இனிமேல் வரலாம்'' என்று அவர் தெரிவித்தார்.

இதுவரையில் இந்த மருந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சுமார் நூறு பேர் வரையிலானோர் ஏற்றிக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. அவர்களில் பணிப்பாளரும் ஒருவரென அறியவந்தது. நேற்றுக் காலையில் மருத்துவர் ஒருவருக்கு அதனை ஏற்ற முற்பட்ட போதே அதன் காலாவதித் திகதி தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

நேற்று நண்பகலுக்கு மேல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஏற்றப்பட்ட இதே மருந்தின் தொகுதி இலக்கத்தின் அடிப்படையில் அது இன்றுடன் காலாவதியாகின்றது.

இந்த மருந்துகள் 6 மாதங்களுக்கு முன்னரே பிராந்திய சுகாதாரத் திணைக்களங்கள் ஊடாக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அதனை ஏற்றிக் கொள்வதில் அலுவலர்கள் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதிக விலையான இந்த மருந்தின் காலாவதித் திகதி முடிவடைகிறது என்றதை அடுத்து கடந்த சில நாள்களாக இதனை ஏற்றிக் கொள்வது தீவிரமடைந்திருந்தது.

எனினும் இத்தகைய மருந்துகளைக் காலாவதித் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே ஏற்றிக் கொள்வதே சிறந்தது என்று மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர். ''சட்டப் படி காலாவதித் திகதி வரை இந்த மருந்துகளைப் பயன்படுத்த முடியும் என்ற போதும் மனிதாபிமானப் படி அதனை ஒரு மாத காலத்திற்கு முன்னர் பயன்படுத்துவதே சிறந்தது'' என அவர்கள் கூறினர்.

இலங்கையில் ஏற்றப்படும் இந்த தடுப்பு மருந்து கொல்லப்பட்ட வைரஸையே உள்ளடக்கியது என்பதால் காலாவதியானதன் பின்னர் இது ஏற்றப்பட்டால் பெரும் பக்க விளைவுகள் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை என்று தெரிவித்த அவர்கள், எனினும் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்றப்பட்டால் அது பாரதூரமாக அமையச் சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் கூறினர்.

(உ-9-149)

## சிலோன், லங்கா 'அவுட்' இனி ஸ்ரீ லங்கா தான்

### அமைச்சரவையில் தீர்மானம்

கொழும்பு, டிசெ.31

'சிலோன்', 'லங்கா' என்ற சொற்பதங்களுக்குப் பதிலாக 'ஸ்ரீ லங்கா' என்றே பாவிக்க வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இலங்கை மின்சார சபை இனிமேல் ஸ்ரீ லங்கா மின்சார சபையென்றே அழைக்கப்படும். 'பாங்க் ஒவ் சிலோன்' இனிமேல் 'பாங்க் ஒவ் ஸ்ரீ லங்கா' என்றே அழைக்கப்படும். அதேவேளை, சிலோன், லங்கா என்ற சொற்களைக் கொண்ட நிறுவனங்கள் ஸ்ரீ லங்கா என்ற சொற் பதத்தைப் பாவிக்க வேண்டும்- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## தேசிய அடையாள அட்டைகள் நாளை முதல் வீடு தேடி வரும்

வலி.வடக்கு, டிசெ.31

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள் நாளை ஜனவரி முதலாம் திகதி முதல் உரியவர்களின் வீடுகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல்கள் அனைத்து பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு பின்னர் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு வந்தன.

இந்த நடைமுறைகள் தேசிய அடையாள அட்டைகளைப் பெறும் விண்ணப்பதாரிகளுக்குக் காலதாமதத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

இந் நிலையில் நாளை ஜனவரி முதலாம் திகதி முதல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது அடையாள அட்டைகளை வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு வசதியாகப் பதிவுத் தபாலுக்கான முத்திரைகளை ஒட்டிய கடித உறைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜி.சீ.ஈ. பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் இதன் மூலம் பயனடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-36)

## வடக்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கு 9 செயலாளர்கள் 3 இல் பதவியேற்பு

வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிடமாக உள்ள செயலாளர் பதவிகளுக்கு ஒன்பது இளம் அதிகாரிகள் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகப் பதவியேற்கவுள்ள ஒன்பது உள்ளூராட்சிச் சபை செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் நாளை கொழும்பு ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 60 வயதுக்கு மேல் மீள்நியமனத்தில் கடமையாற்றிய உள்ளூராட்சிச் சபைச் செயலர்களின் பதவிகள் இல்லாது ஒழிக்கப்பட்டு இளம் அதிகாரிகளுக்கு செயலாளர் பதவி வழங்கும் பொருட்டு கடந்தவாரம் வடக்கு மாகாண ஆளுநர் யாழ். உப அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை இடம் பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி ஆகியோரால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இருந்து - மிகவும் வினைத்திறனாக செயலாற்றக்கூடிய 9 அதிகாரிகள் புதிய செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு :-

* திருமதி சோ.ஜெயந்தா - உள்ளூராட்சி உதவியாளர்.
* திரு.ஆர்.அறிவரசன் - உள்ளூராட்சி உதவியாளர்.
* திருமதி பூ.திரேசா - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு - I
* செல்வி ரி.தர்சினி - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு II
* திருமதி அ.தியாகேஷ்வரி முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு I
* திருமதி சு.சத்தியானந்தன் - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு I
* கே.மோகன்ராஜ்குமார் - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு II
* எஸ்.சுதர்ஜன் - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு II
* எஸ்.மனோகரன் - முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு II . (ஐ-302)

## தனித்திருந்த பெண்ணைத் தாக்கி கொள்ளையிட முயன்ற இளைஞன் நவாலியில் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

நவாலி வழுக்கையாற்றுப் பகுதியில் பட்டப்பகலில் தனித்திருந்த பெண் ஒருவரைத் தாக்கி விட்டு நகைகளைக் கொள்ளையிட இளைஞர் ஒருவர் எடுத்த முயற்சி நேற்று முறியடிக்கப்பட்டது.

வயல்வெளியில் நின்றிருந்த பெண்ணின் மீது திடீரெனப் பாய்ந்த இளைஞர் நகையைக் கொள்ளையிட முயன்றுள்ளார். தனது தலையைச் சேற்றுக்குள் அழுத்தியும் தொண்டையைத் திருகியும் கடித்தும் இளைஞர் தாக்கினார் என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவர் கூக்குரலிட்டதைக் கேட்டு அந்த இடத்துக்கு விரைந்த ஒருவர் இளைஞரைத் தாக்கிப் பிடித்து பெண்ணைக் காப்பாற்றினார். வேறு சிலரின் உதவியுடன் இளைஞனும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயான வயல்வெளியில் மாலை 5.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கால்நடைக்கு புல் வெட்டுவதற்காக வயல்வெளிக்குச் சென்ற திருமதி சந்திரகுமார் செல்வராணி (வயது 50) என்பவரே தாக்கப்பட்டார்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இளைஞர் மக்களால் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்கள் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

அந்த இளைஞரிடம் காணப்பட்ட அடையாள அட்டையில் வண்ணார்பண்ணை, தலையாழி ஒழுங்கையைச் சேர்ந்த குலதீஷ்வரன் தனுசன் (வயது 20) என்று குறிப்பிடப் பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் புல் எடுப்பதற்காகத் தனித்துச் சென்று வருகிறார் என்பதை நன்கு அவதானித்தே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அயலவர்கள் கூறுகின்றனர். (உ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, யாழ். மாவட்டங்களில்

# மேலும் 350 ஆசிரியர்களுக்கு பெப்ரவரியில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்ப்பாணம்,வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து இரண்டாம் கட்டமாக 350 ஆசிரியர்கள் பெப்ரவரி மாதத்தில் வன்னிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான ஆசிரியர் இடமாற்றம் குறித்துக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் இருந்து 350 ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர். அவர்களை யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யும்போது, அவர்களது இடங்களுக்கு இடமாற்றப்படவிருப்பவர்கள் விவரங்களை அனுப்புமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளோம். அதேபோன்ற கோரிக்கையை வவுனியா மாவட்டக் கல்வி அலுவலகத்திடமும் விடுத்துள்ளோம்.

விவரங்கள் கிடைத்ததும் இடமாற்றப்பட்டியல் பூர்த்தி செய்யப்படும்.

பெரும்பாலும் பெப்ரவரி மாதத்தில் இந்த இடமாற்றம் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ளபாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கே இடமாற்றம் வழங்கப்படும் - என்றார் அவர்.(ஐ)

# அமைச்சர் அமுனுகம யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 31

அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ். வரும் அமைச்சர் அன்றைய தினம் யாழ். பிரதம தபாலகக் கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுங்கத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்த பின்னர் அலுவலகச் செயற்பாடுகளையும் ஆரம்பித்துவைப்பார் என வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபதி வி.குமரகுரு தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களத்தின் யாழ். அலுவலக அமைப்புப் பணிகள் அனைத்தும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் பிரதி அஞ்சல் மா அதிபதி மேலும் கூறினார்.

அன்றைய தினம் யாழ். வரும் அமைச்சர் சரத் அமுனுகம சுங்கத் திணைக்கள அலுவலகத்தைத் திறந்து வைத்தபின்னர் யாழ். மாவட்ட செயலகம், யாழ். நாகவிகாரை ஆகியவற் றுக்கும் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

# அசம்பாவிதங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சிவில் அமைப்புகளின் விழிப்புணர்வு தேவை

இணையத் தலைவர் கோருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.31

அமைதி திரும்பிவிட்டதாக கூறப்படினும் குடாநாட்டில் தொடர்ந்து அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் சமூக மட்ட சிவில் அமைப்புக்கள் விழிப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியிருக்கிறது. நாங்களும் எங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குவோம்.

இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்த ஒன்றுகூடலின் போது தலைமை உரை ஆற்றிய இணையத்தின் தலைவர் வி.கேசவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வருட ஆரம்பத்தில் அரசினால் புதிதாகக் கொண்டுவரப்பட்ட சில நடைமுறைகளால் நாம் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். குறிப்பாக வடபிராந்திய அரசசார்பற்ற நிறுவனங்கள் பலத்த சிரமத்தை எதிர்கொண்டுள்ளன.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு இயங்கிய நிறுவனங்கள் அரசின் புதிய அறிவிப்பால் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்ய வேண்டியிருந்தது. அதுமட்டுமல்லாமல் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒவ்வொரு திட்டத்துக்கும் ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியினைப் பெறவேண்டியிருந்தது.

வடமாகாண அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்களை கண்காணிப்பதற்காக ஆளுநர் தலைமையில் ஆளுநர் விசேட செயலணி அமைக்கப்பட்டது.

இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்களுக்காக சேவையாற்றி வருகின்றன.

இலங்கை மத்திய வங்கி இலங்கை மக்களின் தனிநபர் வருமானம் அதிகரித்திருப்பதாகவும் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதனால் பல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களும் இலங்கைக்கான உதவியினை நிறுத்தியுள்ளன - என்றார். (ஐ-15)


## வருடாந்த ஒன்றுகூடல்

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் 2010இற்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் மண்டபத்தில் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர். அருண புண்ணிய மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.(த-51)

# கதவை உடைக்க முடியாததால் கடைக்குத் தீ மூட்டிய திருடர்

நள்ளிரவு வேளை அரசடியில் சம்பவம்



வலி.வடக்கு,டிசெ.31

நாச்சிமார் கோயிலடியில் கடையை உடைத்துத் திருட முயன்றனர் திருடர்கள். அது பயன் அளிக்காததால் கடையைத் தீ மூட்டி எரித்தனர். இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்கள் நாசமாகின.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை காங்கேசன்துறை வீதியில் உள்ள பெரியபுலம் பாடசாலைக்கு அருகில் அரசடிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அருகருகே உள்ள இரண்டு மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் கடைகளின் பின்புறம் சென்ற திருடர்கள் பூட்டை உடைத்துத் திருட முயன்றனர்.

கடையின் பூட்டு உடைக்க முடியாது பலமாக இருந்ததால், ஆத்திரத்தில் கடையின் பின்புறத்தே தீ வைத்துள்ளனர்.

இதனால் கடையின் பின்புறம் எரிந்து நாசமாகியுள்ளதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-86-160)

# மாகாணக் கல்வித் திணைக்களம் பெப்ரவரி முதல் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.31

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் மருதனார் மடத்தில் இயங்கவுள்ளது.

மாகாணசபைக்கு உட்பட்ட திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் யாவும் நாளை முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், வருட இறுதிக் கணக்குகளைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால் பெரும்பாலான திணைக்களங்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடங்களைத் தெரிவு செய்த திணைக்களங்கள் நாளையே இங்கு இயங்க ஆரம்பிக்கும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வித் திணைக்களத்துக்கான கட்டடப் பணிகள் அடுத்த மாதம் பூர்த்தியடைந்ததும், பொங்கலுக்குப் பின்னர் தளபாடங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை எடுத்துவந்து பெப்ரவரி முதல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சகல திணைக்களங்களும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துவிடும் என மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

# தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது நாளை முதல் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.31

குடாநாட்டில் தடை செய்யப்பட்டுள்ள கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நடைமுறை நாளை சனிக்கிழமை அமுலுக்கு வருகிறது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கும், கடற்றொழில் கலங்களைப் பதிவு செய்யாது, பதிவைப் புதுப்பிக்காது, பதிவு இலக்கங்கள் பொறிக்காது கடற்றொழில் செயற்பாடுகளில் கடற்கலங்களை ஈடுபடுத்துவோருக்கும் எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வெடிக்கும் தன்மையுள்ள, நஞ்சூட்டப்படக்கூடிய தன்மையுள்ள பொருள்களைப் பாவித்து மீன் பிடித்தல், அப்படிப் பிடிக்கப்பட்ட மீன்களை வைத்திருத் தல், எடுத்துச் செல்லல், சேமித்து வைத்தல், நீர்ப்பரப்பில் கொட்டுதல் என்பன தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகள் ஆகும்.

அதுமட்டுமன்றி இழுவலை, தங்கூசிவலை, தள்ளுவலை, சூழ்வலை, மெக்சிவலை, வலிவலை, நாய்வலை, முக்கூட்டு வலை, லைலாவலை, சுருக்கி வலை என்பன தடைசெய்யப்பட்டவை ஆகும். மேலும் கடல் ஆமை, கடற்பாலூட்டி போன்றவற்றையும் பிடித்தலாகாது.

இந்தத் தடை செய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம். மீறுவோர் மீது நாளை சனிக்கிழமை தொடக்கம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தடை செய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைச் செய்ய வேண்டாமென கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் கோரிக்கைகள் விடுத்தும் இன்னமும் தடைசெய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்வதாக கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் எமக்கு முறைப்பாடுகள் செய்து வருகின்றன.

அதனடிப்படையில் எமது உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் இணைந்து பருத்தித்துறைப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பகுதியிலும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டுள் [illegible] என்றார். (ஐ-14)

# அதிகாலை தோட்டத்துக்குச் சென்ற இளைஞன் மின்சாரம் தாக்கி மரணம்

சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.31

கட்டுவன் மேற்கில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தோட்டத்துக்குச் சென்ற இளைஞன் மின்சாரம் தாக்கிப் பலியானான்

இந்தச் சம்பவம் குறித்து தோட்ட உரிமையாளரும் மற்றொருவரும் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் பாக்கியராஜ் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

நேற்று அதிகாலை 3 மணிக்கு பிரஸ்தாப நபர் அருகில் உள்ள தோட்டம் ஒன்றுக்குச் சென்றதாகக் கூறப்பட்டது.

தோட்டத்துக்குள் சென்றபோது அங்கு தொங்கிக் கொண்டிருந்த மின் வயரை அந்த இளைஞர் பிடித்துள்ளார். மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளான அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

தெல்லிப்பழைப் பொலிஸாரால் மீட்கப்பட்ட சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தெல்லிப்பழை பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

தோட்டத்துக்குள் அத்துமீறி நுழைந்தபோதே இந்த இளைஞர் மின் தாக்குதலுக்கு உள்ளானார் எனப் பொலிஸார் தெரிவித்தார்.

(ஐ-78-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் அடைமழை; பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில்

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஆறு நாள்களுக்கு மேலாகப் பெய்துவரும் அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரை 72,390 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 75 ஆயிரத்து 917 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் 175 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 762 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 17 தற்காலிக முகாம்களில் 839 குடும்பங்களைச் சேர்ந்த 3,073 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு, மருத்துவ வசதிகள் என்பன மாவட்ட காரியாலயக் கிளையினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மத்திய நிலையம் கூறியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் நேற்றைய நிலைவரப்படி 72,195 குடும் பங்களைச் சேர்ந்த 2,74,863 பேர் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, 12 தற்காலிக முகாம்களில் 554 குடும்பங்களைச் சேர்ந்த 2,019 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, 175 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு, 762 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. சிறுவர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.மட்டக்களப்பு மாவட்டத்துக்கே அடைமழையினால் அதிக பாதிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் திருகோணமலை மாவட்டத்தில் 285 குடும்பங்களைச் சேர்ந்த 1,054 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களும் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள் ளன.கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்தாலும் ஏனைய மாவ ணட்டங்களில் தற்போது சீரற்ற காலநிலை வழமைக்குத் திரும்பியுள்ளது என்றும் மத்திய நிலையம் தெரிவித்தது. மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டுச் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் சிறுவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததும், மேலும் இருவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

## மரண அறிவித்தல்கள்

### சலமோன் சவரிமுத்து

இளவாலை புனித நீற்றம்மாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், போயிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சலமோன் சவரிமுத்து நேற்று (30.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சலமோனின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், யாகப்புவின் (இந்தியா) பாசமிகு தந்தையும், சாந்தாவின் (இந்தியா) அன்பு மாமனும் றொகான், றொஜினா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மேரிப்பிள்ளை, லூர்த்தம்மா, அந்தோனிப்பிள்ளை, செல்லமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற பிலோமினா (ஆசிரியை, இளவாலை கன்னியர் மடம்), தவமணி (கனடா) திருச்செல்வம் (ஜேர்மனி), நவமணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் அலெக்சாண்டர் (கனடா), ஜீவம் (கனடா), றஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கீதபொன்கலம் ஆகியோரின் சகலனும் மணி, புனிதம், றாஜன், றாஜீவி, றமேஸ், றஜனி, சுரேஸ், றதீஸ், மேகலா, பயஸ், பிரபா, வளன், திருமகள், றஞ்சிலா, வேந்தன், வேணி, வசி, சசி, தாரணி, தயா ஆகியோரின் பெரிஜயாவும் ராசவணன், மேவணன், சாந்தினி,குமுதினி, நிமிலினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித நீற்றம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
(108238) அருட் திரு நி.ம. சவரிமுத்து அடிகளார்.

### திருமதி கனகம்மா செல்லையா



குழந்தையாவளவு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் பத்தானை, அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா செல்லையா நேற்று (30.12.2010) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.செல்லையாவின் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பாக்கியம், அன்னம்மா ஆகியோரினதும் மற்றும் பொன்னுத்துரை, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் செல்வரத்தினம் (லண்டன்), சிவசுப்பிரமணியம், சகுந்தலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சக்திவேல் (கொலண்ட்), சுமதி (லண்டன்) காலஞ்சென்ற மனோ ரஞ்சித ஈஸ்வரி (பேபி) மற்றும் செல்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
தொ.பே. இல : 0212264730

தகவல் :
செ.சிவசுப்பிரமணியம்
(சுப்பிரி - மகன்)
(9574114)

### திருமதி வேலாயுதம்பிள்ளை தவமணி



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை தவமணி 28.12.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காகக் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0711467257,
0779912473.

தகவல்:
குடும்பத்தினர்.

## அமிர்தலிங்கத்துக்கு உருவச்சிலை

யாழ்ப்பாணம்,டிசெ.31

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான அமரர் அ. அமிர்தலிங்கத்தின் உருவச்சிலை விரைவில் யாழ். நீதிமன்றக் கட்டடத்துக்கு முன்பாக பூங்கா அமைந்துள்ள பகுதியில் திறந்து வைக்கப்படும்.

இதற்கான பிரேரணையை மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் முன்மொழிந்தார். பலத்த கரகோஷத்தின் மத்தியில் முதல்வரின் பிரேரனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1984ஆம் ஆண்டில் ஆணையாளராக இருந்த சீ.வி.கே. சிவஞானம் யாழ். நூலகத்தை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அழைத்துத் திறந்து வைத்தார். அந்த ஞாபகார்த்தப் பலகை இதுவரை மாநகரசபை நூலகத்தில் இல்லாதிருக்கிறது.

அதனை மீண்டும் வைக்க வேண்டும் என எதிர்க் கட்சியைச் சேர்ந்த விந்தன் கனகரத்தினம் கேட்டுக்கொண்டபோது மேற்படி பெயர்ப் பலகையை மீண்டும் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறிய முதல்வர் அமிர்தலிங்கம் அவர்களின் உருவச்சிலையைத் திறந்து வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதற்கு அங்கிருந்த அனைத்து உறுப்பினர்களும் கரகோஷம் எழுப்பித் தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள்.

இதனையடுத்து அமிர்தலிங்கத்தின் உருவச்சிலையை விரைவில் யாழ். நீதிமன்றத்துக்கு முன்பாக அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. (த-7)

## அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.31

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் இடம் பெறும்.

நேற்று இடம் பெற்ற உடுவில், தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடலில் பங்குபற்றாத அதிபர்களை இன்றைய கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் [illegible] கேட்டுள்ளார். (ஜ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| அன்னையின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 06 ★ 08 ★ 1927 |  | 01 ★ 12 ★ 2010 |

### அமரர் கந்தையா பெரியதம்பி

(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

கடந்த 01.12.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் ஈவினையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வீதி, ஈவினை.
தொ.பே. 0772557824, 0776567681.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவகுருநாதன்



ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, 377, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவகுருநாதன் நேற்று (30.12.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு தம்பதியரின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், யசோதைராணி (கனடா), நிர்மலா (ஜேர்மனி), சாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன் (கனடா), விக்கினேசன் (ஜேர்மனி), சிறிகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதனாம்பிகை, சுபாசினி, ராம்பிரசாத் (கனடா), சிறிதரன் (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும் சுஜீவன், லக்ஷினி, சுகந்தன், பிரதாபன், பிரசாந்தி, சுதர்சன், சயேந்திரன், சர்மிளா, பொண்வாணி, பிரியங்கா, ராம்டீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

377, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(108233)

தகவல் :
மனைவி
திருமதி. சி. பத்மாவதி.
தொ.பே.021-2229934

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இன்றைய உடனடித் தேவை

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆயுதப் படைகளின் மனிதாபிமான நடவடிக்கைகள் மூலம் வடக்குக் கிழக்கில் புலிகளின் பிடியில் சிக்குண்டு கிடந்த தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர். இப்பொழுது வடக்கு கிழக்கில் அமைதி நிலவுகிறது. அபிவிருத்திப் பணிகள் "ஆகா ஓகோ" என்று முன் எடுக் கப்படுகின்றன.

அரசுத் தலைவர்களும், ஒத்து ஊதுபவர்களும் இவ்வாறு தான் உலகத்துக்கு தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசு சார்பு ஊதுகுழல் ஊடகங்கள் யாவும் இதனையே தலைப்புச் செய்திகளாகவும் பிரசார விளம்பரங்களாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால்?

விடுவிக்கப்பட்ட தாகக் கூறப்படும் தமிழ் பொது மக்களின் நிலை என்னவாக இருக்கிறது?

எங்கே, எவர், எப்போது கடத்தப்படுவார், எவர் வீட்டில்ஆயுதக் கும்பல் யன்னலை உடைத்துக் கொண்டு அல்லது கூரையைப் பிய்த்துக் கொண்டு பாயப்போகிறது, துப் பாக்கியால் எவர் சுட்டுக் கொல்லப்படுவார், எவர் கத்தியால் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்படுவார், எந்த இடுகாட்டில் அல்லது பாழ் கிணற்றில் இருந்து எவரின் சடலம் மீட்கப்படப்போகிறது என்பதறியாது மக்கள் பீதியால் உறைந்து போய்க் கிடக்கிறார்கள்.

இது வெறும் கற்பனைக் கதை அன்று. சமீபகாலமாக குடாநாட்டில் இந்த நிலைமை மோசமாகியிருப்பதை மக்கள் அறிவார்கள். அதிகாரிகளுக்குத் தெரியாத விடயமும் அன்று. இது கொடும் பயங்கர நிலையைத்தோற்றுவித்துள்ளது. மக்களை ஒவ்வொரு நிமிடமும், இரவும் பகலும் பீதியில் உறைய வைத்துள்ளது.

தனிப்பட்ட குரோதங்களை விடப் பணம்,நகை கொள்ளைக்காகவும் கொலைகள் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

சங்கானையில் இந்து மத குருவானவர் ஒருவர் ஈவிரக்கமின்றி துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். உரும்பிராயில் உதவிக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் வீட்டுக்குள் வைத்தே ஆயுத தாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலைகள் பற்றிய பரபரப்பு அடங்கு முன்பே மீசாலையில் ஒருவர் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொள்ளைகளும் கொலைகளும் வடக்கில் மட்டும் தான்நடைபெறுகின்றன என்று சொல்வது சரியன்று. நாடு முழுவதிலுமே இதேபோன்ற சம்பவங்கள் இடம் பெறுவதை ஊடகங்கள் மூலம் அறிகின்றோம். ஆனால் வடக்கில் நடைபெறும் கொலை, கொள்ளை சம்பவங்களில் ஒருவித தனிப்போக்கைக் காணமுடிகிறது, உணர முடிகிறது.

சம்பவங்களில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களையே பயன்படுத்துகிறார்கள். பணத்தை, நகையைக் கொள்ளையிடுபவர்கள் அத்துடன் நின்று விடாமல் தடுக்க வருபவர்களை சுட்டுக் கொலை செய்வதிலும் தயக்கம் காட்டுவதாக இல்லை. சங்கானை சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றவர்கள் அதற்கு முன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர். உரும்பிராயில் வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரி வீட்டுத் தலைவர் மீதே குறியாக இருந்துள்ளான் என்று கூறப்படுகிறது.

இச் சம்வங்கள் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றனவா? திருடர் குழுக்கள் ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் பயபீதியை உருவாக்கிவிட்டு அதன் மூலம் பயனடைய விரும்புகின்றனவா? ஒர் இடத்தில் கொள்ளையடிக்கச் சென்ற கும்பல் சங்கானை ஐயருக்கு நடந்தது தெரியும் தானே என்று கேட்டு அச்சுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இந்த விதமான விடயங்கள் அதிகாரிகளின் ஆய்வுக்கும் உடன் நடவடிக்கைக்கும் உரியவை.

எனினும் பயங்கரவாதத்தை ஒழித்து விட்டதாகவும், நாட்டில் அமைதியைக் கொண்டு வந்து .விட்டதாகவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் அரசாங்கம், ஆயுதக் குழுக்களின் அல்லது தனிப்பட்ட நபர்களின் அடாவடித் தனங்களை அடக்கி ஒடுக்க, உடனுக்குடன் காத்திரமான நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருப்பது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது.

பொலிஸ், இராணுவ அமைப்புக்கள் இருக்கின்றன, இம்மாதிரி விடயங்களை அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்று இருப்பது உகந்த செயற்பாடாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கு மீட்கப்பட்ட பிரதேசங்கள் என்றால் அங்கே அமைதியாக மக்கள் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.

அவர்கள் தம் தொழில்களை, வியாபாரப் பணிகளை, போக்குவரத்துக்களை அமைதியாகவும் அச்சுறுத்தல் இன்றியும் செய்துகொள்ள வசதியிருக்கவேண்டும். கோயில் குளங்களுக்குச் செல்லும் பெண்கள் நகைகள் அணிந்து செல்வதற்கு அச்சமுறும் அளவுக்கு குடாநாட்டில் சீரான நிர்வாகம் இல்லையென்று ஆகிவிட்டது.

ஆகவேதான் நிர்வாக அதிகாரிகள், காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் அனைவரும் ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்தப் பயப்பீதி நிலையை முற்றாக ஒழித்துக்கட்டவும் வீடு கள் மற்றும் வாழ்விடங்களில் மக்கள் பயமின்றி செயல்படுவதை உறுதி செய்யவும் அரசின் உயர்மட்ட ஆதரவுடன் வழியொன்றைக் கண்டு பிடித்து நிலைபெறச் செய்யவேண்டும்.

இல்லையேல், குடாநாட்டில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளைச் சம்வங்களுக்கு உயர்மட்டங்கள் தொட்டு அடிமட்டம் வரை உள்ளவர்களின் ஆசியும் ஆதரவும் பங்களிப்பும் உண்டு என்று இப்பகுதி மக்கள் முடிவுக்கு வருவதை தவிர்க்கமுடியாது. அத்தகைய நிலை ஏற்படும் முன்னர் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் விரைந்து அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இதுவே இன்றைய உடனடித் தேவை.

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இந்திய அரசால் மருத்துவ உபகரணம்

இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 120 மில்லியன் ரூபா செலவில் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் உதவிப்பணிப்பாளர் கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்திய அரசு பல்வேறு உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. இதன் முதற் கட்டமாக நவீன மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரவு, சத்திர சிகிச்சைக் கூடம், இருதய சிகிச்சைப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளுக்கான உபகரணங்களை வழங்கியுள்ளது. முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள இந்த மருத்துவ உபகரணங்கள் தற்போது நோயாளர் சேவைக்காக விடப்பட்டுள்ளது - என்றார். (ம-9)

# அம்பாறை மாவட்டத்தில் அடைமழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

அம்பாறை,டிசெ.31

அம்பாறை மாவட்டத்தில் அடைமழை தொடர்ந்த வண்ணமிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள பல ஆறுகள், குளங்கள் நிரம்பி வழிவதுடன், நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயக் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் வெள்ளக் காடாகவே காட்சியளிக்கின்றன.

இதேவேளை, இந்த மாவட்டத்தின் கரையோரப் பிரதேசக் கிராமங்களான நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை, மணற்சேனை, நற்பிட்டிமுனை உட்படபல கிராமங்களின் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பல கிராமங்களின் உள்ளூர் வீதிகள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளதால் போக்குவரத்துச் செய்வதிலும் மக்கள் பெரும் சிரமங்களுக்குட்பட்டுள்ளனர்.

கல்முனை மாநகரசபைப் பிரிவுக்குட்பட்ட தமிழ்க் கிராமங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரை வடிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை எதிர்க்கட்சித்தலைவர் ஹென்றி மகேந்திரன் நேற்று மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாகவும் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் காலநிலை பற்றி அறிவிக்கும் பொத்துவில் வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எப்.ஐ.ஏ.நஹீமுடன், தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கடந்த புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் வியாழன் காலை வரையான 24 மணித்தியாலங்களில் 49.04 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், அக்கரைப்பற்றில் 56 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்றுவியாழன் காலை வரை 376.01 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி இங்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாவட்டத்தின் முக்கிய பிரதான வீதிகளிலுள்ள தாம்போதிகளிலும் மழை வெள்ளம் பாயத் தொடங்கியிருப்பதால், மழை தொடரும் பட்சத்தில் போக்குவரத்து தடைகளேற்படலாமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (ம-30)

## திறந்த பல்கலைக்கழக நாள் பாடசாலைகள்

யாழ்ப்பாணம் ,டிசெ.31

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான பாடநூல்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-12 மணி வரை விநியோகிக்கப்படும்.

மாணவர்கள்மாணவர் பதிவேட்டை சமர்ப்பித்து பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இக் கற்கை நெறிக்கான ஐந்தாம் நாள் பாடசாலை எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறாது எனவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் ஆங்கில கற்கைநெறி 2009/2010 கல்வியாண்டு மாணவர்களுக்கான மீட்டல் நாள் பாடசாலை எதிர்வரும் 8ஆம், 9 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ்.- பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## நாளை

மார்கழி 17 01.01.2011
சனிக்கிழமை
திதி: : துவாதசி
பி.ப 4.19
நட்சத்திரம் : அனுஷம்
பி.இ 03.08 வரை
சுபநேரம் : 3.29 - 04.59 வரை
ராகுகாலம் : 09.29 - 10.59 வரை

# நவாலி இடிகுண்டை புனரமைக்குமாறு "யுனிசெவ்" நிறுவனத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் ,டிசெ.31

இரு நூறுவருட பழமை வாய்ந்த நவாலி கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டம் அழிவடைந்து வருகின்றது.

இந்த நீர்த்தேக்கத் திட்டம் அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே, இதற்கு நிதி ஒதுக்கி அபிவிருத்திசெய்து தரவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யுனிசெவ் நிறுவனத்தைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

நவாலி - கட்டுடை இடிகுண்டு மீள்புனரமைப்பு எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இடிகுண்டு நீர்த்தேக்க திட்டம் 200வருட பழமை வாய்ந்தது. இத்திட்டம் அழிவடைந்து செல்வதுடன் ஆபத் தான நீர் நிலையாகவும் மாறியுள்ளது.

நெற்செய்கை விவசாயிகளுக்கும் சிறு தோட்ட விவசாயிகளுக்கும் பயன்படக் கூடிய இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டம் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது.

இதன் மூலம் விவசாயிகளும் அப் பிரதேச மக்களும் பெரிதும் நன்மையடைவர்.


எனவே, இடிகுண்டு நீர்த் தேக்கத் திட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்து உதவவேண்டும் என்றுள்ளது. (ம-302)

# திருநீற்றின் மகத்துவம்

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சைவசமயத்தின் சிவ சின்னம். திருநீறு பாவங்களையெல்லாம் நீறாக்குவதால் இதற்கு நீறு என்று பெயர். சைவசமயிகள் சிறப்பாகத் "திரு" என்ற சொல்லையும் சேர்த்து "திருநீறு" என்று கூறிக்கொள்கின்றார்கள். இது மிகவும் புனிதமானது.

திருநீற்றை விபூதி என்றும் அழைப்பர். 'வி' என்று சொன்னால் மேலானதெனவும் 'பூதி' என்று கூறினால் செல்வம் எனவும் பொருள்படுவதால் விபூதி மேலான செல்வம் எனவும் பொருள்படுதால் விபூதி மேலான செல்வமும் ஆகும். இதனை நாம் எமது நெற்றியில் அணிந்து கொண்டால் நமக்கு ஒரு புதுப்பொலிவு வந்து விடும்.

திருநீற்றை இரண்டு வகையில் தரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. திருநீற்றை உத்தூளனமாக அதாவது பரவலாகப் பூசுதல் எனவும் திரிபுண்டரமாக அதாவது விபூதியைத் தண்ணீரில் குழைத்து மூன்று குறிகளாகத் தரித்தல் எனவும் வழக்கிலுண்டு. திருநீறு தரிப்பதால் எங்களது பாவங்கள் தொலைந்து நாம் புனிதராகின்றோம். அத்துடன் நோய் நீக்குகின்ற தன்மையும் இதற்கு உண்டு. எனவே இது அருமருந்து. அனுஷ்டிக்கின்ற ஒவ்வொருவரும் சைவசமய சின்னமாகிய விபூதியை அணியத் தயங்கக்கூடாது. தற்போது வாழும் இனம் சந்ததியினர் திருநீறு அணியத் தயங்கக் கூடாது. தற்போது வாழும் இளம் சந்ததியினர் திருநீறு அணிவதை அநாகரிகமாகக் கருதகின்றனர். இஃது முற்றிலும் தவறானது. கல்வி கற்கும் மாணவ உலகம் இந்த விபூதி தரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் படிப்புத்தானாகவே வந்து சேர்ந்து விடும். எனவே பாவந்தீர்த்து நோய்மாற்றும் திருநீற்றைப் பூசி தெய்வீகம் நிறைந்த மங்களகரமான வாழ்க்கைக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.




"திருநீறுதரித்தால் பெருநோயகலும்" சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### ஐயா பரிமளம்

(மணி அக்கா)

பிறப்பு
06.05.1945

இறப்பு
01.12.2010

அன்பின் திருவுருவமே, பாசத்தின் பிறப்பிடமே
நீங்காத துயரினிலே எமை நிறுத்திவிட்டு
நீங்கள் மறைந்து சென்று நாள்கள் 31 கடந்த போதும்
அணையாத தீபமாக எங்கள் நெஞ்சில் நீங்கள்
சுடர் விடுகின்றீர்கள்
நினைவழியா உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
வைகுந்தன் (மகன்) 0777250033,
ரவி - (மருமகன், பிரான்ஸ்)
0033141555976, 033624795599

சைவப் பாடசாலை
ஒழுங்கை,
திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம் (பாலன்)



விநாயகர் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் (பாலன்) 28.12.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம்பதியரின் அன்பு மகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் துஷ்யந்தி, சகானா ஆகியோரின் பாசமிகுத் தந்தையும் இரத்தினசிங்கம், துரைசிங்கம், பத்மாவதி, இரத்னாவதி, நவரட்ணசிங்கம் (சின்னராசா), குணபாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.குணபாலசிங்கம்
(கல்வியங்காடு).

டென்மார்க்.

## நல்லூர் பிரதேச கலைஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் விருது பெற்றவர்களைக் கௌரவிக்கும் 'கலாபூஷணம்' நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் தலைவர் பா. செந்தில்நந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. கௌரவிக்கப்படுபவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

சிவக்கொழுந்து திருநாவுக்கரசு (நாடகம்), வைரவன் தில்லையன் செல்வராசா (நாடகம்), சோமசுந்தரம் பிள்ளை பத்மநாதன் (கவிதை), முருகேசு சிவப்பிரகாசம் (இலக்கியம்), அல்பிரட் பிரான்சிஸ் ஜெனம் (நாடகம்), திருமதி கோமதிதேவி செல்வநாதன் (ஓவியம்), கோதண்டபாணி பஞ்சரத்தினம் (நாதஸ்வரம்), சுப்பிரமணியம் ஆச்சாரி, பாஸ்கரன் ஆச்சாரி (சிற்பம்).

(ம-311)


## BARATHY

சித்தன்கேணி

### A/L 2013

கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 02.01.2011 ஞாயிறு

பிரபல்யம் பெற்ற நிறுவனமான பொருளியற் கல்லூரி ஆசிரியர்களுடன் மற்றும் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றனர்.

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | திருக்குமரன் |
| வணிகக் கல்வி | பசில் |
| தமிழ் | பாலா |
| இந்துநாகரிகம்/இ.சமயம் | N.T.தரன் |
| புவியியல் | குமரன் |
| வரலாறு | சுதன் |
| அளவையியல் | R.P.சர்மா |
| அரசியல் | கோகுலன் |
| நடகம்/அரங்கியலும் | கணேஸ் |
| கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நகரி. | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |

* உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
* A/L Day Class திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறுகின்றன


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நெசவு போதனாசிரியராகக் கடமையாற்றும்
செல்வி ந.புனிதவதி அவர்களின் அன்புத் தந்தை
அமரர் **கதிர்காமு நவரத்தினசாமி**
அவர்கள் 30.12.2010 அன்று இறைபதமடைந்துவிட்டார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்,
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### ஜேம்ஸ் குணநாயகம் கஸ்பேசன்

(உரிமையாளர், கஸ்பேசன் அச்சகம்)



யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியைச் சேர்ந்த ஜேம்ஸ் குணநாயகம் கஸ்பேசன் அவர்கள் நேற்று (30.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் கஸ்பேசன், சுகிர்தநாயகம் கஸ்பேசன் மற்றும் திருமதி புளோறா குணரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும் ராஜி, சரோஜினி, வசந்தி (U.K), ஜெபகுமார் (அவுஸ்திரேலியா), தயாளி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும் ஜீவராஜ் (அவுஸ்திரேலியா), நேசராஜ் (அவுஸ்திரேலியா), J.P.T.இராஜேந்திரம், ஞானராஜ் குணரட்ணம் (U.K), ஆகியோரின் மாமனாரும் சிரான் (U.K), சிரோமி (U.K), ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு இல.4, மாட்டீன் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
(108191) திருமதி ராஜி இராஜேந்திரம்.


# புலமை பெறும் பாலகர்களின் ஒரே சுடர் ...



2010 - 2011 மாணவர்களுக்கான

# புலமைச்சுடர்

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி திங்கள் தோறும் வெளிவரும் முன்னோடிக் கையேடு
தரம் - 5, 4 மாணவர்களைப் புலமைப்பரிசில்
பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி கல்விச்சுடர்
வளவாளர்களின் அரிய படைப்புக்களுடன்

## 03.01.2011

முதல் வெளிவருகிறது

இவையனைத்தும் 10 ரூபா விலையில்....

### இக்கையேட்டை அலங்கரிப்பவை

★ தரம் 4, 5 படிமுறைப் பரீட்சை வினாத்தாள்
★ கற்றாடல் கற்றல் குறிப்புக்கள்
★ தமிழ் கற்றல் குறிப்புக்கள்
★ கணிதம் கற்றல் குறிப்புக்கள்
★ பொது அறிவு, பொது உளச்சார்பு
★ மும்மொழி கற்றல் குறிப்புக்கள்
★ வாரம் ஐந்து வினா-விடை விளக்கம்
★ கட்டுரைக்களம்
★ மூளைக்கு வேலை
★ சங்கமம்

"பயிற்சியை ஒழுங்குமுறையாக இலகுபடுத்தக்கூடியது" "மிகக்குறைந்த செலவில் அதிகூடிய பயன்"

தொடர்புகளுக்கு:
புலமைச்சுடர் ஆசிரியபீடம்: 0115738855/ 071-4273035. விநியோகப்பிரிவு: கொழும்பு 011 5737599, 0716 850005,
யாழ்ப்பாணம் 021 5677222, 0716 182182

அருகிலுள்ள உதயன் முகவரிடம் முற்பதிவு செய்து உங்களுக்கு பிரதி கிடைப்பதை உறுதிசெய்யவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்குச் செல்ல மறுக்கும் ஆசிரியர் குறித்து மேல் முறையீட்டுச் சபை பரிசீலனை செய்யும்

அச்சுவேலி, டிசெ.31

வன்னிப் பெரும் நிலப் பரப்புக்கு பதிலீட்டு இடமாற்றமாக 3 வருடசேவை நிபந்தனை அடிப்படையில் யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்டங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் பதவி ஏற்பதற்கு தயாராக உள்ளனர் எனினும் குறைந்த எண்ணிக்கையானோரே மீண்டும் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இவர்களின் மேன்முறையீடு, விசேட மேன்முறையீட்டுச் சபையினால் பரிசீலனை செய்யப்படவுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்புக்கு கடந்த ஜூலையில் இடமாற்றம் செய்யப்பட்டு இடைநிறுத்தப்பட்டு மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் குறித்தளவு தொகையினர் மட்டுமே தமது இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் மீண்டும் மேன்முறையீடு செய்துள்ளனர்.

ஏனைய ஆசிரியர்கள் தமது இடமாற்றம் தொடர்பான குறித்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டுப் புதிய பாடசாலைகளில் கடமைகளை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில் ஆண் ஆசிரியர்கள் பெருமளவில் இடமாற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு 3 வருட சேவை நிபந்தனை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதும், கஸ்ரப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றுவதன் மூலம் கஷ்ரப் பிரதேசக் கடமைக்கு நேர்முகப் பரீட்சையில் மேலதிக புள்ளி வழங்கப்படுவதும் இலங்கை அதிபர் சேவைக்கு வருடத் துக்கு ஐந்து புள்ளிகள் என்ற வகையில் 30 புள்ளிகளும் வழங்கப்படுகிறது. எதிர் காலப் பதவி உயர்வுகளை கருத்திற் கொண்டு கணிசமான அளவு எண்ணிக்கையானோர் கடமை ஏற்க முன் வந்துள்ளதாகக் கூறப் படுகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து மேன்முறையீடு செய்வது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

வன்னிப் பெருநிலப்பரப்பு ஆசிரியர்கள் மாணவர் களின் பாதிப்புக்கள், நிலைப்பாடுகள் தொடர்பாக கருத்தில் கொள்ளாமையும், வலயக் கல்வி அலுவலகங்களில் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு ஆசிரியர்களை விடுவிப்பது தொடர்பான பட்டியலைத் தயாரிக்கும் போது உரிய நிபந்தனை அடிப்படையில் தகுதியானவர் களை விடுவிக்காமையும் அடிப்படையில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது எனத் தெரிவித்தார். (ம-11)

## யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தருக்கு வீடமைப்பு அதிகாரசபையின் கடன் உதவி.

தென்மராட்சி,டிசெ.31

யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகார சபை வீடமைப்புக் கடன்களை வழங்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புதிய வீடு அமைப்பதற்கு 3 இலட்சம் ரூபாவும் வீடு புனரமைப்பதற்கு ஒன்றரை இலட்சம் ரூபாவும் கடனாக வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் (2011) வழங்கப்படவுள்ள இந்தக் கடன் ஐந்து அல்லது பத்து வருடங்களில் 12.5 சதவீத வட்டியுடன் மீளச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடன் பெறவிரும்பும் அரச உத்தியோகத்தர்கள் தத்தமது அலுவலகத் தலைவர் ஊடாகவும் அல்லது யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளருடனும் தொடர்பு கொண்டும் விண்ணப்பிக்குமாறு முகாமையாளர் ஜே. றோயல் ஜெயச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இந்தக் கடன்களுக்கு இரு அரச உத்தியோகத்தர்கள் பிணையொப்பம் இடப்படல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-207)

## நெற் பயிர்களை தாக்கும் நோய்கள்

தென்மராட்சி, டிசெ.31

தென்மராட்சி தெற்கு வயல்களில் உள்ள நெற்பயிர்களில் கருக்கல்நோய், மடச்சுக்கட்டி நோய் ஆகியவற்றின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி நெற் செய்கையாளர்கள் தெரிவித் தனர்.

நோய்களின் தாக்கம் தொடர்பாக விவசாயத் திணைக்களத் துக்கு அறிவித்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர். (204-207)

## உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் இரண்டாவது தடவையாக நடத்த ஏற்பாடு

வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் இரண்டாவது தடவையாக ஜனவரி 28, 29, 30ஆகிய மூன்று தினங்களிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதம அதிதியாக அழைக்கத் தீர்மானித்துள்ளதாகக் கண்காட்சி அமைப்பாளரும் வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைச் செயலாளருக்கான 'நெல்சிப்' அபிவிருத்திக் கூட்டம் வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உள்ளூராட்சி கண்காட்சி மாநாடு தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

மூன்று தினங்களிலும் நாடாளாவியரீதியில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வருகை தருவதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்யப் படும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்காக 40 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிடப்படவுள்ளது.

வவுனியாவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மாநாட்டு கண்காட்சியை நடத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜா, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

தொழில்நுட்பம், கல்வி, பொழுதுபோக்கு உட்பட நான்கு பிரதான துறைகளை வலயங்களாகப் பிரித்துக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இலங்கையில் உள்ள மிகப் பெரிய உற்பத்தி நிறுவனங்கள், கைத்தொழிற்சாலைகளை உள்ளடக்கியதாகவும், பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தி உள்ளூராட்சியைப் பலப்படுத்தி அபிவிருத்தி செய்வதே இதன் முக்கிய நோக்கு என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உள்ளூராட்சி கண்காட்சி தொடர்பாக அனைத்து ஒத்துழைப்பினையும் வழங்கியுள்ளார்.

இந்தியாவில் இருந்து முன்னணிக் கல்வி நிறுவனங்களும், கைத்தொழில் நிறுவனங்களும் வரவழைக்கப்படவுள்ளன.

கண்காட்சியின் இறுதியில் சிறந்த அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான விருதுகள் மஹிந்த சிந்தனைக் கோட்பாட்டுக்கு இணங்க வழங்கப்படவுள்ளன.

இதற்கான பொறுப்பினை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-302)

## வளரும் கல்வி...



ஊக்குவிப்பு: சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் வைத்து கௌரவித்தனர். தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்கின்றனர். சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் மாணவிக்கு பரிசில் வழங்குகிறார். (207)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்காலிக சமையலறைக்குள் வெள்ளம்

தென்மராட்சி, டிசெ.31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைத் தற்காலிக சமையலறைக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்கிறது.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கு இந்தச் சமையலறையில் உணவுகள் தயாரிக்கப்படும் நிலையில் இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின் போது வைத்தியசாலையில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

வைத்தியசாலை இயங்கத் தொடங்கிய வேளையில் அங்குள்ள ஊழியர் வசிப்பிடம் வைத்தியசாலை நிர்வாகத் தினரால் புனரமைக்கப்பட்டு தற்காலிகமாகச் சமையலறை யாக இயங்கி வருகின்றது. தின மும் நூற்றுக்கு மேற்பட்டோ ருக்கு உணவு தயாரிக்கப்படு வதாகவும் விறகு அடுப்புகளிலேயே சமையல் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலங்களில் இந்தக் கட்டடத்தில் வெள்ளம் நிற்பதால் விறகுகள் நனைந்து உணவு தாயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதாக நோயாளர்கள் கவலை தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் சமையலறையில் இரண்டு சமையலாளருக்கு ஆளணி உள்ள போதிலும் ஒருவர் ஓய்வு பெற்றுச் சென்றதால் ஒருவர் மட்டுமே தற்போது கடமையாற்றி வருகின்றார்.

சிற்றூழியர்கள் அங்கு உதவியாளர்களாகக் காணப்படுகின்றனர்.

வைத்தியசாலைக்கு நிரந்தர சமையலறை அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்தச் சமையலறை இதுவரை நிர்மாணிக்கப்படாதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

நாட்டில் உள்ள பெரும்பாலான வைத்தியசாலைகளின் சமையலறைகளில் எரிவாயு பயன்படுத்தப்பட்டு வரு கின்ற போதிலும் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளின் சமையலறைகளில் இன் னமும் விறகு அடுப்பே பயன் படுத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்பற்ற நிலையில் இயங்கும் இந்த வைத்தியசாலையின் சமையலறையை நவீன வசதிகளுடன் கூடிய வகையில் நிர்மாணிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க [illegible] மக்கள் தெரிவித்துள்ளனர். (204-207)

## உணவகங்களில் கண்ணாடிக் கதவுகள் ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு

தென்மராட்சி, டிசெ.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள உணவுகளைக் கையாளும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கண்ணாடிக் கதவுகள் பொருத்தப்பட்ட நிலையில் இயங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் செல்லும் வாகனங்களால் உணவுப் பொருள்கள் மாசடைவதனாலே இந்த நடவடிக்கை உணவுகளைக் கையாளும் நிலையங்களுக்கு அறி விக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அரைக்கும் ஆலைகளில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரா



## அழகுக்கலை பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவுகள் ஆம்பம் 05.01.2011 புதன்கிழமை
பேசியல் 10 வகை, ஸ்ரெயிட்னிங்ஸ், பேமிங்ஸ், பெடிக்கியூர், மெனிக்கியூர், ஹெயஸ்ரைலிங், ஹொட் ஒயில் மசாஜ் (ஹெயார்), பிம்பிள் ட்றீட்மென்ட், மேக்கப், பிறைடல்ஸ் மேக்கப், சாறிடிரெஸ்ஸிங்ஸ் (7 வகை) பயிற்சியில் இணைய விரும்புவோர் தினமும் முற்பகல் 10 மணியிலிருந்து 12 மணிவரை உங்கள் பதிவுகளை பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளவும் (31, 01, 03, 04 ஆம் திகதிகளில் மட்டும்) பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிக்கட்டணம் நேரில்.



மதுரா அழகுக் கலை பயிற்சி நிலையம்,
பழைய வீதி, கோப்பாய்.
T.P.: 021 321 4013

சாறிவேக்ஸ், கேக் ஐசிங், தையல் ஆகிய பயிற்சிகளும் நடைபெறுகின்றன.



## வீடு விற்பனைக்கு

GOLDEN INVESTMENT PROPERTY FOR SALE IN TEMPLE ROAD, NALLUR, JAFFNA

3 பரப்புக் காணியில், 5 அறைகள், 2 குசினி, 3 குளியலறைகள், 2 கோல், நன்னீர்க்கிணறு, பைப் வசதி, வாகனத் தரிப்பிடவசதிகள் சிறந்த அயல் (U.N, DRS மனைகள்) அமைதியான நல்ல சூழலில் நல்லூர் கோயில் வீதியில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0723443755,
0718220474



## வாடகைக்குத் தேவை

வீடு அல்லது களஞ்சிய அறையுடன் கூடிய கடை பலாலி வீதியில் கோண்டாவிலில் இருந்து புன்னாலைக் கட்டுவன் வரையான வீதியிலும், K.K.S. றோட்டில் இணுவிலில் இருந்து சுன்னாகம் வரையான வீதியிலும் புத்தூர் - சுன்னாக வீதியிலும் வாடகைக்கு உடன் தேவை. உரியவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0772477977, 0789111559, 0213002345

தலைவர்,
யாழ்.மாவட்ட தேசவள சம்மேளனம்.



## புது வருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை

VCD, DVD, MP3 CD வகைகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. கையடக்கத் தொலைபேசி உதிரிப் பாகங்கள், கவசிங், கெட்செற், சாச்சர், பற்றறிகள், கவர் வகைகள், MP3, MP4 பிளேயர்கள், ரவர் மொடல் கூலிங் பான் வகைகள் (Fan) டோச், சார்ச்சர் டோச், VCD, DVD பிளேயர்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.
அகபதி (ஐங்கரன் வீடியோ), ஆஸ்பத்திரி வீதி, திருநெல்வேலி. T.P.0776721687


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2186 திகதி 29-12-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள் 14 39 42 65

போனஸ் இல: 25

ஜக்பொட் பரிசு ரூ. 28,624,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 206545 | 20/- | 4,130,900/- |
| 2 இல | 14835 | 100/- | 1,483,500/- |
| 3 இல | 324 | 1,000/- | 324,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8111 | 40/- | 324,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 556 | 1,000/- | 556,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 28,624,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 9926 | 100/- | 992,600/- |
| 2 இல + போனஸ் இல | 447 | 500/- | 223,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 401 | 200/- | 80,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 28 | 1,500/- | 42,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,747,140/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 241198 | | 10,347,140/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 202671632-6-07 |
| புத்தளம் | 202652799-3-01 |
| அம்பாந்தோட்டை | 202654110-9-17 |
| பொலன்னறுவை | 202658408-5-46 |
| கொழும்பு | 202657468-8-35 |
| குருநாகல் | 202652223-4-28 |
| வவுனியா | 202653631-6-44 |
| கண்டி | 202655957-1-28 |
| கொழும்பு | 202658873-7-42 |
| கொழும்பு | 202659072-3-19 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ.29,188,625/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஜனவரி 01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333540/7


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
# நினைவுகூர்ந்து தாள் பணிகின்றோம்

## பிரம்மஸ்ரீ தி.கணேசசிவசண்முகசர்மா

தோற்றம்
14.05.1933

திதி: மார்கழி மாத அபரபட்ச ஏகாதசி

மறைவு
11.01.2010



எங்கள் பாசமிகு ஐயாவே காலன் உங்களைக் கவர்ந்து சென்று ஓராண்டு சென்றாலும் உங்கள் திருமுகத்தை எங்களால் மறக்கமுடியவில்லை. தேடிய செல்வம் கணப்பொழுதில் கைவிட்டுப் போவதைப்போல் எமது வாழ்வின் தென்றலெனவிருந்து புயலாக்கிச் சென்றதேனோ வாழ்ந்தோம் சில காலம் உங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் மிகுதிக்காலம் உங்கள் நினைவோடு. அழுது அழுது விழிகள் பழுதாகி நாம் துயருற்ற போது தெரிந்தது நீங்கள் எமைப்பிரிந்து சென்று ஓராண்டு ஓடி மறைந்தது எனும் உண்மை. விண்ணோடு சென்றாலும் கூட உங்கள் உருவம் எம் நெஞ்சோடு உள்ளது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

27/4, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## கைத்தொழில் கண்காட்சிக்கான உற்பத்திப்பொருள்கள் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.மாவட்ட கைத்தொர்ழில்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி மாபெரும் கைத்தொழில் கண்காட்சி இடம்பெற வுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள கைத்தெழிலாளர்கள் தமது கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை ஜனவரி மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட கைத்தொழில்துறைத் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு யாழ். மாவட்ட அலுவலர் திருமதி லெனின் நடராஜா அறிவித்துள்ளார். (201-311-313)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ.31

தென்புலோலி பெரிய தேவனதாய் விநாயகராலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை திருவாசகமுற்றோதல் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (236)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.31

நவாலி அட்டகிரி விஸ்வ நாத சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறும் என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (302)

## வாசிப்பு மாதத்துக்கான கட்டுரைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.31

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் நூலகப் பிரிவினரால் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி முடிவுகள் வருமாறு:

க.திவிஜா- முதலாம் இடம்(புத்தூர், சோமஸ்கந்தா கல்லூரி), செ.மதிதரா - 2 ஆம் இடம் (புத்தூர், புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலம்), இ.கிருத்திகா - 3ஆம் இடம் (புத்தூர், சோமஸ்கந்தா கல்லூரி).

## தையல் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.31

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் யாழ். புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இலவச தையல் பயிற்சி வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாதகாலத்தைக் கொண்ட இப் பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறவுள்ளன. பாடசாலைக் கல்வியை முடித்த அனைவரும் இப் பயிற்சி வகுப்புக்களில் இணைந்து பயனடையுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சியைப் பெறவிரும்புவோர் தமது பெயர்களை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் 11மணிவரை பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)


## WORK PERMIT

இத்தாலி, கனடா, லண்டன், ஹொலன்ட், சைப்பிரஸ்
தொடர்பு: 0776336212



## ICT - Gr. 10-11 ICT

- கணினி பட்டதாரிகளினால் Medium English விரிவுரைகள் யாவும் நடத்தப்படுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பம் 05.01.2011
- தனி/குழு வகுப்புக்கள்

ICT யில் A யினை மிக இலகுவாக பெற்றிட.... அனுமதிகளைப் பெறவேண்டிய இடம்.

SEEDO 249, Navalar Road, Jaffna. 0777241823



## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. சிட்டை எழுதுநர் (Bill Clerk)
2. விற்பனை உதவியாளர் (Sales man)

குறிப்பு: (ஆண்கள் விரும்பத்தக்கது) தங்குமிடவசதி, உணவுச் செலவுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

T.P. 0112334507
Mobile: 0778050320


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் 25 ஏக்கர் நிலத்தில் கைத்தொழில் பேட்டை அமைக்க முடிவு

கொழும்பு, டிசெ.31

மன்னார் மாவட்டத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் கைத்தொழில் பேட்டை ஒன்றை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் முதலீடுகளைச் செய்வதற்கு மன்னார் மாவட்டத்திலுள்ளவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனக் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வடமாகாணத்துக்கான ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயம் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நகரில் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், அரச அதிபர் மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

கடந்த 3 தசாப்தகால யுத்தமானது எமது நாட்டின் அபிவிருத்தியில் பெரும் தடங்கலையும், பின்னடைவுகளையுமே தோற்றுவித்துள்ளது. இன்று அந்த நிலை மாற்றப்பட்டுள்ளது. எங்கும் அபிவிருத்திப் புரட்சியைக் காணமுடிகின்றது. அது வடக்கிலும் தற்போது துளிர்விட ஆரம்பித்துள்ளது. அதனை முழுமையாக வடமாகாணத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளது.

எனக்குக் கிடைத்துள்ள அமைச்சின் மூலம் அதனைச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை உண்டு. அதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை வடமாகாணத்துக்கு அழைத்துள்ளோம். இதன் மூலம் உற்பத்தி அதிகரிக்கும். தொழில் திறமைகள் வளர்ச்சியடையும். நாட்டின் பொருளாதாரம் மேம்படும், வருமானம் அதிகரிக்கும்.

எமது பிரதேச இளைஞர்-யுவதிகள் அரச நியமனங்களையே எதிர்பார்த்திருக்க முடியாது. சுயதொழில் மற்றும் தனியார்துறை தொழில் வாய்ப்புகளை நாடிச்செல்ல வேண்டும்.

இந்த ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மூலம் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மன்னாரில் இதனது அலுவலகமொன்று திறக்கப்பட்டதன் மூலம் பல நன்மைகள் வந்தடையும். இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாம் சந்திக்கின்றோம். வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவர்களுடன் தொடர்புகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம் எமது நாட்டின் தரமான உற்பத்திகளுக்கு ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகள் கிடைக்கும். அதனைப் பயன்படுத்துவது குறித்து எமது கவனம் சென்றுள்ளது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் கல்வி, பொருளாதார, சுகாதாரத் துறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்துக் கவனம் செலுத்தி வருகின்றோம். மழைக் காலத்தையடுத்து ஒரு வகையான காய்ச்சல் பரவுவதால் உரிய நடவடிக்கையெடுக்கு மாறு சுகாதாரத்துறைசார் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளோம்.

மன்னார் மாந்தை, நானாட்டான்,மடு, முசலி பிரதேச செயலகப் பிரிவுகளின் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை இரு மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தி மக்களது பிரச்சினைகளை செயலக மட்டத்தில் தீர்த்துக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

-இவ்வாறு அமைச்சர் றிஷாத் மேலும் தெரிவித்தார். (க)

## சுகாதாரச் சீர்கேடுகள் நிறைந்துள்ள அம்பாள்குளச் சந்தை

கிளிநொச்சி,டிசெ.31

கிளிநொச்சி அம்பாள்குளம் பொதுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதால் வியாபாரிகள் வியாபாரம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக அமைக்கப்பட்ட இப்பொதுச் சந்தையில் வியாபாரத்தின் போது வீசப்படுகின்ற குப்பைகள் பிரதேச சபை ஊழியர்களால் வெளியகற்றப்படுவதில்லை. இதனால் குப்பை கூழங்கள் சந்தையைச் சுற்றிக் குவிந்து காணப்படுவதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளன. இதனால் சீர்கேடான சந்தை இதுவெனக் கூறிப் பொதுமக்கள் ஒதுங்குகின்றாீகள்.

இவை தொடருமானால் வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டிய அவலம் ஏற்படுமென வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க-313)

## பாலங்கள் மதகுகள் உடைந்து மோசமான நிலையில் ஏ-35 வீதி

கிளிநொச்சி,டிசெ.31

பரந்தனிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதோடு இந்த வீதியிலுள்ள பாலங்களும் மதகுகளும் உடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன.

ஏ 35 வீதியென அழைக்கப்படும் பரந்தன், முல்லைத்தீவுப் பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதில் அமைந்துள்ள பாலங்களும், மதகுகளும் உடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதால் இந்த வீதியில் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

குறிப்பாகப் பரந்தனில் இருந்து செல்லும் பூங்காவனச் சந்தியை அண்மித்த இடத்தில் உள்ள மதகு உடைந்து நடு வீதியில் பாரியகுழி காணப்படுகின்றது. அத்துடன் செல்லையா கடைக்கும் வெளிக்கண்டல் பாலத்திற்கும் இடையிலுள்ள ஐந்தாம் கட்டைப் பாலமும் உடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. அதே போன்று இரண்டாம் கட்டைப் பகுதியில் உள்ள சிறிய பாலமும் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர். வாகனங்கள் பெரும் இடையூறுகளின் மத்தியிலேயே தமது பயணத்தைத் தொடர்கின்றன. மழைகாலங்களில் இந்த வீதியில் பயணிப்போர் செம்மண் நிறைந்த சேற்று நீரால் அசுத்தப்படுகின்றனர்.

இதன் காரணமாகப் பல நாள்கள் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீடு திரும்புவதையும் காண முடிந்தது. (க-6)




## திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதான வீதியின் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வீதியிலுள்ள குழிகள் கற்களால் நிரப்பப்பட்டு தார் ஊற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (க-500)

## தூய ஒளி பிரகாசிக்கட்டும்...



பொருத்தமான கௌரவிப்பு: வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் கௌரவிப்புப் பெற்ற மாணவர்கள்.

## முரசுமோட்டை சந்தையை மீள இயங்க வைக்க பொதுமக்களும் வியாபாரிகளும் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி முரசுமோட்டை பொதுச் சந்தையினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்களும் சிறு வியாபாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி இப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் கரைச்சிப் பிரதேச சபையின் உப பணிமனையின் கீழ் உள்ள முரசுமோட்டை பொதுச் சந்தையினை மீள இயக்குவதற்கு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் கடலுணவு வியாபாரிகளும் மரக்கீறி வியாபாரி ஒருவரும் பாடசாலை முன்பாகக் கூடி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்வியாபாரிகள் சந்தைப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒன்பது மாதங்களாகியும் இச்சந்தையினை இயங்கவைக்க எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் சந்தையினை அண்மித்துள்ள வியாபார நிலையங்களில் மரக்கறிகளை விற்பனை செய்வதனால் சந்தைப் பகுதியில் மரக்கறிகளை விற்க முடியாத நிலை உள்ளதாகவும் இதனால் தினமும் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகவும் மரக்கறி வியாபாரி தெரிவித்துள்ளார்.

(க-6)

## உழவுக்கான பணம் வழங்கப்படாததால் முல்லைத்தீவு விவசாயிகள் கலக்கம்

முல்லைத்தீவு,டிசெ.31

வாக்குறுதி வழங்கப்பட்டதன் பிரகாரம் கமநலசேவை நிலையத்தினால் உழவுக்கான பணம் வழங்கப்படாததால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

மீள்குடியமர்ந்த விவசாயிகள் காலபோக நெற்செய்கைக்கென வயல்களைப் பண்படுத்தும் போது இரண்டு ஏக்கருக்கான உழவுக் கூலியை வழங்குவதாகக் கமநல சேவை நிலையங்களால் உறுதி கூறப்பட்டது. ஆரம்பத்தில் விவசாயிகள் இதுபற்றிக் கேட்டபோது உழவு செய்து நெல்விதைத்த பின்னரே இந்தப் பணம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நெல் விதைத்துப் பல நாள்கள் கழிந்துவிட்ட நிலையில் இந்தப் பணத்தைப் பற்றிய தகவல் எதனையும் பெறமுடியாத நிலையில் விவசாயிகள் காணப்படுகின்றனர்.

கமநலச்சேவை நிலையங்கள் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் விவசாயிகள் தனியார் உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தித் தமது நிலங்களைப் பண்படுத்தினர். பலர் பணம் கிடைத்ததும் வழங்கலாம் என்ற நம்பிக்கையில் கடனடிப்படையிலேயே இந்த வேலைகளைச் செய்து முடித்தனர். ஆனால் பல நாள்கள் சென்றும் தமக்குரிய பணம் வராததால் உழவு இயந்திர உரிமையாளர்கள் விவசாயிகளை நெருக்கத் தொடங்கியுள்ளனர். அத்துடன் கமநலச் சேவை நிலையத்தால் உங்களுக்குப் பணம் கிடைக்கமாட்டாது. நீங்கள் ஏதாவது ஒழுங்குகளைச் செய்து எமது பணத்தைக் கொடுங்கள் என்றும் கூறுகின்றனர். இதனால் விவசாயிகள் செய்வதறியாது கலக்கம் அடைந்துள்ளனர்.

எல்லாவற்றையும் இழந்து மீள்குடியமர்ந்த நாம் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளோம். இந்தப் பணத்திற்கு நாம் என்ன செய்வதென்று புரியாது தவிக்கின்றோமெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-500)

## மூன்றாம் கட்ட உரமானிய இழுத்தடிப்பால் பூநகரி விவசாயிகள் பெரும் கவலையில்

முல்லைத்தீவு,டிசெ.31

பூநகரி கமநல சேவை நிலையத்தினர் மூன்றாம் கட்ட உரமானியத்தில் இழுத்தடிப்புச் செய்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தமது பயிர்களுக்கு மூன்றாம்கட்ட உரத்தையிடும் காலம் 10 நாள்கள் கழிந்துவிட்ட நிலையிலும் அதனை வழங்குவதற்குக் கமநல சேவை நிலையத்தினர் இழுத்தடிப்புச் செய்து வருவதால் அறுவடையில் பாதிப்பு ஏற்படுமென இவர்கள் அஞ்சுகின்றனர். கடந்த திங்கள்கிழமை உரம் வழங்குவதாகக் கூறியபோதிலும் அன்று வழங்கப்படாமல் தாம்திரும்பிச் சென்றதாக இவர்கள் கூறுகின்றனர்.

இதனால் ஆலங்கேணி, முட்கொம்பன், செட்டிகுறிச்சி, மட்டுவில் நாடு, கறுக்காய்த் தீவு, கொல்லகுறிச்சி அடங்கலாக ஏனைய பூநகரி கமக்கார அமைப்புக்களின் விவசாயிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

உரம் இடுவதில் ஏற்படும் தாமதத்தால் தாம் நெல் விளைச்சலில் பாதிப்புக்களைச் சந்திக்க நேரிடும் எனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போரினால் பாதிக்கபட்டுத் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகப் பாடுபட்டு வரும் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் இதனால் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். உரியவர்கள் விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே இவர்களின் கோரிக்கையாகும். (க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி தி.கீதாஞ்சலி அவர்களின் தந்தை

**தம்பையா கணேசன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்

பிரதேச செயலகம்,
நல்லூர். (சி/573791)

**நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.**

## ஜயவிரு ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 543
சீட்டிழுப்பு திகதி: 29.12.2010

வெற்றி எழுத்து: Z வெற்றி இலக்கங்கள்: 06 07 08 30

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 14,686,099.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 239 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 473 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 11785 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6746 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 170517 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 27292 |

**இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.7,905,520.00**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.14,904,319.20

# வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும்

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் அனுதாபம்

அம்பாறை, டிசெ.31

வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவம் வன்மையாகக் கண்டிக் கத்தக்கதாகும். அவரது இழப்பு தமிழ் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்

இவ்வாறு, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்த் தரும் காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான செல் லையா இராசையா விடுத்துள்ள அனு தாப அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாப அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''அமரர் மார்க்கண்டு சிவலிங்கம் மிகவும் நேர்மையான சமூகப்பற்று மிக்க பெருந்தகையாவர். இவரைப் போன்ற புத்தி ஜீவிகளின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

யாழ். குடாநாடு முழுவதும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகப் பறைசாற்றப்படும் இக்காலக் கட்டத் தில் இத்தகைய படுகொலைச் சம்ப வங்கள் இடம்பெறுவது அச்சத்தையும், கேள்விக்குறியையுமே ஏற்படுத்தி யுள்ளன.

முற்று முழுக்க இத்தகைய சம்பவங் களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

அதேவேளை இந்தச் செயல்களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டிய பொறுப் பும் அரசுக்கு உண்டு.

யாழ். குடாநாட்டில் தொடரும் இத்தகைய படுகொலைகள், வழிப் பறிகள், கொள்ளைகளுக்கு முற்றுப் புள்ளி வைக் கப்படவேண்டும்.

இதற்கு உரிய நடவடிக்கையை அரசு தாமதமின்றி எடுக்க வேண்டும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-30)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி கோயில் குருக்கள்
**சிவஸ்ரீ செ.வைரவநாதக் குருக்களின்** மாமியார்
**திருமதி அகிலாம்பிகை இரேவனராத்திரி** அவர்கள்
இறைபதம் அடைந்த செய்தியால் துய ருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விப்பதோடு அன்னாரின் ஆத்மா சிவாச்சியத்தில் கலந்து சாந்தி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

(108202)

**தர்மகர்த்தா சபை, உரும்பிராய் ஞானவைரவ சுவாமி கோயில்,**
**உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலையம்.**

## மரண அறிவித்தல்

### V.K.T. தம்பிமுத்து



V.K.T. தம்பிமுத்து அவர்களின் இறுதிக்கிரியைகள் இல. 02, இரஞ்சன் வீதி, புகையிரதநிலைய வீதி, வெள் ளவத்தை, கொழும்பு - 6இல் உள்ள த.சச்சிதா னந்தனின் இல்லத்தில் 02.01.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியை கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: த.அருளானந்தன் (மகன்),**
**0112594677**

சி/573793

## உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம் (வ-து)

## கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் புறாப்பொறுக்கி ஆலடி என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஓடுபாதைக்கு கல் பதித்து, தார் ஊற்றி வீதி அமைப்பதற்காகத் தகுதிவாய்ந்த பதிவுசெய் யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விப்பத் திரங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி வீதியை சுண்ணாம்புக் கற்களால் அமைப் பதற்கும் (புத்தூர் கல்) கருங்கல்லால் அமைப்பதற்கும் தனித்தனி கேள்வி கோரப்படுகின்றது.

தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர் கேள்விப்படிவங்களை சங்கத்தில் பெற்று தமது கேள்விகளை குறிப்பிட்டு 07.01.2011ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமை யாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கேள்விப்பத்திரம் தொடர்பாக இயக்குநர் சபையின் தீர்மானம் இறுதியானது.

**பொதுமுகாமையாளர்,**
**30.12.2010**

சி/573792

## சிறுவனைப் பாம்பு தீண்டியது

தென்மராட்சி, டிசெ.31

படுக்கையில் நித்திரையில் இருந்த சிறு வனைப் பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் வட மராட்சி கிழக்கு வத்திராயாயனில் இடம்பெற்றது.

அண்மையில் மீளக் குடியமர்ந்த இந்தக் குடும்பம் தங்கியிருந்த தற்காலிகக் கொட்டகையி னுள் சென்ற பாம்பு சிறுவ னைக் கடித் ததா கத் தெரிவிக் கப்பட்டது.

இதே இடத் தைச் சேர்ந்த மோகனதாஸ் கஜானன் (வயது -5) என்னும் சிறு வனே பாம்பினால் கடியுண்ட நிலை யில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகி ச்சை பெற்று வரு கின்றார் எனத் தெரிவிக்கப்பட் டது. (207)


# FREE
## COMPUTER SCHOLARSHIP

பரீட்சை நாள்
JANUARY 23rd Sunday

கணினிப் பாடநெறிகள் அனைத்திற்கும்.......
75% வரை கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு

இலவச அனுமதிகளை எமது பயிற்சி மையங்களிலும் வெளிப்போகு நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

- Free கொம்பியூட்டர் ஸ்கொலர்ஷிப் இற்கு கட்டணம் எதுவும் இல்லை.
- பொதுஅறிவு பொது உளச்சார்பு வினாக்களைக் கொண்ட பரீட்சை.
- பரீட்சை ஒரு மணிநேரம் கொண்டது.
- 15 வயது நிரம்பிய எவரும் பங்குபற்றலாம்.
- இப் பரீட்சைக்கு உச்ச வயதெல்லை இல்லை.
- பரீட்சைப் பெறுபேறுகள் மறுநாள் வழங்கப்படும்.

10ஆவது ஆண்டில்



TECHNO WORLD
Studies (Pvt) Ltd

யாழ் குடா நாட்டில்...

344, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 021 4921124
246/25, மாலி சந்தி நெல்லியடி-கரவெட்டி 021 4925145
397, 4ம்கட்டை ஆனைக்கோட்டை மானிப்பாய் 021 4922400
கென்ஸ்மன் வீதி, நீதிமன்று முன் சாவகச்சேரி. 021 4925114
64, பலாலி வீதி திருநெல்வேலி. 021 4922401
ஐயா[illegible] மீசாலை. 021 4925[illegible]

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்


## ஜாதிக சம்பத ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 86
திகதி - 29.12.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: L அதிர்ஷ்ட இலக்கம்: 05 வெற்றி இலக்கம்: 1 8 6 8 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 05 1 8 6 8 6 | ரூ. 6,106,924.00 | - |
| 1 பரிசு | 05 1 8 6 8 6 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 1 8 6 8 6 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 8 6 8 6 | ரூ. 10,000.00 | 29 |
| 4 பரிசு | 6 8 6 | ரூ. 1,000.00 | 279 |
| 5 பரிசு | 8 6 | ரூ. 50.00 | 2748 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 26597 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 1 8 6 8 | ரூ. 1,000.00 | 31 |
| 8 பரிசு | 1 8 6 | ரூ. 100.00 | 278 |
| 9 பரிசு | 1 8 | ரூ. 50.00 | 2765 |
| 10 பரிசு | L | ரூ. 20.00 | 10970 |
| 11 பரிசு | L 05 | ரூ. 100.00 | 1184 |

**இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,073,190.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.6,529,350.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியைக் காப்பாற்ற தொழிற் சங்கங்கள் கூட்டு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.31

நாடெங்குமுள்ள 60லட்சத்துக்கும் மேற்பட்ட தனியார் துறை ஊழியர்கள் இதுவரை பெற்றுவந்த ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம் ஆகியவற்றை நீக்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் பெரும் அபாயம் உருவாகியுள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளைக் கண்டுபிடித்து காப்பாற்றிக் கொள்ள தொழிற் சங்கங்கள் கூட்டு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளன என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டு நடவடிக்கைகளின் மூலம் முன்னெடுக்க வேண்டிய போராட்டங்களைப் பற்றியும் அதற்காக சகல முன்னணித் தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதற்குப் பேச்சுகளை ஜனவரி மாதம் கொழும்பில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய நாட்டில் இயங்கி வரும் 366 தொழிற் சங்கங்களை ஒன்றிணைத்து தேசிய தொழிற் சங்கங்களின் மத்திய நிலையமொன்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கட்டாயமாக வழங்கப்பட வேண்டுமெனவும் ஊழியர் சேமநல நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் எவ்வித குறைப்பையும் செய்யாமல் ஊழியர்களுக்கு 4 வீத அறவீடுகளை மேற்கொண்டு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த அரசு திட்டமொன்றை மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அத்திட்டம் எவ்விதத்திலும் வெற்றியளிக்கப் போவதில்லையெனவும் தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-5)

# வரலாற்றில் இல்லாதவாறு இறப்பருக்கு உச்ச விலை

கொழும்பு, டிசெ.31

இம்முறை நடந்த ஏல விற்பனையில் இறப்பருக்கு வரலாற்றில் முன்னெப்போதும் கிடைக்காத உச்சவிலை கிடைத்துள்ளதாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர்.பி. பிரேமதாச தெரிவித்தார்.

இதற்கமைய முதலாம்தர இறப்பரின்விலை ஒருகிலோ 525 ரூபாவையும், கிரேப் ரக இறப்பர் ஒருகிலோ 598 ரூபாவையும் எட்டியுள்ளது. அவ்வாறே குறைந்த தர இறப்பரின் விலையும் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

இந்த முறை ஏல விற்பனைக்கு கிரேப் இறப்பர் 156,000 கிலோவும் ஷீட் இறப்பர் 18,000 கிலோவும் சமர்ப்பிக்கப்பட்டன.

வெளிநாடுகளில் விசேடமாக இந்தியாவிலும் சீனாவிலும் இலங்கை இறப்பருக்கு ஏற்பட்டுள்ள தேவைகள் அதிகரிப்பின் காரணமாகவே இந்த உச்சகட்ட விலைகள் கிடைத்துள்ளன.

இறப்பரின் விலை உயர்வுக்கு உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதும் இலங்கையில் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததும் பிரதான காரணங்களாகும் என்று இறப்பர் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.பி.பிரேமதாச மேலும் கூறினார். (ம-5)

## பன்றிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த 5 லட்சம் தடுப்பூசிகள் தேவை

கொழும்பு, டிசெ.31

நாட்டில் மிக வேகமாகப் பரவி வரும் இன்புளுவென்சா ஏ எச் வன் என்-வன் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவற்கான 5 லட்சம் தடுப்பூசிகளை சுகாதார அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனத்திடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் சுகாதார அமைச்சிற்கு மிகக் குறைந்த விலையில் இந்தத் தடுப்பூசிகளை வழங்க உறுதியளித்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து கிடைக்கப் பெறும் தடுப்பூசிகளை வழங்குவதற்குத் திடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதோடு அத்திட்டத்தின் முதற் கட்டமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்புளுவென்சா ஏ எச் வன் என்வன் தொற்று நோயினால் இதுவரை 23 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன், 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (சி)

# இளையோரைத் தாக்கும் பன்றிக் காய்ச்சல்

கொழும்பு, டிசெ.31

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின்படி பன்றிக் காய்ச்சல் நோய் 20 தொடக்கம் 40 வயதானவர்களை தீவிரமாகப் பீடிப்பதாகத் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

இந்த நோயால் வாராந்தம் 65 தொடக்கம் 70 பேர்வரை பீடிக்கப்படுவதாகவும் அதில் பெருபாலானோர் இளைஞர்கள் எனவும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் பீரிஸ் சுகாதாரக் கல்வியமைச்சின் பணிமனையில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

20-40 வயுதானவர்களும் கர்ப்பிணிப் பெண்களும் இந்த நோயால் இலகுவாகப் பீடிக்கப்படுகின்றனர்.இதுவரை இந்த நோயால் பீடிக்கப்பட்ட 22 பேர் மரணமாகியுள்ளனர். அவர்களுள் பெரும் பாலானவர்கள் இளைஞர்கள் மற்றும் கர்ப்பிணிகள்.

இதற்கு முன் சிறு குழந்தைகளும் வயதானவர்களும் மட்டுமே இந்த நோயால் பெரிதும் தாக்கப்பட்டவர்கள். எனினும் தற்போது நிலைமை மாறி 20-40 வயதானவர்களையும் கர்ப்பிணிகளையும் இந்த நோய் பெரிதும் தாக்குகிறது - என்று மேலும் தெரிவித்தார். (ம-5)

# புதையல் தோண்ட முயன்ற 11 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ.31

கண்டி - தெல்தெனிய - உணகல பிரதேசத்தில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த 11 பேர் அடங்கிய குழு ஒன்றை தெல்தெனிய பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

உணகல பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதி ஒன்றில் 50 மீற்றர் நீளமுடைய கற்குகை ஒன்றினுள் சென்று குறித்த 11 பேரும் புதையல்தோண்டியவேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் பயணித்த வான் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தப்பியோடியுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ள தெல்தெனிய பொலிஸார், கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார். (சி-5)

# வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கொலையுடன் தொடர்புடையோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் கோரிக்கை

கொழும்பு, டிசெ.31

யாழ். உரும்பிராய் மேற்குப் பகுதியைச் சேர்ந்த வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ரான்லின் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் படுகொலைச் சம்பவத்திற்குத் தமது சங்கம் கடும்கண்டனம் வெளியிடுவதாகவும் அவர் கூறியுள்ளார். யாழ். குடாநாட்டில் இவ்வாறு தொடர்ந்து இடம்பெறும் கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்கு அரசு தாமே பொறுப்புக் கூறவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வலிகாமம்பிரதிக் கல்விப் பணிப்பாளரது வீட்டிற்குக் கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நுழைந்த ஆயுததாரி ஒருவர் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துவிட்டு வீட்டிலுள்ளவர்களை ஆயுத முனையில் மிரட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் அச்சம், பீதி நிலை உருவாகியுள்ளது. அத் தோடு, இச்சம்பவத்திற்குப் பல அமைப்புகள் தொடர்ந்து கண்ட னங்களை வெளியிட்ட வண் ணம்உள்ளன. (சி)

# நட்டமடையாத நிறுவனமாக மின்சார சபை மாற்றப்படும்

### பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

2015ஆம் ஆண்டளவில் இலங்கை மின்சார சபையை நட்டமடையாத அரச நிறுவனமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

புதிய மின்கட்டணத் திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும். நிவாரண மின் அலகு 90இலிருந்து 120 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருடமொன்றுக்கு 400 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படும். எனினும், அந்த நட்டத்தை ஈடுசெய்வதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சிலர் மின் கட்டணம் தொடர்பில் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். அது தவறாகும். மின்சாரப் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்க கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே தீர்மானித்தோம். மக்களின் கருத்துக்களை அறிவதற்குக் கடந்த நவம்பர் 24ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தோம்.

அதன்போது சிறிய, நடுத்தர முயற்சியாளர்களும், விடுதி உரிமையாளர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அது குறித்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தேன். அவர் அப்போது மின் கட்டணம் தொடர்பான அரசின் கொள்கையை விளங்கப்படுத்தினார். அக்கொள்கையுடன் ஒப்பிட்டு நாங்களும் ஒரு கொள்கையை வகுத்து இப் புதிய மின்கட்டணத் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்.

இந்தப் புதிய திட்டத்தில் அரச நிறுவனங்கள், அரச பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றுக்கான மின் கட்டணத்துக்கு நூற்றுக்கு 25 சதவீத குறைப்பு வழங்கப்படும். அத்துடன், ஏனைய மின்பாவனையாளர்களின் 120இற்கும் மேலான ஒவ்வொரு மின் அலகுக்கும் நூற்றுக்கு 8 சதவீத மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

இந்தப் புதிய திட்டத்தில் எதுவும் குறைபாடுகள் அல்லது மேலும் சேர்க்கவேண்டிய விடயங்கள் காணப்படும் பட்சத்தில் எதிர்வரும் ஆறு மாதத்துக்கு ஒரு தடவை மாற்றம் செய்யப்படும்.

இப்படி அவர் கூறினார். (சி)

## வருடாந்தம் 400 கிலோ போதை மருந்து இலங்கைக்கு

கொழும்பு,டிசெ.31

வருடாந்தம் சட்ட விரோதமாக சுமார் 400 கிலோ எடையுள்ள போதை மருந்துகள் இலங்கைக்குத் தருவிக்கப்படுகின்றன.

அதில் சுமார் 134 கிலோ இவ்வருடம் கைப்பற்றப்பட்டுள்ளதாக அண்மையில் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் 425 பொலிஸ்ப் பொறுப்பதிகாரிகளும் 26 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் 8 பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் கலந்து கொண்டனர்.

அடுத்த வருடம் இந்தப் போதை மருந்துகளில் குறைந்தபட்சம் 300 கிலோவைக் கைப்பற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இவ்விடயத்தில் சகல பொலிஸாரும் விழிப்புடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ம-5)

# எஸ்.எம்.எஸ். மூலம் இனி பொலிஸில் முறையிடலாம்

கொழும்பு, டிசெ.31

பொலிஸுக்கு முறைப்பாடுகளைச் செய்ய விரும்புபவர்கள் இனிமேல் அவற்றை தொலைபேசி குறுஞ்செய்திகள் (எஸ்.எம்.எஸ்) மூலம் தெரிவிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த சேவையில் குறுஞ்செய்திகள் மூலம் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் முதல் முறைப்பாடென நீதிமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட முடியும்.

இந்தக் குறுஞ்செய்தியை அனுப்புவதற்கான பொலிஸ் தொலைபேசி இலக்கங்கள் பின்பு அறிவிக்கப்படுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யோகாசன தியான வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம் சிவானந்த மகரிஷி யோக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த 25 திகதி தொடக்கம் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் யோகதியான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் கலந்து பயிற்சி பெற விரும்புவோர் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு வருகை தந்து பயிற்சிகளில் ஈடுபடலாம் என யோக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். இப் பயிற்சியில் ஆண், பெண் வேறுபாடின்றி எவரும் கலந்துகொள்ளலாம் எனவும் நோயாளர்கள் இருப்பின் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு நோய்கள் குணமாக்கப்படுமெனவும் மேற்படி நிலையத்தினர் மேலும் அறிவித்துள்ளனர். (ஒ-319)

## யாழ்.கல்வி வலய முறைசாராப் பிரிவு போதனாசிரியருக்கு விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் முறைசாரக் கல்விப் பிரிவு சமூக கற்கை நிலையத்தில் 2011ஆம் ஆண்டு புதிதாகஆரம்பிக்கப்படவுள்ள ஆண், பெண் இருபாலருக்குமான தையல் பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதி உடையோர் உரிய அனுபவம், தகுதி ஆகியவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 'பணிப்பாளர், கலாக்ஷேத்திரா கல்வி நுண்கலை வளாகம், மின்சார நிலைய வீதி,ஊரெழு மேற்கு, சுன்னாகம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம)

## சிறுவர்முகாம்

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் உடுவில் கிழக்குஅருள் வாசா ச.ச. நிலைய விநாயகர் சிறுவர்கழகத்தின் சிறுவர்முகாம்இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-319)

## தவறி விழுந்து இளைஞன் காயம்

மாமரத்திலிருந்து தவறி முட்கம்பி வேலி மீது விழுந்து இளைஞர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் அண்மையில் நுணாவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த என்.டிலக்ஸன் (வயது16) என்பவர் காயங்களுக்கு ஆளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (201-207)

## தறப்பாள் வழங்கல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குஉட்பட்ட 100 பயனாளிகளுக்குத் அகதிகள்புனர்வாழ்வு நிறுவனத்தால் தறப்பாள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மீள் குடியமர்வு செய்யப்பட்ட மற்றும் வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கே இந்தத் தறப்பாள் கள் வழங்கப்பட்டுள்ளன. (204-313)


## வீடு வாடகைக்கு

மூன்று அறைகள், விசாலமான வரவேற்பறை மற்றும் 25-30 வாகனங்கள் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குண்டு (அலுவலகப் பாவனைக்கு உகந்தது)

283/2, பலாலி வீதி, (கெற்றப்போல் சந்தி)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P: 0777769260


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### கந்தையா இராஜேந்திரம்



மண்ணில் 22★10★1942

விண்ணில் 01★12★2010

பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அன்பால் அரவணைத்து ஆசைமொழியூட்டி
கீர்த்தியுடன் வாழவைத்த அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு முப்பத்தொரு நாள்கள்
சென்றாலும் அகலவில்லை உங்கள் நினைவுகள்

(01.12.2010) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (31.12.2010) வெள்ளிக்கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## சத்யசாயி சாகரத்தில் முதலாம் ஆண்டு நினைவலைகள்

### தர்மலிங்கம் ரவிராஜ்

(அரசடிவீதி,கந்தர்மடம்)



கோதில்லா ஆத்மாவைக்
குற்றமின்றி உணர்ந்திங்கு
சிரித்து நின்று சிறப்பிருந்தீர்!
விஷ்ணுத்வம் வாழ்வென்ற
விண்ணகப் பயணமதில்
விரைந்ததே ஓராண்டு!
உயிர் அழியாதென்று
உத்தம ஞானிகள்
உலகிற்கு உரைத்ததால்
உறைகின்றோம் உம் நிழலில்
சத்யசாயி சாகரத்தில்
சந்ததமும் சஞ்சரித்து
என்றென்றும் எமைக்காக்க
எம்மிடையே வந்திடுவீர்!
-ஜெய் சாயிராம்-

மண்ணில் : 27- 01- 1958
விண்ணில் : 11- 01- 2010
திதி : 31.12.2010

கண்டி வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவில் ஆண்டு ஒன்று

### அமரர் செல்லத்துரை விநாயகமூர்த்தி

(அல்லைப்பிட்டி)



அன்னை மடியில் 15 . 12 . 1935

ஆண்டவன் அடியில் 19 . 01 . 2010

திதி: அபரபக்க ஏகாதசி

பன்னிரண்டு மாதங்கள் ஓடி மறைந்தாலும்
உங்கள் முகம் இன்னும் மறையவில்லை
ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சோடிருக்கும்.

19.01.2010 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின்ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரம் கொக்குளாக்கிபதி முத்துமாரி அம்மன் (மூன்று முடிஅம்மன்) ஆலயத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மிக அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாகவும்ஏற்றுக் கொள்ளவும்)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி,மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

வட்டாரம் -3, அல்லைப்பிட்டி
யாழ்ப்பாணம்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.



STUDY& WORK IN
LONDON | NEW ZEALAND
USA CANADA | IRELAND | SINGAPORE | FRANCE
SWEDEN | MALAYSIA | INDIA | NORWAY | ITALY



1. மேற்கூறிய நாடுகளில் கல்வியைத் தொடர Visa க்கள் உறுதிப்படுத்தப்படும்.
2. IELTS தகைமை இல்லாமல் சில பாடநெறிகளுக்கு Visa பெற்றுத்தரப்படும். (No Need IELTS for Level 6 & 7 program)
3. Courses:- Business Management, Computer Science, Engineering, Travel & Tourism, Beauty Culture and over 200 Courses
4. Expert free guidance for sponsorship
5. எதிர்பார்க்கப்படும் குறைந்த தகைமை (G.C.E. O/L)
6. Part time job guaranteed

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Hotline: Hasan - 0773507663
E-mail: hasan_abdul10@yahoo.com
Web: www.milimba.com






சாதாரணதர மாணவர்களுக்கான புதிய குறுங்காலப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Uthayan
IT ISLAND GATEWAY CENTRE
347, Kasthuriyar Road, Jaffna 021 567 6555 / 021 222 7967
Luxsmee Theatre Lane, Nelliyady 021 226 2395
New Market Building, Chavakachcheri 021 227 0323


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கான 2 மாடிக்கட்டட வேலைகள் பெப்ரவரி ஆரம்பம்

## கல்லூரியின் உதவிப்பணிப்பாளர் தகவல்

வண்ணை, டிசெ.31

யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரிக்கான இரண்டு மாடிக் கட்டட வேலைகள் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

இதற்கான கட்டடம் மற்றும் உபகரணங்களுக்காக ஜெய்கா நிறுவனம் 25 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எனவே ஆறுமாத காலத்துக்குள் யாழ்ப்பாணம், 2 ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள கல்லூரிக்குச் சொந்தமான காணியில் மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு கட்டடவேலைகள் பூர்த்தியடைந்து விடுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை யாழ். அரச அதிபர், ஜெய்கா நிறுவனம் மற்றும் தேசிய கடற்றொழில் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி இயக்குநர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பன வழங்கியுள்ளன.

1973 ஆம் ஆண்டு கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியாக அந்தக் காலத்தில் கடற்றொழில் அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஷவால் யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்கு வீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி கல்லூரிக் கட்டடம் 1983-1990 காலப் பகுதியில் முற்றாகச் சேதமடைந்ததை அடுத்து சில வருடங்கள் இயங்கவில்லை.

அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு யாழ்.பாங்ஷால் வீதியில் தனியார் வீடொன்றில் யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி என்னும் பெயருடன் இயங்கி இதுவரை 3ஆயிரம் பயிலுநர்களுக்கு வெளிக்களப் பயிற்சிகளையும் 400 சான்றிதழ் பயிலுநர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கியுள்ளது என உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அந்தக் காலத்தில் பயிற்சியாளராகக் கடமையேற்று படிப்படியாக அதிபர், உதவிப் பணிப்பாளராக உயர்ந்துள்ள செபஸ்தியாம்பிள்ளை கல்லூரியின் சொந்தக் காணியில் இரண்டு மாடிக் கட்டடத்தை அமைக்க உறுதுணையாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கல்லூரியில் தொடர்ந்தும் டிப்ளோமா, டெக் அலுவலர்களுக்கான பயிற்சிகளும், நீச்சல் மற்றும் சுழியோடல் பயிற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (201-160)

## வருமுன் காப்போம்...



சேவை: டெங்கு ஒழிப்பை முன்னிட்டு காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா, காங்கேசன்துறை மாவட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஹரிச்சந்திர பண்டார, பொலிஸ் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.எச்.ரஞ்சித் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இளவாலை கன்னியர்மடம் மகளிர் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம், விழிப்புணர்வுக் கருத்தரங்கு என்பவற்றை நடத்தினர்.

# புத்தூர் - சுன்னாகம் வீதியை கவனிப்பார் யாருமில்லை

அச்சுவேலி, டிசெ.31

யாழ்.குடாநாட்டில் வீதிகள் பலதும் அகலமாக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படுகின்றன. ஆனால் புத்தூர் - சுன்னாகம் வீதியின் அவல நிலை தொடர்பாக எவருமே கண்டுகொள்ளவில்லை என்று வீதியால் பயணிப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம் - புத்தூர் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் பெரிய குழிகளுடன் காணப்படுகின்றது.

மழைகாலத்தில் வீதியில் காணப்படும் பெரிய குழிகள் செம்புலப் பெயர் நீர்க் கேணிகளாக காணப்படுவதால் பயணிகளும் வாகன ஓட்டுநர்களும் பெரியளவில் பாதிப்புக்குள்ளாவதோடு செம்புலப் பெயர் நீர் அபிஷேகத்துக்கு ஆளாகி பயணத்தை இடைநிறுத்தி வீடுதிரும்ப வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

சுன்னாகம் - புத்தூர் வீதி கணிசமான அளவு வாகனப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளின் பயன்பாட்டிற்கும் உரியது. இந்த வீதி மேடுபள்ளம் நிறைந்த துள்ளல் வீதியாகக் காணப்படுகிறது.

வீதியில் தொடர்ச்சியான குண்டும் குழிகளும் நிரம்பி இயல்புநிலையில் பயணம் செய்யமுடியாமல் உள்ளது.

இதனால் வேறு வழிகளைப் பயன்படுத்தியே சுன்னாகம் செல்லவேண்டிய நிலை உள்ளதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டு வீதிகள் எல்லாம் அகலமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படும்போது சுன்னாகம் - புத்தூர் வீதியின் பக்கம் அதிகாரிகள் பார்வை செல்லாமல் விட்டது ஏன் என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-11)

# காரைநகர் மறைஞான சம்பந்தர் வித்தி. ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகிறது

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

காரைநகர், டிசெ.31

காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம் ஜனவரி முதலாம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை கடந்த இருபது வருடங்களாக இயங்காமல் இருந்த இந்தப் பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு இப்பகுதி பெற்றோர்கள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையை அடுத்து இப்பாடசாலை ஜனவரி முதலாம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த வருட இறுதியில் தோப்புக்காடு பிரதேசத்தில் பொதுமக்களை மீளக்குடியமர கடற்படையினர் அனுமதி வழங்கியதை அடுத்து இப்பிரதேசத்தில் நூற்றுக்குமேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்ததுடன் இங்குள்ள அனுபவத்திற்கு மேற்பட்ட மாண்வர்கள் நீண்ட தூரம் சென்றே தமது கல்விச் செயற்பாடுகளை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (201-250)

### யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டைப் பகுதியில் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக கூறப்படும் ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அயலவர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே தாம் சடலத்தை மீட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-319-14)

# பௌத்த மத அறங்களைப் போதிக்க மானிப்பாயில் அறப்பாடசாலை

பௌத்த மத அறங்களைப் போதிக்கும் பாடசாலை மானிப்பாயில் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழ் பௌத்த சங்கத்தின் இணைப்பாளர் அருள் நேசரத்தினம் ரவிக்குமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் - பௌத்த சங்கத்தின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் உலகத்துக்குப் பொதுவான அறக் கருத்துக்களைப் போதிக்கின்ற பௌத்த மதத்தின் தத்துவங்களை அனைவரும் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பாடசாலையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்பாலும் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் இந்தப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் வைபவம் இடம்பெறவுள்ளது. (ஐ-9)

# சமுதாய சுகாதாரக்கழகம் சாவகச்சேரியில் ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.31

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கான சமுதாய சுகாதாரக் கழகம் கடந்த செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்தியக் கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

பிரதி மாதத்தின் கடைசி செவ்வாய்க்கிழமைகளில் கூட்டம் கூடி சமுதாயத்தில் காணப்படும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-207)

# குடியிருப்புக்குள் கடல்நீர் புகுந்தது கெற்பேலி மக்களுக்குப் பாதிப்பு

தென்மராட்சி, டிசெ.31

கெற்பேலி பகுதி குடியிருப்புக்களுக்குள் கடல் நீர் புகுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதி கடற்கரையில் இடம்பெற்று வரும் மண் அகழ்வு காரணமாக, அண்மைய மழையையடுத்து கடல் நீர் உட்புகுந்து குடியிருப்புக்களுக்குள் மட்டுமல்ல விவசாய நிலங்களையும் பாதிப்புக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலமாக கடற்கரை மட்டுமல்ல குடியிருப்புகள் இல்லாத காணிகள், தென்னந்தோட்டங்கள் போன்றவற்றிலும் சட்ட விரோதமாக மணல் அகழ்ந்து வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (204-207)




## கொண்டாட்டம்...



மகிழ்வு: பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் ஒளிவிழாவின்போது நத்தார் தாத்தா மாணவர்களை மகிழ்வூட்டுகிறார்.

# வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்து துன்பமடையும் மக்களை மீட்கவேண்டும்

## மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் உரை

சண்டிலிப்பாய், டிசெ.31

அபிவிருத்திக்காகவும், உரிமைக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தால் எஞ்சியது அழிவுகள் மட்டும்தான். இந்தத் துர்ப்பாக்கிய நிலை எமக்குத் தேவைதானா? ஒருவகையில் இந்த நிலைக்கு நானும் பொறுப்புக் கூறவேண்டும். எனவே இந் நிலையை நன்கு உணர்ந்து வட, கிழக்கை அபிவிருத்தி செய்ய வேண்டும். எம்மக்களை துன்பங்களில் இருந்து மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தற்போது அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றேன். இவ்வாறு மீள்குடியேற்றப்பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து வலி.தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, முன்னுரிமைஅடிப்படையில்தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதியமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

அரசை எதிர்த்து நின்று எதையும் சாதிக்க முடியாது. அரசிற்கு எம்மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். நான் தற்போது அரசுடன் இணைந்துள்ளதன் மூலம் போரினால் சீர்குலைந்துள்ள கிழக்கு மாகாணம் பிரமிக்கத் தக்க வகையில் அபிவிருத்தி அடைந்துள்ளது. அங்கு மீள்குடியமர்ந்த மக்களும் மகிழ்ச்சியுடன் உள்ளனர். இந்த நிலையை வடக்கு மாகாணத்திலும் ஏற்படுத்த முன்வந்துள்ளேன்.

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த போரினால் சிதைந்து உருமாறியிருக்கும் வடமாகாணத்தை உடனடியாக அபிவிருத்திசெய்ய முடியாது. நாங்கள் அனுபவித்து வந்த துன்பதுயரங்களை வருங்கால சந்ததியினரும் அனுபவிக்கவிடக்கூடாது. எனவே அதற்கேற்ற வகையில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்படுவோமேயானால் மிக விரைவில் எமது பிரதேசத்தை பொருளாதாரத்தில் மட்டுமல்ல கல்வித்துறை மற்றும் பலதுறைகளிலும் முன்னேற்றமுடியும். (ற-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
மாற்றுமத நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். சொந்த பந்தங்கள் வீட்டிற்கு வரலாம். கடன் பிரச்சினை ஒன்றை மாற்றி அமைப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காணலாம். தந்திரமாகச் செயற்பட்டு சில வேலைகளைச் சுலபமாக முடிப்பீர்கள். தேக பராமரிப்பில் நாட்டம் செல்லும்.

**இடபம்:**
அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. பிள்ளைகள் வழியில் சிரமங்களுக்கு ஆள்படலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். பயணங்களால் அலுப்பு, சலிப்பு உண்டாகும். சில பொருள்களை எங்காவது மறதியாக வைத்து விட்டுத் தேடலாம். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம்

**மிதுனம்:**
வெளியூர்களில் இருந்து வியக்க வைக்கும் செய்திகளைக் கேட்கலாம். குடும்ப உறுப்பினர் கேட்ட பொருள் ஒன்றை, பல இடங்களுக்கு அலைந்து திரிந்து வாங்கலாம். குறுகிய தூரப் பயணங்கள் செல்லலாம். தாயாருடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். முன்னர் அறிமுகமான ஒருவர் மூலம் இப்போது காரியம் சாதிப்பீர்கள். வேலைப் பளு அதிகரிக்கும்.

**கடகம்:**
வீண் வம்பு, விவகாரங்கள் முடிவுக்கு வரும். வெளி வட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். அயலாரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் கேட்ட உதவிகள் கிடைக்கலாம். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்பாராத பணவரவு கிடைக்கலாம்.

**சிங்கம்:**
வரவுகள் வந்தாலும், அதற்கு முன்னரே செலவுகள் காத்திருக்கும் நாள். நீண்ட நாளாகத் தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். பிரியமான உறவினர் ஒருவரைத் திடீரெனச் சந்திக்காம். தாய்வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

**கன்னி:**
திட்டமிட்ட காரியங்கள் மட்டுமின்றி, திட்டமிடாத வேலைகளும் நடக்கும் நாள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். தந்தை வழியில் மனக்கசப்புகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். மற்றவர்களைப் பார்த்துச் சில விடயங்களில் ஆதங்கப்படுவீர்கள்.

**துலாம்:**
புதியவர்கள் சிலர் உங்களைத் தேடி வரலாம். உடற்சோர்வு, அசதியால் உற்சாகம் குறையலாம். மற்றவர்களை நம்பி எந்த காரியங்களையும் ஒப்படைக்க வேண்டாம். சிறு மருத்துவச் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. வீட்டில் உள்ள சிலருடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம்

**விருச்சிகம்:**
ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்று கைக்குக் கிடைக்கும். நண்பர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**தனுசு:**
தொழில் விடயங்களில் நெருக்கடிகள் இருந்தாலும் ஆதாயம் உண்டு. எதிர்பாராத செலவுகள் இருந்தாலும் அதைச் சமாளிக்கும் வகையில் புதிய பணவரவுகள் வந்து சேரும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காணலாம். மற்றவர்களுக்காகச் சில விடயங்களில் பிணை கொடுப்பீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனைகள் சொல்லலாம்.

**மகரம்:**
சிலர் உங்களின் யோசனைக்கு எதிர் கருத்துக்கள் சொல்லி எரிச்சல் உண்டாக்கலாம். சொந்த விடயம் ஒன்றை உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரிடம் சொல்வீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.

**கும்பம்:**
தொடங்கிய வேலை ஒன்றை இடையில் விட்டு விடலாம். உடல் ஆரோக்கியக் குறைவுகளால் உற்சாகம் குறையலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் செய்த தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். சபலம், பேராசையால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம்.

**மீனம்:** குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று திடீரென நடக்கலாம். முக்கியமான நண்பர் ஒருவரை அவரின் வீட்டிற்கே சென்று சந்திக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம்.

# இலங்கைப் பல்கலைகளில் அடுத்த ஆண்டு வெளிநாட்டு மாணவருக்கு புலமைப்பரிசில்

கொழும்பு,டிசெ.31

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அடுத்த வருடம் 150 வெளிநாட்டு மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த மாணவர்களைப் புலமைப்பரிசில்கள் மூலமாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கான அனுமதியைக் கோரி அமைச்சரவைக்குப் புதன்கிழமை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழங்களில் நிர்வாகம், சட்டம், பொறியியல், கலை, மருத்துவம், பல் மருத்துவம், கால்நடை வைத்தியம் ஆகிய துறைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவரெனவும் அவர்களுக்கு '' ஜனாதிபதியின் புலமைப்பரிசில்'' என்ற பெயரில் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையுடன் நெருக்கமான நட்பைப் பேணி வரும் நாடுகளுக்கு இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினர். (ம-5)

## அருளட்டும் சுதந்திரத்தை.....



ஆராதனை: வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை விரதத்தில் இலட்சார்ச்சனை பூர்த்தியின் போது மகா கணபதிக்கு விசேட அர்ச்சனையைக் குருமார் நிகழ்த்துகின்றனர். (201)

## பொம்மையும் உண்மையும்

''எப்படி வேண்டுமானாலும் வாழலாம்'' என்று வாழ்வது விலங்கு. ''இப்படித்தான் வாழ வேண்டும்'' என்ற நெறிமுறை உடையவனே மனிதன்.

இத்தனை பெரிய மனித சமூகத்தின் இயக்கத்தை ஒவ்வொரு தனி மனிதனும் பாதிக்கிறான். ஒவ்வொரு தனி மனிதனின் ஒவ்வொரு செயலாலும் சமுதாயம் பாதிக்கப் படுகின்றது.

ஐம்பது பேர் பயணம் செய்யும் ஒரு ரயில் பெட்டியில் குளிரூட்டப்பட்ட அறையில் ஒருவர் புகைப்பிடித்தால் என்னவாகும்? எல்லோர் மூச்சிலும் அந்தப் புகையிலை நொடியில் புகுந்துவிடும். புகையையே பிடிக்காத- புகைத்தால் வாந்தி வருகின்ற பலர் உண்டு. ஆனால் அவர்கள் விருப்பம் இல்லாமலேயே நிகோடின் என்ற நச்சு அவர்களுக்குள் சேர்ந்துவிடும். ஒருவன் செய்யும் தவறால் அத்தனை பேருக்கும் கெடுதல் ஏற்படும்.

கவிழப்போகிற ரயிலை, சாகப் போகிற பலநூறு பேரை ஒருவரே காப்பாற்றியதும் உண்டு. அதாவது தன் சட்டையைக் கழற்றி தண்டவாளத்தில் நின்று அசைத்துக் காப்பாற்றிய வீர இளைஞன் உண்டு. நடுக் கடலில் படகில் விழுந்த துவாரத்தை அடைக்கத் தன் ஒற்றை விரலை உள்ளே விட்டு விரல் துண்டான வீர இளைஞனும் உண்டு.

தன் உழைப்பால் தானும் வளர்ந்து தன் குடும்பம், உறவு, மக்கள், நண்பர்கள் பலரையும் உயர்த்திப் பலருக்கும் பயன்பட்ட தலைவர்களும் உண்டு.

பலரது உழைப்பையும் செல்வத்தையும் தனக்கே உறிஞ்சி சமூகத்தையே உறிஞ்சிக் கொழுக்கும் மோசமான தலைவர்களும் உண்டு.

இறுதி மூச்சுவரை உலகத்திற்கே உழைத்து சமூக வெள்ளத்தால் கரைந்து போன தலைவர்களும் உண்டு. இறந்த பிறகும் எண்ணங்களாகக் கருத்துக்களாகச் சமுதாயத்தில் உறைந்து நின்று உலகையே வாழ வைக்கும் உன்னத மனிதர்களும் உண்டு.

இதில் நாம் எந்த வகை? யோசித்தோமா? இந்த எல்லா வகை மனிதரையும் விளக்கும் ஓர் அழகான கதை உண்டு.



''மனிதன் எப்படி வாழ வேண்டும்'' என்று ஒரு பெரியவரைக் கேட்டார்கள். அவர் மூன்று பொம்மைகளைக் காட்டினார். ஒன்று களி மண் பொம்மை. இரண்டாவது பஞ்சு பொம்மை. மூன்றாவது சக்கரை பொம்மை.

''இந்த மூன்றாவது பொம்மையைப் போல நீங்கள் வாழ வேண்டும்'' என்றார். இனிப்பாக இருப்பதா? களிமண்ணும் பஞ்சும் என்ன பாவம் செய்தன? மூன்றும் பொம்மை தானே? என்று பலரும் குழப்பினர்.

பெரியவர், மூன்று தனித்தனிப் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். முதல் பாத்திரத்தில் களிமண் பொம்மையைப் போட்டார். அது கரைந்து தண்ணீரின் நிறத்தையும் குணத்தையும் அசுத்தப்படுத்தி அழுக்காக்கியது. ''இப்படித்தான் சில மனிதர்கள் சமுதாயத்தில் கலந்து சமூகத்தையே அசுத்தமாக்கி விடுகிறார்கள், பாழாக்கி விடுகிறார்கள். அவர்கள் எங்கு இருந்தாலும் அந்த இடம் நஞ்சாகி விடும். ஏ.சி. பெட்டியில் ஒருவர் பிடித்த சிகரெட் புகை எல்லோர் நுரையீரலையும் கெடுப்பது போல... இவர்கள் களிமண் பொம்மை'' என்றார்.

அடுத்து பஞ்சு பொம்மையை நீரில் போட்டார். அது பாத்திரத்தின் தண்ணீர் முழுவதையும் ஒரு சொட்டும் இல்லாமல் உறிஞ்சிக் குடித்து 'பொதபொத' என்று குண்டாகி, வீங்கிவிட்டது. ''இந்த மாதிரி சில மனிதர்கள் சமூகத்தின் சொத்து முழுவதையும் தாங்களே அனுபவிக்க வேண்டும் என்று தாமே உறிஞ்சுகிறார்கள். இவர்கள் வளர்வது இல்லை. வீங்குகிறார்கள். இந்தப் பஞ்சுப் பொம்மையைப் போல் சமுதாயத்தை உறிஞ்சக்கூடாது. கொள்ளையடிக்கக் கூடாது'' என்றார்.

கடைசியாக, சர்க்கரை பொம்மையை மூன்றாவது பாத்திரத்தில் இருந்த தண்ணீரில் போட்டார். அது கரைந்து போனது. ஆனால் தண்ணீர் முழுவதும் இனிப்பாக இருந்தது. ''உன்னதமான மனிதர்கள் உலகத்திற்காக வாழ்ந்து தாங்கள் கரைந்து போகிறார்கள். ஆனால் அவர்கள் எண்ணங்கள், கருத்துக்கள் உலகை இன்பமாக்குகின்றன. விவேகானந்தர், காந்தியடிகள் போன்றவர்கள் அப்படிப்பட்ட சர்க்கரைப் பொம்மைகள்'' என்றார் அந்தப் பெரியவர்.

அதுசரி நீங்கள் களிமண் பொம்மையை? பஞ்சு பொம்மையா? சர்க்கரை பொம்மையா?

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவைக் கொண்டாடிய தேசிய விழா

**ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு உலகெங்கும் உணர்வுபூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாண நகரத்தில் மட்டும் அவர்களின் பேரால் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.**



*தேசிய இடர் பாதுகாப்புத் தினமன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிரதமருக்காகவும் அமைச்சர்களுக்காகவும் நிகழ்த்தப்பட்ட நடனம்.*

தேசிய பாதுகாப்புத் தினம் மற்றும் நினைவு கூரும் தேசிய விழா இம்முறை (26.12.2010) யாழ்ப்பாணத்தில் நடந்தேறியிருக்கிறது. இன்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் எம்மில் பலர் அறிந்திருக்காத ஆழிப் பேரலைகள் (சுனாமி) கரையோரப் பகுதிகளைத் தாக்கி பல ஆயிரம் மக்களது வாழ்வைக் காவு கொண்டிருந்தன. யாழ். மாவட்டத்தில் 948 பேர் இறந்து போனார்கள் அல்லது காணாமல் போனார்கள். இந்த நாளை தேசிய பாதுகாப்பு தினமாகப் பிரகடனப்படுத்தி அதனை கொண்டாடி வருகிறார்கள். இது பெருமெடுப்பில் நடைபெறும் ஓர் அரச விழா.

சாவைக் கொண்டாடி மகிழ்கின்ற நாடாக இலங்கை மாறிவிட்டதற்கு இந்த விழா நல்லதொரு எடுத்துக்காட்டு. போரில் பல ஆயிரம் பேர் இறந்து போனார்கள். அவர்களின் இழப்பு கொண்டாட்டங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் உரியதாக மாற்றப்பட்டுவிட்டது. கொட்டாட்டங்களும் கொக்கரிப்புக்களும் மலிந்த தேசத்தில் செத்தவர் யார் என்பது முக்கியமில்லை; அது யாராகவும் இருந்து விட்டுப் போகட்டும். தமிழனென்றாலும் சரி சிங்களவனென்றாலும் சரி யார்செத்தாலும் அவை கொண்டாடப்படவேண்டியவை என்பதுதானா நிலைப்பாடு?

யாழ்ப்பாணத்தில் அண்மையில், தேசிய இடர் பாதுகாப்புத் தினம் எப்படிக் கொண்டாடப்பட்டது (நிச்சயமாக அது கொண்டாட்டம்தான்) என்பதை சற்று விரிவாக் சொல்வது இங்கு மிகவும் பொருத்தமாக அமையும்.

அதிகமான பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பல லட்சங்கள் செலவிட்டு விழா நடத்தப்பட்டது. வழமை போல் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் விழா ஆரம்பமாகியது. அங்கு செலுத்தப்பட்ட ஒரே அஞ்சலி அது மட்டுமே. ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் நினைவாக வேறு எந்தவொரு இடத்திலும் விசேட அஞ்சலி செலுத்தப்படவில்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகள் எல்லாவற்றிலும் இந்தத் தினத்தை அமைதியாக உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தினார்கள். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கிலும் கூட அவ்வாறான உணர்பூர்வ நிகழ்வுகள் தனித்தனியாக பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. ஆனால் இலங்கை அரசினால் நடத்தப்பட்ட நிகழ்வில் ஆழிப்பேரலையால் இறந்து போனவர்கள் நினைவு கூரப்படாமலேயே போனது கவலைக்குரியது. அதற்கும் மேலாக அது ஒரு கொண்டாட்டமாக நடந்து முடிந்திருக்கிறது.

தேசியக் கொடியேற்றம் தேசிய கீதம் (சர்சைகளைத் தாண்டி இது சிங்களத்தில் பாடப்பட்டது) பாடலுடன் விழா ஆரம்பமானது. பின் பிரதமர், அமைச்சர்கள், ஆளுநர் ஆகியோர் மேடையில் நின்று விசேட அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்கள்.

படையினரின் அணிவகுப்பைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் பல பாடசாலைகளில் இருந்து அழைத்து வரப்பட்ட மாணவர்களின் 'பாண்ட்' வாத்தியக் குழுக்களின் நீண்ட அணி வகுப்பு இடம்பெற்றது. அடுத்து கலாசார நிகழ்வுகள் பலவும் நடந்தேறின. பிள்ளையாரும் தேசிய பாதுகாப்பு தினத்தில் தன் வண்டி தொந்தியுடன் ஆடிச் சென்றார். அதனை அடுத்து ஊர்திகள் பலவும் அணிவகுத்தன. இவற்றில் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் வண்டிகள். இந்தக் கலாசார ஊர்திப் பவனிக்கும் தேசிய இடர் பாதுகாப்புக்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை.

இவற்றைத் தொடர்ந்து மண்டபத்திற்குள் பிரதரும் அமைச்சர்களும் நுழைந்தனர். மங்கள வாத்தியமாம் நதஸ்வரம், தவில் வாசிக்கப்பட்டது. இடையில் அதிகாரிகள் சிலர் அமைச்சர்களுக்கு மாலை அணிவித்தார்கள்; திலகமிட்டார்கள்; மண்டியிட்டு வணங்கினார்கள். மேடையில் பரத நாட்டிய வரவேற்பு நடனம், கர்நாடக இசையில் வரவேற்புப் பா, வாழ்துப் பா என்று கோலாகலக் கொண்டாட்டம்.

யாருக்காக இந்த கோலாகல ஏற்பாடுகள்? ஆழிப்பேரலையால் உலகம் முழுவதும் இறந்து போன இரண்டரை இலட்சம் மக்களுக்காகவா? அல்லது இலங்கையில் சுனாமியால் செத்து காணாமல் போயும் இருந்த நாற்பதாயிரம் மக்களுக்காகவா இந்தக் கொண்டாட்டம் அல்லது இறுதி யுத்தத்தில் மடிந்தும் ஊனமுற்றும் போன பல ஆயிரம் பேருக்காகவா இந்தக் கொண்டாட்டம்?

ஆமாம்! அமைச்சர்களுக்காக அதிகாரிகள்; கொண்டாடிய நினைவு கூரும் விழா மட்டுமே அது.

சாவைக் கொண்டாடிய விழா! ஆம்! அந்த விழாவை அழைப்பதற்கு அதனைத் தவிர வேறு எந்தப் பொருத்தமான வார்த்தைகளும் அகராதியில் கிடைக்கா.

விழாவைப் பார்த்த பின்னர் என்னிடம் ஏற்பட்ட ஆயிரமாயிரம் கேள்விகளை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும்.

அதிகாரிகளே! உங்கள் உயரதிகாரிகளுக்காக எத்தனை மணி நேரம் மாலைகளோடும் தட்டுகளோடும் கால் கடுக்க காத்திருந்தீர்கள்? ஒரு கணமாவது பேரிடரில் மாண்டு போன எங்கள் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென்று நீங்கள் எண்ணியதில்லையா? ஒரேயொரு மலராவது அத்த உறவுகளுக்காகக் காணிக்கையாக்க உங்களுக்குத் தோன்றவில்லையா?

மலரஞ்சலி செலுத்த நகரத்தில் கல்லறையில்லை என்று நீங்கள் சொல்லக் கூடும். உங்கள் கண் முன்னால் மனிதனின் அழிவுப் புத்தியால் தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்து போனவர்களின் நினைவிடம் இருந்ததே! அங்காவது ஒரு மலர் வைத்து அஞ்சலி செலுத்த உங்களுக்குத் தோன்றவில்லையா? அரசியலாகிவிடக் கூடும் என்று அஞ்சி விட்டீர்களோ!

அஞ்சலி செலுத்த வேண்டும் என்று உங்கள் மனதிலாவது நினைத்தீர்களா? எங்களுக்கு அப்படிச் செய்யச்சொல்லி சுற்றறிக்கை வரவில்லையென்று நீங்கள் கூறினால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். கட்டளைகளை மீறமுடியாது என்பீர்கள். அமைச்சர்களுக்கு விருப்பமில்லாததைச் செய்யமுடியாதென்றும் சொல்லுவீர்கள். ஆனாலும் உங்களிடமும் மனச்சாட்சி இருக்கிறதென்று நாம் நம்புகின்றோம். பதில்கள் எனக்கு வேண்டாம். ஒரே ஒரு தடவை உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். இனியாவது ஆழிப் பேரலையால் காவுகொள்ளப்பட்டவர்களுக்காக, உங்கள் உறவுகளுக்காக உங்கள் மனதால் அஞ்சலி செலுத்துங்கள்.

என்னுடைய கேள்வி எல்லாம் தேசிய இடர் பாதுகாப்பு தினத்தை ஏன் யாழ்ப்பாணத்தில் நடத்தினீர்கள் என்பதுதான்?

பாதிக்கப்பட்டவர்கள் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படுவதே அன்றைய தினத்தில் வழக்கமாக இடம்பெறுவது. அது தொடர்பான தேசிய நிகழ்வில் இடர் தவிர்க்க பாதுகாப்புக்கான புதிய முன்னெடுப்புக்கள், திட்டங்கள், வழிகாட்டல்கள், இணைந்த செயற்பாடுகள், ஆய்வுகள் பற்றி இடர் முகாமைத்துவ அமைச்சர் அல்லது பிரதமர் தெரிவிப்பது அல்லது பிரகடனப்படுத்துவது வழமை.

யாழ்ப்பாணத்தில் பேசிய எவரும் அவ்வாறான எதனைப் பற்றியும் பேசவில்லை. அவர்கள் எல்லோரும் தங்கள் குரல்களை உயர்த்தி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசியது போன்று பேசினார்களேயல்லாமல் உருப்படியாக எந்த நம்பிக்கையையும் தரவில்லை.


நிகழ்வில் பேசிய பாரம்பரிய கைத்தொழில், சிறு கைத்தொழில் அமைச்சர் மட்டும் இனிவரும் மனித இடர் தவிர்க்க உரிய அரசியல் தீர்வு தேவையென்று சுட்டிக்காட்டினார். அவரது பேச்சுத் தவிர்ந்த ஏனைய அனைத்து பேச்சுக்களும் சிங்களத்திலேயே நிகழ்த்தப்பட்டன. அவரும் இயற்கை இடர் தவிர்ப்பு குறித்து எதுவும் பேசக்காணோம். பிரதமர் தமிழ் என்று கூறிப் புரியாத ஒரு மொழியில் சிறிது நேரம் ஏதோ வாசித்தார். அவருக்கும் அங்கிருந்த பலருக்கும் அவர் என்னதான் சொல்ல வந்தார் என்பது புரியவில்லை. அனைவரும் மொழி பெயர்ப்பை எதிர்பார்த்திருந்தார்கள் கிடைக்கவில்லை. உடனடி மொழிபெயர்ப்பு முன்னால் சில வரிசைகளில் அமரந்திருந்த முக்கிய பிரமுகர்களுக்கு மட்டும் வழங்கப்பட, ஏனையோர் மொழி புரியாது முழிபிதுங்கினர்.

எதிர்காலத்திலாவது இடர் தவிர்க்க புரியும் மொழியில் தொடர்பு கொள்ள வேண்டும். அதனை அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அரச விழாக்களைப் பெருமெடுப்பிலும் ஆடம்பரமாகவும் நடத்துவதில் காட்டும் அக்கறையில் அரைப் பங்கையாவது அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் காட்டினால் நல்லது. இன்றைய இடர் முகாமைத்துவம் என்பது இயற்கையை, சூழலைப் பாதுகாப்பதே. ✱

சோ.மு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருகுதே... உருகுதே....



ஆர்ஜென்டீனாவில் உள்ள அமீகினோ என்ற பனிமலை கடந்த 80 ஆண்டுகளில் புவிவெப்பமடைதல் காரணமாகச் சுமார் 4 கி.மீ. பரப்பளவிற்கு உருகியுள்ளதாக கிரீன்பீஸ் சுற்றுச் சூழல் அமைப்பு தெரிவித்துள்ளது.

1931ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படத்தையும், நடப்பு ஆண்டு மார்ச்சில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து இந்த முடிவுக்கு வந்துள்ளனர் கிரீன்பீஸ் இயக்கத்தினர்.

மேலும் அந்டீஸ் மலைத்தொடர் சங்கிலி முழுதிலுமே புவிவெப்பமடைதீலின் விளைவாகப் பனிச்சிகரங்களில் பனி உருகிவருவதாக அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

ஆர்ஜென்ரீனாவின் பனி மற்றும் பனிமலை ஆய்வுக்குழுவுடன் கிரீன்பீஸ் இயக்கத்தினர் இந்தப் பனிமலைப் பகுதிக்கு நேரடியாகச் சென்றுள்ளனர்.

1931ஆம் ஆண்டு இதே பகுதியைப் புகைப்படம் எடுத்தவர் ஆல்பர்ட்டோ அகஸ்டினி என்பவர் குறிப்படத்தக்கது.


தற்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தில் பனிமலைக்கு முன்பாக ஒரு பெரிய ஏரி உருவாகியுள்ளது. இது பழைய புகைப்படங்களில் இல்லை.

புவிவெப்பமடைதல் காரணமாக உலகின் முக்கியப் பனிமலைப்பிரதேசங்களில் பனி உருகிவருவதன் வேகம் அதிகரித்துள்ளது. இதற்குத் தென் அமெரிக்கப் பனிமலைகளும் விதிவிலக்கல்ல என்று கிரீன்பீஸ் இயக்கம் தெரிவித்துள்ளது.

தெற்கு படகோனியப் பனிப்புலத்தின் ஒரு பகுதிதான் அமீகினோ பனிமலையும். படகோனிய பனிப்புலத்தில் 13 மிகப்பெரிய பனிமலைகளும் 190 சிறு பனிமலைகளும் உள்ளன.

இவை அனைத்திலுமே ஏறக்குறைய புவிவெப்பமடைதலின் விளைவுகள் தாக்கம் செலுத்தியுள்ளதாக கிரீன்பீஸ் இயக்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

## பூமியின் உட்புறக் காந்தசக்தி



நாம் வாழும் பூமியில் உள்ள புவி ஈர்ப்பு விசைக்கு முழுக்காரணம் காந்தசக்தி மையமே. இந்தக் காந்தசக்தி மைய வலிமையை பற்றிக் கலிபோர்னியப் பல்கலைகழக பூமி மற்றும் கோள் அறிவியல் துறைப் பேராசிரியர் புரூஸ் ஏ. பபெட் என்பவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

அதன்படி பூமியின் உட்புறம் ஏறத்தாழ 1800 மைல்கள் (2,896 கி.மீ.) ஆழத்தில் இந்தக் காந்தசக்தி மையம் அமைந்திருக்கிறது எனக் கண்டறிந்துள்ளார். இது பூமியின் மேற்பரப்பில் காணப்படும் காந்த சக்தி மையத்தை விட 50 மடங்கு வலிமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வெப்பமானது பூமிக்கு 3 விதமான வழிகளில் கிடைக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவை:

1) சுமார் 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பு பூமி உருவானபோது ஏற்பட்ட வெப்பம்.

2) பூமிக்குள் காணப்படும் கனிமங்கள் வெளியிடும் புவியீர்ப்பு ஆற்றல் வழியாக கிடைக்கும் வெப்பம் .

3) நீண்ட காலமாகப் பூமியில் உள்ள பொட்டாசியம், யுரேனியம் மற்றும் தோரியம் போன்ற கதிரியக்கத் தனிமங்களின் சிதைவுகளால் வெளிப்படும் வெப்பம் என்பன வெப்பமானது பூமிக்குக் கிடைக்கும் காரணிகளாகக் கூறப்படுகிறது.

மேலும், பூமியின் உட்புறம் உள்ள காந்தபுலம் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான வருடங்களாக நீடித்து வருகிறது. அதற்கு பூமியில் காணப்படும் இந்த வெப்பமே அடிப்படை ஆகும். உற்பத்தியாகும் வெப்பமானது தொடர்ந்து காந்தபுலத்தைத் தோற்றுவிக்கும் ஒரு சிறந்த சக்தியாக விளங்கி வருகிறது. ஏறத்தாழ 1,400 மைல்கள் (2,253 கி.மீ.) அளவிற்கு அடர்த்தி மிகுந்த பூமியின் வெளிப்புற அடுக்கு வெப்பத்தின் உதவியால் கொதிப்படைகிறது. இதனால் உள்ளே உள்ள கனிமங்கள் ஆற்றலை உற்பத்தி செய்து பின்னர் சிறிது சிறிதாக அவற்றை மின்னாற்றலாக மாற்றுகிறது. அந்த மின்னாற்றல் காந்த சக்தி மையம் பூமியில் தொடர்ந்து நீடிக்க உதவுகிறது. இந்தக் காந்த சக்தி மையம் பின்னர் பூமியின் மேற்புறம்வரை பரவுகிறது. இது பற்றிய தகவல்களைக் கண்டறிந்துள்ள அறிவியலாளர் புரூஸ் பூமியின் உட்புறம் காணப்படும் அரிய விடயங்கள் பற்றிய தனது ஆராய்ச்சியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.




## மொனிட்டர் பிரச்சினையா..

கணினியில் அவசரமாக பணியில் ஈடுபடும் இருக்கும் போது மொனிட்டரில் பிரச்சினை ஏற்பட்டால் பொறுமையாகக் கீழ்க்கண்ட வழிமுறைகளை கையாளலாம்.

* முதலில் மொனிட்டருக்கு மின் வழங்கல் சரியாக உள்ளதா? என்பதைப் பார்க்க வேண்டும்.
* பழைய கணினி மற்றும் மொனிட்டராக இருந்தால், கணினியின் சி.பி.யூவில் இருந்தே மொனிட்டருக்கு மின்சாரம் செல்லும். இது சரியாகப் பொருத்தப்பட்டு உள்ளதா? என்பதைச் சரிபார்க்க வேண்டும். எதற்கும் ஒரு முறை கழற்றி மீண்டும் சரியாகப் பொருத்திப் பார்ப்பது நல்லது.
* தற்போது வந்துள்ள மொனிட்டர் என்றால் அதற்குத் தனியே மின்சார வழங்கி இருக்கும். அது சரியானபடி பொருத்தப்பட்டு உள்ளதா? என்பதைச் சரி பார்க்க வேண்டும். அதற்குரிய மின் ஆழி போடப்பட்டு உள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.
* பொதுவாக மொனிட்டரின் வலது பக்கத்தில் பிரைட்னஸ் மற்றும் கொண்ட்ராஸ்ட் ஆகியவற்றைச் சரி செய்தால் மொனிட்டர் சரியாகலாம்.
* மொனிட்டருக்கு மின்சாரம் செல்கிறது. அது போடப்பட்டு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள ஒரு சிறிய லைட் இருக்கும். இது மெலிதான ஆரஞ்சு நிறத்தில் அல்லது மெலிதான பச்சை நிறத்தில் இருந்தால் மொனிட்டருக்கு மின்சாரம் செல்கிறது. கணினியின் சி.பி.யூவிலிருந்து சிக்னல் வரவில்லை என்பதை தெரிந்து கொள்ளலாம்.
* மொனிட்டருக்கு வரும் வீடியோ கேபிளைச் சரி செய்து பார்க்க வேண்டும். அது சரியான முறையில் பொருத்தப் பட்டு உள்ளதர்? என்பதை பார்த்து மீண்டும் ஒரு முறை கழற்றி மாட்ட வேண்டும்.
* சந்தேகத்துக்கு உரிய மொனிட்டரை மற்றொரு கணினியில் பொருத்திப் பார்க்கலாம். அப்போதும் மொனிட்டர் வேலைசெய்யவில்லைஎன்றால், மொனிட்டரில்தான்கோளாறு உள்ளது என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.
* சில வழிகளில் மொனிட்டர் இயங்காமல் இருக்கும். கணினி பூட் ஆகும்போதும், பின்னர் காட்சி கிடைக்கும் போதும் தெளிவான காட்சி இல்லாமல் தெரியும். அப்படி எனில் உங்களது டிஸ்பிளே கார்ட் சரியில்லை என்று அர்த்தம். எனவே அதை மாற்றிப் பார்க்கலாம்.
* புதிய டிஸ்பிளே கார்ட் பொருத்தப்பட்ட பின்னரும் மொனிட்டர் சரிப்பட்டு வரவில்லை என்றால், மொனிட்டரை மாற்ற வேண்டும் அல்லது மொனிட்டரைப் பழுது பார்க்க வேண்டும். இவ்வாறு மொனிட்டர் பிரச்சினைகளை நீங்களே முடிந்த அளவு தீர்க்கலாம்.





# இணையம் இனிச் சீனா

''இணையதளத்தின் எதிர்கால இதயம் சீனா. தேடுதல் தவிர வரைபடம் மற்றும் விளம்பரம் போன்ற பிற பகுதிகளும் சீனாவில் 'கூகுள்' வளர்ச்சி பெறுவதற்கான இடங்களாகத் திகழ்கின்றன'' என கூகுள் நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த 2006இல் 'கூகுள்' நிறுவனம் தனது தேடுபொறியை சீனாவில் நிறுவியது. மிகக்குறுகிய காலத்திலேயே கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களைத் தன் பக்கம் ஈர்த்தது. இந்நிலையில், தியனன்மென் சதுக்கப் படுகொலை போன்ற, கடந்த சீன அரசின் அட்டூழியங்களைக் குறிக்கும் தகவல்களைத் தணிக்கை செய்ய வேண்டும் எனச் சீன அரசு உத்தரவிட்டது.

அதையேற்ற கூகுள் சில விஷயங்களைத் தணிக்கை செய்தது. ஆனால் சீனா தொடர்ந்து கூகுளுக்கு நெருக்கடி கொடுத்து வந்தது. இதற்கிடையில் அந்நிறுவனத்தில் இ-மெயில்கள் சில இணையதளத் திருட்ர்களால் திருடப்பட்டன.

சீனா இதுகுறித்து விசாரிப்பதாகக் கூறிவந்ததே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இப்பிரச்சினை ஒரு நிலையில் முற்றி, கடந்த மார்ச் முதல் சீனாவில் தனது தேடுபொறியை நிறுத்தி விட்டது கூகுள்.

அதையடுத்து கூகுளின் தேடுபொறி, ஹாங்காங்கில் இருந்தபடி செயல்படத் துவங்கியது. இதனால் அந்நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் பெரும்பகுதியைச் சீன தேடுபொறி நிறுவனமான 'பெய்டு'விடம் இழந்தது.

அதன்பின் கடந்த ஜூலையில், ஹாங்காங்கிற்கு சேவையை திருப்பி விடுவதை கூகுள் நிறுத்தியது. அதன்பின் சீன அரசு, அந்நிறுவனத்துக்கான உரிமத்தைப் புதுப்பித்தது.

இந்நிலையில் நேற்று சீனத் தலைநகர் பீஜிங்கில் பேசிய அந்நிறுவனத்தின் பொறியியல் மற்றும் ஆராய்ச்சித் துறையின் துணைத் தலைவர் ஆலன் எஸ்டேஸ் கூறியதாவது: ''இணையத் தளத்தின் எதிர்கால இதயமாக சீனா திகழ்கிறது. தேடுதல் என்பது தவிர, வரைபடம் மற்றும் விளம்பரங்களை வெளியிடுவது போன்ற எண்ணற்ற துறைகள் இணையதள உலகில் உள்ளன.

அவற்றை நம்மால் கண்டுபிடிக்க முடியும். சீனாவைப் பொறுத்தவரை கூகுள் ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது. ஒரு மகத்தான புரட்சிக்கு அது வழிகாட்டும் என நம்புகிறேன். கூகுள் மீது சீன அரசு தாக்குதல் தொடுத்தது என்ற 'விக்கி லீக்ஸ்' இரகசிய 'ஆவண வெளியீடு பற்றி எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை'' இவ்வாறு ஆலன் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை எழில் கொஞ்சும் சாவகச்சேரி நகரம்




யாழ். குடாநாட்டின் தென் மூலையில் உள்ள தென்மராட்சியின் தலைநகரம் சாவகச்சேரி. ஏ 9 வீதி என்று அழைக்கப்படும் யாழ். நகருக்கும் கண்டிக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்தும் பாதையில் உள்ள ஒரு அழகிய நகரம் அது.

சாவகச்சேரி நகரின் அயற்கிராமங்களாக மட்டுவில், நுணாவில், சங்கத்தானை, கச்சாய், மீசாலை, கைதடி போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இன்னும் பல சிறிய இடங்களும் இருக்கின்றன.



புவியியல் ரீதியாக நோக்கின் குடாக்கடலின் உப்புக்காற்று தூர இருந்து வருகிறது. ஆங்காங்கே வெண் மணற்தரைகள். பொதுவாக நிலத்தடி நீர் உவர்ப்புத் தன்மையாக இருக்கும். இருந்தாலும் நன்னீர் கிடைக்கும் இடங்களும் அதிகம் உண்டு. நிலத்தைத் தோண்டத்தோண்ட மணல் வந்து கொண்டே இருக்கும். வெகு ஆழத்தில் மட்டும் படிவுப் பாறைகள் தோன்றும். சில இடங்களில் வழமைக்கு மாறாகக் கருங்கற்பாறைகள் மட்டும் வருவதுண்டு. அப்படி ஒரு கிணறு கூடக் காணப்படுகின்றது. அந்தக் கிணற்றுக்கு எந்த சிமெந்து வேலையும் செய்யவில்லை. இயற்கையாகவே அந்த இடத் தில் கருங்கற்பாறைகள் உள்ளன.

தாவரங்கள், விலங்குப் பரம்பல்கள் என்று நோக்கின் நீண்டு வளர்ந்த தென்னைகளும் பனைகளும் பூவரசும் பலாவும் மாவும் நாவலும் இலுப்பையும் வாகையும் இலந்தையும் முருங்கையும் மரமுந்திரிகையும் ஈச்சும் அலங்கரிக்கும் ஒரு சோலைகொள் நகரம் சாவகச்சேரி என்றால் மிகையல்ல.

பறவைகளில் பலாக்கொட்டைக் குருவி, கொண்டைக்காரக் குருவி, அண்டங்காகம், அரிசிக் காகம், பச்சைக்கிளி, செம்பகம், மைனா, புலுனி, ஆந்தை மற்றும் மாடப்புறா, மணிப்புறா வகைகள் நிறைந்திருக்கின்றன. பல அரிய வகைப் பறவைகளையும் அவதானித்ததுண்டு.

வீடுகளில் வளர்ப்புப் பண்ணைகளில் மாடு, ஆடு, கோழி நிறைந்திருக்கும். சிலர் முயலும் வளர்ப்பர். சாவகச்சேரி நகரின் கிராமங்களில் கொய்யா நாவல் ஈச்சு நிறைந்த பற்றைக்காடுகள் நிறைந்து காணப்படுவதால் அவ்விடங்களில் உடும்பு, முயல், வெளவால் வேட்டையாடுதலை பொழுது போக்காகவும் சிலர் உணவுத் தேவைகளுக்காக வும் செய்வர்.

நகரின் மத்தியில் சாவகச்சேரிச் சந்தை உண்டு. நவீன தொடர்மாடிக் கட்டடத்துடன் கூடிய வியாபார நிலையங்களும் அங்கு உண்டு. சந்தைப் பகுதியில் வார இறுதியில் சந்தை கூடு தல் விசேடமாக இருக்கும். பல ஊர்களிலிருந் தும் வாகனங்களில் பலாப்பழம், மாம்பழம், மரக் கறி வகைகள், பனங்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு வாங்குவதற்காக அவை மலிந்திருக்கும் காலங்களில் மக்கள் படையெடுப்பர். நவீன வசதிகளுடன் கூடிய பஸ்தரிப்பு நிலையமும் நகரின் மத்தியில் அமைந்திருக்கிறது.

நகரின் மத்தியில் டிறிபேர்க் கல்லூரி என்ற புகழ்பூத்த கல்லூரி உண்டு. முன்னர் ஒரு காலத்தில் குடாநாட்டின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகவும் இது விளங்கியுள்ளது. பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கூட தனது ஆரம்பக் கல்வியை அங்கு தான் பயின்றுள்ளார். இந்தக் கல்லூரியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் தற்போதும் புகழோடு விளங்குகின்றன. சாவகச்சேரி இந்துக் கல்லூரி தேசிய பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்ந்து நிற்பதோடு தென்மராட்சியில் இருந்து பல மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவரும் சிறப்பையும் பெற்று விளங்குகிறது. இவை இரண்டும் ஆண்கள் - பெண்கள் கலந்து கல்வி கற் கும் பாடசாலைகள் ஆகும். நகரின் மத்தியில் பெண்களுக்கான ஒரு கல்விக் கூடமும் உண்டு. அது சாவகச்சேரி இந்து மகளிர் மகா வித்தியாலயம் என்று அழைக்கப்படுகிறது. தமிழர்களின் சொத்தே கல்வி என்பதற்கு சாவகச்சேரி நகரை அலங்கரிக்கும் கல்விக் கூடங்களும் சாட்சி பகர்கின்றன.

நகரின் மத்தியில் இருந்து சற்று தெற்கு நோக்கி ஏ-9 சாலை வழி செல்லின் சாவகச்சேரி பொது மருத்துவமனை இருக்குமிடத்தைப் போய் சேரலாம். நடுத்தர அளவிலான மருத்துவமனை அது. 24 மணி நேரமும் சேவை வழங்கி வருவ தோடு நகரில் உள்ள மக்களின் சுகாதார வைத்திய வசதிகளை மேம்படுத்திய நிலையில் வைத்திருக் கவும் பணியாற்றி வருகிறது. போர்ச் சூழலால் பல இடர்களைக் கண்டும் தளராத உறுதியோடு அதன் பணியாளர்களும் வைத்தியர்களும் தாதிய ரும் சேவையாற்றி வருகின்றனர்.

தென்மராட்சி மக்கள் ஆன்மீகப் பற்றுதல் கொண்டவர்கள். சாவகச்சேரி நகரின் சுற்றயலிலும் சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்க ளைப் பின்பற்றும் மக்கள் தாங்கள் வழிபட என கோயில்களும் கிறிஸ்தவ தேவாயலங்களும் மசூதிகளும் கட்டி வைத்துள்ளனர். சாவகச்சேரி நகரில் தமிழ், முஸ்லிம் மக்கள் சகோதரர்களாக நெடுங்காலம் வாழ்ந்து வந்துள்ளனர். பல வியாபார நிலையங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாகவும் விளங்கின.

சாவகச்சேரி மக்களின் வாழ்வியல் பெரிதும் விவசாயத்தைச் சார்ந்திருக்கிறது.

நகரைச் சுற்றிய பகுதிகள் பொன் விளையும் பூமி என்றால் மிகையல்ல. நீண்டு நீடித்த வயல்களும் பச்சைப்பசேல் என்று தெரியும் நெற்பயிர்களு மாக ஆண்டு தோறும் வருட இறுதில் நகரின் சுற்றுப்புறம் பசுமை கொண்டிருக்கும்.

தென்மராட்சி மக்களில் நெற் பயிர்ச்செய்கை செய்வோரே அதிகம். சிலர் தோட்டங்கள் செய்வர். இதை சாவகச்சேரி நகரை அண்டிய இடங்களிலும் தெளிவாகக் காணலாம். பாரம் பரிய நீரிறைப்பு முறைகளில் ஒன்றான துலாமிதித்தல் மூலம் நீர் இறைப்பை மேற்கொண்டு தோட்டங்களில் உள்ள கத்தரி, மிளகாய், புடோல், பயிற்றை, பூசணி, மரவள்ளி போன்ற மரக்கறிப் பயிர்களுக்கு வாய்க்கால்கள் வழி நீர் பாய்ச்சுவதைப் பார்த்திருக்கின்றோம். பலர் நவீன முறைகளையும் கையாள்கின்றனர். சாவகச்சேரி கத்தரிக்காய்க்குத் தனி மதிப்புண்டு. சாவகச்சேரி கத்தரிக்காய் வலிகாமம் பகுதியில் விளையும் கத்தரிக்காய் போன்று ஊதா கலந்தன்றி வெள்ளையாக குண்டாக சிறிதாக இருக்கும்.

நெற்பயிர்ச் செய்கையானது உழவியந்திரங்கள் அல்லது மாடு பூட்டிய கலப்பைகள் கொண்டு நிலத்தை உழவு செய்வதில் இருந்து ஆரம்பமா கும். மண்ணைப் பண்படுத்திய பின் விதைப்பு நடைபெறும். மழை பெய்ததும் மழை நீர் தேங்கி நிற்க சகதிகளுக்குள் இறங்கி நாற்றுநடுதலில் ஆண்களும் பெண்களும் வேறுபாடின்றி தங்கள் உழைப்பை நல்குவர்.

சாவகச்சேரி நகர மக்கள் பல்வேறு நிர்வாகத் தொழில் திறமைகளையும் கொண்டவர்கள். பலர் அரச பணியாளர்களாக, ஆசிரியர்களாக , வியாபாரம் மற்றும் சுயதொழில் செய்வோராக என்று பல மட்டங்களில் தங்கள் நிர்வாகத் திறமைகளையும் காட்டி வந்துள்ளனர். பலர் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

மேற்குலக நகரங்களில் பூங்காக்கள் அமைத்து வைத்து பொழுது போக்குவர். சாவகச்சேரியை எடுத்துக் கொண்டால் அதுவே ஒரு பூங்கா போன்றது. அத்துணை அம்சங்களும் தன்னகத்தே கொண்ட ஒரு இயற்கை எழில் கொஞ்சும் இடம் அது. ✱

தென்மராட்சி வலம்

# சரசாலை முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)




அறிவினைப் பெறுவதற்கு அறிவுசார் நூல்களை நாம் கற்க வேண்டும். அவ்வாறு அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு மனிதனும் அவசியம் நூலகங்களை நாடிச் செல்ல வேண்டும். அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் சரசாலை தெற்குப் பிரிவு மக்களால் ஆரம்பிக்கப்பட்டதே முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையமாகும். மேலும் வன்னிப்பகுதியிலிருந்து இப்பகுதியில் மீளக் குடியமர்ந்த 75 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், 13 சிறுவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளையும், 11 குடும்பங்களுக்கு மலசலகூடங்களையும் அமைத்து வழங்கினர்.

வேள்ட் விஷன் நிறுவனத்தினர் சனசமூக நிலையக் கட்டடத்துடன் இணைத்து 43 அடி நீளமான சிறுவர் நலன் நோக்கு மண்டபத்தினை அமைத்ததுடன் விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினர்.

மேலும் இளைஞர் யுவதிகளுக்கு கணனிப் பயிற்சியினை பெற்றுக் கொடுத்ததுடன் மாத்தளாய் குளம் புனரமைக்கவும், வீதிகள் புனரமைக் கவும் நிலைய மண்டபத்திற்கு மின்சார வசதி ஏற்படுத்தவும் நிதி வசதி செய்து கொடுத்தனர்.

இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ள மக்களின் பங்களிப்பே இந்த நிலையத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைநகர் டிசெ 31

தீவக வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன்.

காரைநகர் கல்விக் கோட்டத் திறப்பு விழா தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

காரைநகருக்குத் தனியான உதவி அரச அதிபர் பணிமனை 2003 இல் அமரர் மகேஸ்வரனின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. அப்போதே தனியான கல்விக் கோட்டமும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்றுதான் அந்த முயற்சி கைகூடுகின்றது. வடமாகாணத்தில் உள்ள 33 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கல்விக் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 34ஆவது கல்விக் கோட்டமாக காரைநகர்க் கல்விக் கோட்டம் அமைகிறது.

காரைநகர்ப்பாடசாலைகளின்தேவைகள், பிள்ளைகளின் தேவைகள் பற்றி இரு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு காரைநகர் உதவி அரச அதிபரிடம் ஆளுநர் தெரிவித்துள்ளார். ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகவும் எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பெற்றோர்களின் பங்களிப்பு மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எமது பிரதேசத்தவர்களின் பங்களிப்பும் நிறைவான கல்வியை வழங்க உதவ வேண்டும்.- என்றார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜி.ஏ. சந்திரசிறி காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது:

அரசு ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 114 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அவற்றுள் காரைநகரில் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பிள்ளைகளின் கல்வி, விளையாட்டுத்துறைகளில் பெறுபேறுகள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்குப் பாடசாலைச்சமூகம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். காரைநகர் கோட்டக் கல்வி அலுவலக புனரமைப்புக்காகப் பத்து லட்சம் ரூபா நிதி ஆளுநர் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரியின் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தைப் புனரமைப்பதற்கு முதற்கட்டமாக ஐந்து லட்சம் ரூபா நிதியினை வழங்க உள்ளோம் என்றார் அவர்.

கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாற்றுகையில்:

தீவகப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இதனால் தீவுப்பகுதி மாணவர்கள் யாழ். நகர்ப்பாடசாலைகளை நோக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மாற்றியமைத்து தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வியும் கடந்த சில வருடங்களாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இதனை நாம் மாற்றியமைக்க வேண்டும். இந்த நிலையை நிவர்த்தி செய்ய மாகாணக் கல்வி அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும் என நினைக்கிறேன் அதற்கு நாமும் உறுதுணையாகச் செயற்படுவோம்.

காரைநகருக்குத் தனியான கல்விக் கோட்டம், பிரதேச செயலகம், பிரதேச சபை உள்ளிட்ட பெரும்பாலான அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மின்சார சபை, கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றின் அலுவலகங்களையும் இங்கு அமைக்கவேண்டும் என மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே மின்சார சபை, கடற்றொழில் திணைக்களம் என்பவற்றின் உப அலுவலகங்களை இங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

தலைமை உரையாற்றிய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் தனது உரையில்:

காரைநகரில் 14 பாடசாலைகள் இருக்கின்ற போதிலும் எட்டுப் பாடசாலைகளே இயங்குகின்றன. ஏனைய பாடசாலைகளையும் படிப்படியாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

காரைநகரில் இரு பாடசாலைகள் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

ஒரு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்குக் கோட்டக் கல்வி அலுவலகம் இன்றியமையாதது. காரைநகரின் கல்வி அபிவிருத்திக்கு இந்தக் கல்விக் கோட்டம் உறுதுணையாக அமையும்- என்றார் அவர். (201-250)

# காணி கொள்வனவுக்கு நிதி தேடுகிறது வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை

சண்டிலிப்பாய், டிசெ.31

வலி. தென்மேற்குப் பிரதேசத்துக்கான அலுவலகம் மற்றும் பொதுச் சந்தை, கடைத் தொகுதி ஆகியன ஒருங்கே அமைக்கக்கூடிய வகையில் பண்டத்தரிப்பு பிரதேசத்தில் விற்பனைக்கு இருக்கும் 11 பரப்புக் காணியை நியாய விலையில் சபைவாங்குவதற்கு நிதியுதவி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்காக ஒரு தொகைப்பணத்தை ஒதுக்குமாறும், பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் அடுத்தவருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டம் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எம். சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் காணி சம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில்:

வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் கீழுள்ள மானிப்பாய்ப் பட்டினம், மானிப்பாய்க் கிராமம் ஆகியன இணைக்கப்பட்டு நகர சபையாகத் தரமுயர்த்தப்படும்போது பண்டத்தரிப்பு பட்டினமும் பண்டத்தரிப்புப் கிராமமும் இணைக்கப்பட்டு பிரதேசசபையாக மாற்றப்படும்.

அதற்கு தற்பொழுது பண்டத்தரிப்புப் பட்டினத்தில் விற்பனைக்கிருக்கும் 11 பரப்புக் காணியை சபையின் தேவைக்குப் பயன்படுத்துவதற்கு வாங்குவதற்காக நிதியுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (204-115)

## தையல் இயந்திரங்கள் வழங்கல்

தென்மராட்சி,டிசெ.31

நாவற்குழி கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பிரதேச செயலகத்தினால் தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

தையல் இயந்திரங்கள் வழங்கவென நாடளுமன்ற உறுப்பினர் கே.எம்.சுவாமிநாதன் ஒரு லட்சம் ரூபாவினை இவ் வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (204-207)

# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த மூதாட்டிக்கு கைகள் முறிந்தன

தென்மராட்சி,டிசெ.31

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மூதாட்டிக்கு இரண்டு கைகளும் முறிந்தன.

இந்தச் சம்பவம் மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

மழை வெள்ளம் நிறைந்திருந்த வீதிக் குழிக்குள் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த மூதாட்டி தூக்கி வீசப்பட்டதில் கைகள் முறிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது:

இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பரமேஸ்வரி (வயது 70) என்பவர் கைகள் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-207)

# நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.31

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் சண்டிலிப்பாய் கலாசாரப் பேரவைக்கு ஒரு லட்சம் ரூபா நிதியினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வழங்கியுள்ளார்.

இந்த நிதி 'பாண்ட்' வாத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (204-313)

# முன்பள்ளி சிறார்களின் கலை விழா இன்று

தென்மராட்சி,டிசெ.31

சாவகச்சேரி, சங்கத்தானை ஸ்ரீ முருகன் முன்பள்ளிச் சிறார்களின் கலை விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் சி.கமலரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-207)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அப்புத்துரை நாகலெட்சுமி



கொக்குவில் கிழக்கு, அச்சுக்கூட ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை நாகலெட்சுமி 29.12.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சுரேந்திரன் (லண்டன்), தெய்வேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.01.2011 ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(108191)

தகவல்:
இராசா தேவராசா
(சம்மந்தி).

### திருமதி கிறேஸ் மனோரஞ்சிதமலர்

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய திருமதி கிறேஸ் மனோரஞ்சிதமலர் நேற்று ( 30.12.2010) வியாழக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றொபேட் அருட்பிரகாசத்தின் (முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும், சீலியா ரொபினி, ஈனிற்ரதனி, சில்வியா ரக்சினி, அஸ்டர் ரங்கநாத் ஆகியோரின் அருமைத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2010) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
112552987

(C/573729)

தகவல் :
சீலியா ரொபினி
(மகள்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தர்மலிங்கம்
ரவிராஜ்
திதி: அபரபக்க
ஏகாதசி-31.12.2010

தோற்றம்
27★01★1958

மறைவு
11★01★2010

கள்ளம் அற்ற வெள்ளைச் சிரிப்பால்
உள்ளம் அனைத்தும் கொள்ளைகொண்டு
வஞ்சம் அற்ற நேர்மைப் பண்பால்
நெஞ்சம் அனைத்தும் வெற்றிகொண்டு
சீற்றம் அற்ற அன்புச் சொல்லால்
சுற்றம் அனைத்தும் இனிக்கச் செய்து
கொற்றவன் போல வாழ்ந்த உங்களை
கூற்றுவன் சடுதியில் கவர்ந்து சென்றது தகுமோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி,
மகன், தாய்,
சகோதரர்கள்,
நண்பர்கள்.

'உதயபானு',
கண்டி வீதி,
கொடிகாமம்.

(108192)

அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனொளிபாத மலை யுனெஸ்கோவால் உலக மரபுரிமைப் பிரதேசமாகப் பிரகடனம்

நுவரெலியா, டிசெ.31

மத்திய மலை நாட்டிலுள்ள இயற்கை எழில் மிகுந்த பிரதேசங்களான நக்கில்ஸ் மலைத் தொடர், ஹோட்டன் தென்ன, சிவனொளிபாதமலை ஆகிய மூன்று பிரதேசங்களும் உத்தியோகபூர்வமாக உலக மரபுரிமைப் பிரதேசங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அண்மையில் பிரேஸிலில் நடைபெற்ற 34ஆவது உலக மரபுரிமை அமைப்பின் மாநாட்டில், இம்மூன்று பிரதேசங்களும் உலக மரபுரிமைப் பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று சுற்றாடல் துறை அமைச்சு கேட்டுக் கொண்டதற்கமைய அது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை யுனெஸ்கோ நிறுவனம் தற்போது இலங்கைக்கு வழங்கியுள்ளது. அத்துடன் இலங்கையின் மரபுரிமை பிரதேசங்கள் எட்டாக அதிகரித்துள்ளன. (ளி-5)

## மஸ்கெலியா ப.நோ.கூ.சங்கத்தில் பண மோசடி; முகாமையாளர் நாட்டைவிட்டு வெளியேற்றம்

நுவரெலியா, டிசெ.31

மஸ்கெலியப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 20 லட்சம் ரூபா பண மோசடி நடந்துள்ளது என்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட முகாமையாளர் இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறி விட்டார் என்றும் சங்கத்தின் தலைவர் தர்மதாஸ மத நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பணமோசடி விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்பந்தப்பட்ட முகாமையாளர் இக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச முகாமையாளராக மூன்று வருடங்கள் பணியாற்றியுள்ளார். அந்தக் காலப்பகுதியில் 20 லட்சம் ரூபா பணத்தைக் கையாடியுள்ளார்.

அக் காலப்பகுதியில் இருந்த சங்கத் தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் இந்த மோசடி தெரியவந்தபோதும் ஏதோ காரணத்துக்காக அதை மூடி மறைத்துவிட்டனர்.

முன்பிருந்த சங்கத் தலைவரும், பணிப்பாளர் சபையும் நடத்திய சீரற்ற நிர்வாகத்தின் காரணமாகவே இத்தகைய மோசடிகள் இடம் பெற்றுள்ளன.


நாட்டை விட்டுத் தப்பியோடிய முன்னாள் முகாமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணையாளரிடம் பலதடவைகள் அனுமதி கோரப்பட்டது.

எனினும் இச் சங்கத்தின் உள்ளகக் கணக்காய்வு பல வருடங்களாக மேற்கொள்ளப் படாத காரணத்தால் சட்ட நடவடிக்கைக்கான அனுமதி நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

பணமோசடியில் ஈடுபட்ட ஏனைய முகாமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தற்போதுள்ள பணியாளர்சபையிடம் அனுமதி கோரப் பட்டுள்ளது.

அனுமதி கிடைத்ததும் மோசடியாளர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

- இவ்வாறு தற்போதைய தலைவர் தர்மதாஸ மதநாயக்க கூறினார். (ளி-5)




## தேசத்துக்கு மகுடம் பணித் திட்டத்தில் மேலும் 20 பாடசாலைகள் இணைப்பு

மொனராகலை, டிசெ.31

'தேசத்துக்கு மகுடம்' நிகழ்ச்சித் திட்டத்துக்கு மொனராகலை மாவட்டத்தில் ஏற்கனவே இருபது பாடசாலைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக மேலும் சில பாடசாலைகளும் இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என மொனராகல வலயக் கல்விக் காரியாலயத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய மொனராகல மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் ஒரு வாரம் முன்பதாகவே இயங்கத் தொடங்கியுள்ளன என்றும் அவர் கூறினார். தனமல்வில தேசியப் பாடசாலை திறக்கப்பட்டுள்ளது.

எனினும், புத்தல துட்டுகெமுனு மத்திய மகா வித்தியாலயத்தில் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் கடந்த 27ஆம் திகதி திறக்கப்படவில்லையெனவும், ஏற்கனவே தீர்மானித்தபடி ஜனவரி 3ஆம் திகதியே இப் பாடசாலை திறக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் 'தேசத்துக்கு மகுடம்' நிகழ்ச்சிக்கு இம் மாவட்டத்தில் மேலும் சில பாடசாலைகள் சேர்க்கப்படவுள்ளன.

அதற்காக வழங்கப்படும் விடுமுறைகள் நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர் வரும் விடுமுறை நாள்களில் ஈடு செய்யப்படும் -என அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். (ளி-5)

## விறகு வெட்டச் சென்றவர் வீடு திரும்பவில்லை

மஸ்கெலியா சாமிமலைப் பகுதி ஸ்டஸ்ரித் தோட்டத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் காணாமல் போனதைத் தொடர்ந்து பொது மக்கள் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோட்டத்தைச் சேர்ந்த பொன்னையா (வயது-60) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

சம்பவதினம் காலை விறகு வெட்டுவதற்காக அடர்ந்த காட்டுப் பகுதிக்கு இவர் சென்றார் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை வரை அவர் வீடு திரும்பாததையடுத்து தோட்டமக்கள் வேலை நிறுத் தம் செய்து, தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அஸ்ரப் கிராம மக்களை வெளியேற்றும் அரச அதிபரின் நடவடிக்கை இனவாதமானது

### அட்டாளைச்சேனை மக்கள் கொதிப்பு

மட்டக்களப்பு, டிசெ.31

எங்களுடைய காணிகளிலிருந்து எம்மை வெளியேற்றுவதற்கு அம்பாறை மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இது இனவாதம் கொண்டது. அவ்வாறு எம்மை வெளியேற்ற மேற்கொள்ளும் நடவடிக்கையை எம்மால் அனுமதிக்க முடியாது என அஷ்ரப் நகரக் கிராம மக்கள் தெரிவிக் கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அஷ்ரப் நகர்க் கிராமத்திலுள்ள 31 பொதுமக்களைத் தங்களின் 66ஏக்கர் காணிகளிலிருந்து வெளியேற்றுமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபர் சுனில் கன்னங்கர அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருக்கு எழுத்துமூலம் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக குறித்த காணி உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினர்.

அஷ்ரப் நகரிலுள்ள மேற்படி 31 பேருடைய காணிகளின் அனுமதிப் பத்திரங்கள் மிக நீண்ட காலமாகப் புதுப்பிக்கப்படவில்லை. அதனால் அவை வலுவிழந்துவிட்டன. எனவே குறித்த காணிகளிலுள்ளவர்களை உடனடியாக வெளியேற்றவும் என அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருக்கு அம்பாறை மாவட்ட அரச அதிபர் 2010.12.01 ஆம் திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும் 1980ஆம் ஆண்டு மேற்படி காணிகளுக்கான சட்டபூர்வ அனு மதிப்பத்திரங்களை அரசு குறித்த காணி உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அஷ்ரப் நகரிலுள்ள குடியிருப்பாளர்களின் காணிகளினூடாக யானைப் பாதுகாப்பு வேலி அமைக்க வனவிலங்குத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்தனர். காணீச் சொந்தக்காரர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இவ்விவகாரம் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. இதனையடுத்து மேற்படி பிரச்சினைக்கு சுமூக தீர்வொன்றைக் காணும் பொருட்டு அம்பாறை மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட குழுவினர் கடந்த ஒக்டோபரில் அஷ்ரப் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அப்போது குறித்த காணிகளுக்கான உரிமையை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களை காணி உரிமையாளர்கள் 14 நாள்களுக்குள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரினூடாகத் தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டுமென அரச அதிபர் உத்தரவிட்டார்.

அதற்கிணங்க 31 பேர் தமது காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களின் பிரதிகளை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரினூடாக அம்பாறை மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தப் பின்னணியிலேயே தற்போதும் மேற்படி 31பேரினதும் காணிகளுக்கான உரிமத்தை இரத்துச் செய்து அவர்களை அங்கிருந்து வெளியேற்ற அரச




அதிபர் கன்னங்கர விடாப்பிடியாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதுப்பிக்கப்படாத 185 அனுமதிப்பத்திரங்களைக் கொண்ட காணிகள் திகவாபிப் பிரதேச சிங்களவர்களிடம் உள்ளன. இது தொடர்பாக அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவில்லை. அஷ்ரப் நகர் முஸ்லிம் மக்களின் காணிகள் தொடர்பாக மட்டும் அரச அதிபர் இவ்வாறு கடுமையாக நடந்து கொள்வதிலுள்ள மர்மம் என்ன? - எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். (21)

### ஆழிப்பேரலை அனர்த்தம்

## ஆறு வருடங்களாக முகாம்களில் தவிக்கும் 405 குடும்பங்கள்

அம்பாறை, டிசெ.31

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்த தங்களுக்கு இன்னும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை- என்று அம்பாறை மாவட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் வீடுகளை இழந்தோரில் அநேகமானோருக்கு மீண்டும் வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்பட்ட போதிலும், குறிப்பாக சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த 405 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேர் இன்னமும் தற்காலிக இருப்பிடங்களிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தொடர்ந்தும் தங்கியிருக்கின்றார்கள்.

ஆறு மாதங்களுக்கென அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களில் கடந்த ஆறு வருடங்களாகப் போதிய அடிப்படை வசதிகளின்றி, நெருக்கடியான நிலையில் இவர்களில் கணிசமான குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன என சாய்ந்தமருது ஜூம்மா பள்ளிவாசல் தலைவரான அப்துல் முனாஹிர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

தங்களின் இந்த நிலை குறித்து ஜனாதிபதி, முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 14 பேருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்திருந்த போதிலும், ஜனாதிபதி ழற்றும் வேறு ஒரு சிலரிடமிருந்து மட்டுமே பதில் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, வீடில்லாத காரணத்தினால் தமது பெண் பிள்ளைகளின் திருமணங்கள் கூடத் தடைபடுவதாகக் குறித்த பிரதேசத்திலுள்ள பெற்றோர்களில் பலரும் கவலையடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். (ளி)

## திருகோணமலை மாவட்டத்தில் இயல்பு நிலை பெரிதும் பாதிப்பு

திருகோணமலை, டிசெ.31

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பல அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள சேனையூர், கட்டைப் பறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, கிளிவெட்டி, வெருகல், ஈச்சிலம்பற்று, திருகோணமலையின் சில இடங்கள் ஆகியவை உட்பட பல பிரதேசங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

மூதூர் கிழக்கில் மீள் குடியமர்ந்த தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். சில குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன. மழை நீடிக்குமானால் மூதூர்-திருகோணமலை பஸ் போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகும்.

தோப்பூர், கிளிவெட்டி, தம்பலகாமம், கந்தளாய் ஆகியவை உட்பட பல இடங்களில் பெரும்போக நெல்வயல்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பாக இருந்து வருவதால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. (ளி)

## புல்மோட்டைப் பிரதேசத்தில் போக்குவரத்து பாதிப்பு

திருகோணமலை, டிசெ.31

புல்மோட்டையில் கடந்த சில தினங்களாக அடைமழை பெய்து வருகிறது. இதனால் போக்குவரத் துகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இறால் பிடிப்பதில் ஈடுபடும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது தவிக்கின்றனர். ஜின்னாபுரம், பட்டிக்குடா, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் முக்கிய வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்துகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அடைமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. வெள்ளப் பெருக்கால் இப்பகுதி மக்கள் இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகராதிச் சொற்கள்...

திகைத்தல் :
அதிர்ச்சியடைதல்.
அசம்பாவிதம் :
களவு முதலான தீயசெயல்கள்.
அசமந்தம் :
சுறுசுறுப்பற்ற நிலை.
அசிங்கம் :
தரக்குறைவு.
அசிரத்தை :
அக்கறையின்மை.
அசைபோடுதல் :
பழைய நினைவுகளில் ஆழ்தல்.
அசைவம் :
உணவில் மீன்
இறைச்சி முதலின
கொள்ளுதல்.
அசௌகரியம் :
வசதி குறைவு.
அட :
வியப்புச் சொல்.
அடே :
விளிச்சொல்.

கௌதமி

## தமிழ் வருடங்களின் 60 பெயர்களில் சில..

தமிழ் ஆண்டுகள் ஒவ்வொன் றிற்கும் ஒரு பெயர் உண்டு. இது மொத்தம் 60 ஆகும். வரிசையாக 60 ஆண்டுகளின் பெயர்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| 11. ஈஸ்வர | 21. சர்வசித்து |
| 12. வெகுதானிய | 22. சர்வதாரி |
| 13. பரமாதி | 23. விரோதி |
| 14. விக்கிரம | 24. விக்ருதி |
| 15. விஷூ | 25. கர |
| 16. சித்திரபானு | 26. நந்தன |
| 17. சுபானு | 27. விஜய |
| 18. தாரண | 28. ஜய |
| 19. பார்த்திப | 29. மன்மத |
| 20. விய | 30. துன்முகி |

## நொந்தது போதும் என்று வாழ்வோம்...

புத்தாண்டே வருக..
நல்வாழ்வு தருக!
யுத்தம் என்ற சொல் ஒழியட்டும்
சமாதானம் என்று ஒளிரட்டும்!
ஆயுத வன்முறை அழியட்டும்
ஆனந்தத்தில் பரம்பரை மகிழட்டும்!
பட்டினிச் சாவு எம்மை விட்டுப் பறக்கட்டும்
படிப்படியாய் எம் வாழ்வு உயரட்டும்!
சோகம் ஊரை விட்டு ஓடட்டும்
சொந்தம் சாதி மதம் மறந்து ஆடட்டும்!
இரத்தக் கறை படிந்த வாழ்வு கருகட்டும்
சூரிய மலர் போல் நம்நாடு மலரட்டும்!
பகைமைக் குணம் புதைகுழியில் உறங்கட்டும்
பார்வை அற்றவரும் எம் பண்பால் விழிக்கட்டும்!
மதி நுட்பம் விண் மீன்கள் போல் பரவட்டும்
ஏற்றுமதியால் எல்லோராலும் எம் நாடு மதிக்கப்படட்டும்!
இந்த ஆண்டு கடந்து போகட்டும்
வரப்போகும் ஆண்டு வென்று ஆழட்டும்!

ம.அஜித்கன்
சரவணை




## காக்கைஒன்று..



காக்கை ஒன்று மரத்திலே
முட்டை இட்டுக் காத்தது
பார்த்துப் பாம்பு ஒன்று வந்து
கொத்திக் குடித்துச்
சென்றது.

வேளை தோறும்
நடக்கும் இந்த
வேதனையைக்
காக்கையார்
மூளை கொண்டு
தடுத்திட
முயன்று வெற்றி கொண்டனர்.

அந்த நாட்டு மன்னனின்
அருமை மனைவி
குளிக்கையில்
நல்ல தருணம் பார்த்துக் காகம்
நகையைக் கௌவிச் சென்றது

அரசி நகையைக் காக்கையார்
அந்தப் பொந்தில் போட்டனர்
விரைந்து வந்த வீரர்கள்
மரத்தைத் தறித்து வீழ்த்தினர்

பொந்தில் இருந்த பாம்பனார்
பொங்கி எழுந்து சீறினார்
அந்த வேளை வீரர்கள்
அரிந்து பாம்பைக் கொன்றனர்.

புத்தியாலே காகம் இந்தப்
புதுமைதனைச் செய்தது
சித்தி கொள்ள நாம் அந்த
சிந்தனையைப் போற்றுவோம்.

## குரங்கு வைத்தியம்




''குரு நாதா! இனிமேல் நாம் மருத்துவத் தொழில் செய்தால் என்ன?'' எனக் கேட்டான், முட்டாள். ''அதனால் நமக்கு என்ன பயன்?'' என்று பரமார்த்த குரு கேட்டார்.

''பணம் கிடைக்கும். அத்துடன் புண்ணியமும் கிடைக்கும்''என்றான் மூடன்.

''அப்படியே செய்வோம்'' என்றார் குரு.

''மனிதர்களுக்கு மட்டும்தானா?'' என்று கேட்டான் மண்டு.

''மனிதர்க்கும் வைத்தியம் செய்வோம்; மாட்டுக்கும் செய்வோம்; குழந்தைக்கும் செய்வோம்; குரங்குக்கும் செய்வோம்!'' என்றான் மட்டி. பரமார்த்தரும் அவரது ஐந்து சீடர்களும் மருத்துவம் செய்யும் செய்தி ஊர் முழுதும் பரவியது. காய்ச்சலால் அவதிப்பட்ட ஒருவன் வந்தான். அவன் உடலைத் தொட்டுப் பார்த்த மடையன், ''குருவே! இவன் உடம்பு நெருப்பாகச் சுடுகிறது!''என்றான்.

''அப்படியானால் உடனே உடம்பைக் குளிர்ச்சி அடையச் செய்ய வேண்டும்!'' என்றார் பரமார்த்தர்.

''அதற்கு என்ன செய்வது?'' எனக் கேட்டான் முட்டாள்.

''இந்த ஆளைக் கொண்டுபோய்த் தொட்டியில் உள்ள தண்ணீரில் அமுக்கி வையுங்கள். ஒரு மணி நேரம் அப்படியே கிடக்கட்டும்'' என்றார் குரு. உடனே மட்டியும் மடையனும் அந்த நோயாளியைத் தூக்கிக் கொண்டு போய், தொட்டி நீரில் போட்டனர். முட்டாளும் மூடனும் மாறி மாறி அவனை நீரில் அமுக்கினார்கள். நோயாளியோ ''ஐயோ, அம்மா!'' என்று அலறியபடி விழுந்தடித்து ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து ஒரு கிழவி வந்தாள். ''கண் வலிக்கிறது'' என்றாள்.

''இப்போது நேரமில்லை. உன் கண்ணை மட்டும் தோண்டி எடுத்துக் கொடுத்து விட்டுப்போ. சரி செய்து வைக்கிறோம்!'' என்றான் முட்டாள். கிழவியோ, ''ஐயையோ'' என்று கத்திக் கொண்டு ஓடினாள். சிறிது நேரம் சென்றது. ''உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்குகிறது என்றபடி ஒருவன் வந்தான்.

''சும்மா இருப்பதால்தான் ஆடுகிறது, உடம்பு முழுவதும் கயிறு போட்டுக் கட்டி விடுங்கள்! அப்போது எல்லாம் சரியாகிவிடும்'' என்றார் பரமார்த்தர். முட்டாளும் மூடனும், வந்தவனை இழுத்துக் கொண்டு சென்று தூணில் கட்டி வைத்தனர்.

கட்டிவைத்த பிறகும் அவன் உடம்பு நடுங்குவதைக் கண்ட மட்டி, ''குருதேவா! இது குளிரால் வந்த நோய். இது தீர வேண்டுமானால், இவன் உடம்பைச் சூடாக்க வேண்டும்!'' என்றான்.

தொடரும்...

## விடுகதைகள்

அபிநயா.இ
தரம் - 4
கைதடி
முத்துக்குமாரசாமி
ம.வி

1. பெட்டியை திறந்தேன் பெருமானைக் கண்டேன் அது என்ன?
2. கொக்கு நிற்க குளம் வத்தும் அது என்ன?
3. நாடு உண்டு வீடு இல்லை, சமுத்திரம் உண்டு அலை இல்லை கடல் உண்டு மீன் இல்லை?
4. கிணறு முட்டப் பயிற்றம் வித்து அது என்ன?
5. வீட்டுக்கு வந்த விருந்தாளி வாசலிலே நின்று விடுவான் அது என்ன?

விடைகள்
1.கச்சான்
2.விளக்கு
3.உலகப்படம்
4.பறங்கள்
5செருப்பு

### தெரிந்து கொள்ள

உற்பத்தி செய்யும் நாடுகளும், உற்பத்தி யுத்த விமானமும்

1. ஐக்கியராச்சியம்-எவ் 16, எவ்18
2. ஐக்கியஅமெரிக்கா-கொன்கொட் யக்குவார்
3. பிரான்ஸ்-மிராஜ் வான் பேருந்து
4. இந்தியா-சுப்ப சொனிக் ஜெட் மிக், அவ்றே சானெற் புட்காரா
5. இஸ்ரேல்-கிபிர்
6. ரஷ்யா-மிக்

## சிறார்களின் கொண்டாட்டம்...








ஆனந்தம்: கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி யில் சிறுவர் கலைவிழா நிகழ்வுகள் அண்மை யில் நடைபெற்றது. இந் நிகழ்வின்போது முன்பள்ளி மாணவர்களின் காவடி நடனமும், சிறுமியர்களின் கோலாட்டமும், மாணவர்களின் நடனம் ... நடைபெறுவதைக் காணலாம்.

(405)

## சிந்தனைக்கு

1. தோல்வியைக் கண்டு துவளாதீர்கள் அறிவை மேன்மேலும் பெருக்கிக் கொள்ளத் தரப் பட்ட வாய்ப்பே தோல்வி.
2. நாக்கு மூன்று அங்குல நீளம்தான் ஆனால் அது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொன்று விடும் ஆற்றல் கொண்டது.
3. தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இருவழிகள்.
4. உடல் நோயைக் குணப்படுத்த விரும்பி னால் முதலில் அந்த நோய் மனதளவில் குணமாகி விட்டதாக உறுதியாக நம்புவோம்.

சிலையூர் தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்., ஆப்கானிலும் தாக்குதல் நடத்த மகளிர் தற்கொலைப் படை அமைப்பு

## பொலிஸாரிடம் சிக்கிய 12 வயது சிறுமி தகவல்

இஸ்லாமாபாத்,டிசெ.31

ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் தாக்குதல்களை நடத்த அனைத்து மகளிர் தற்கொலைப் படைகளை தலிபான்கள் தயாரித்து வைத்துள்ளனர். இவற்றில் நூற்றுக்கணக்கான பெண்கள் ஆயுதப்பயிற்சியும் நாசவேலைகளில் தனிப்பயிற்சியும் பெற்றுள்ளனர்.

பொலிஸாரிடம் சிக்கிய மீனா குல் (வயது - 12) என்ற ஆப்கானிஸ்தானிய சிறுமிதான் இது பற்றிய விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

2010 ஜனவரி மாதமே ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகிலுள்ள முண்டா என்ற இடத்தில் இச் சிறுமி பிடிபட்டார். அப்போது பொலிஸார் அவரை நீ யார் என்று கேட்டபோது தற்கொலைப் படையைச் சேர்ந்தவள் என்றார்.

சிறுமி ஏதோ உளறுகிறாள் என்றே விசாரணை அதிகாரிகள் நினைத்தனர். பின்னர் அவளைத் தங்களுடைய முகாமிலேயே வேலைக்கு வைத்துக்கொண்டனர்.

பஜௌர் என்ற பழங்குடிகள் மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபை அளிக்கும் உணவு உதவிகளை வாங்க நின்ற வரிசை மீது தற்கொலைப்படையைச் சேர்ந்த பெண் தாக்குதல் நடத்திய பின்னர்தான் பாதுகாப்புப் படையினருக்கு மீனாகுல் நினைவே வந்தது.

எனவே அவளை மீண்டும் அழைத்து விசாரணை நடத்தினர். மத நம்பிக்கையில் ஆழ்ந்தவர்களையும், ஏழைகளையும் தலிபான்கள் அணுகுகின்றனர். மதத்துக்காக சில தியாகங்களைச் செய்து சொர்க்கம் செல்லத் தயாரா என்று கேட்கின்றனர்.

அப்பாவிகளான மக்கள் தங்களுடைய மதத்துக்காக உயிரையும் துறப்பது கிடைத்தற்கரிய வாய்ப்பு என்று கருதி அவர்களிடம் சேர்கின்றனர். அதன் பின்னர் அவர்கள் ஆயுதப் பயிற்சி, நாசவேலைகளில் பயிற்சி ஆகியவற்றை மத போதனையுடனேயே அளிக்கின்றனர். பெண்ணாகப் பிறந்தவர்கள் இதுபோன்ற இறைபணியில் ஈடுபட்டால் சொர்க்கத்துக்கு நேராகச் செல்லலாம் என்று மூளைச் சலவை செய்கின்றனர்.

மீனா குல் மட்டுமல்ல அவளுடைய குடும்பமே இந்தத் தற்கொலைப்படையில் ஈடுபட்டிருக்கிறது. மீனா குல்லின் அண்ணன், அண்ணி, தங்கை ஆகியோரும் இதில் சேர்ந்துள்ளனர். மீனா குல்லின் தங்கை ஒரு தற்கொலைத்தாக்குதல் முயற்சியில் இறந்துவிட்டாள். அண்ணி ஜைனப் ஒரு பிரிவுக்குத் தலைவியாக இருக்கிறார்.

தங்கையுடன் சென்று மனித வெடிகுண்டாகச் செயல்படத்தான் மீனாகுல்லும் அனுப்பப்பட்டாள். ஆனால் மீனா குல்லுக்கு உயிரைவிடத் துணிச்சல் இல்லை. எனவே இறப்புக்கு அஞ்சிய அவள், தாக்குதல் நடத்த வேண்டிய இடத்திலிருந்து தப்பி ஓடிவந்து பாதுகாப்புப் படையினரிடம் தஞ்சம் புகுந்துள்ளாள்.

தான் யார், எங்கிருந்து வருகிறேன் என்பதையெல்லாம் அதிகாரிகளிடம் தெரிவித்தார். பாதுகாப்புப்படை அதிகாரிகள் இதையெல்லாம் நம்பத் தயாராக இல்லை. எனவே அவரை முகாமிலேயே வேலைக்கு வைத்துக்கொண்டனர்.

இந்த நிலையில் பஜௌர் மனித வெடிகுண்டு அவர்கள் கண்களைத் திறந்தது. மீனாவை மீண்டும் வரவழைத்து விசாரித்தனர். அப்போதுதான் நூற்றுக்கணக்கான பெண்கள் சிறு சிறு குழுக்களாக இப்படி மனித குண்டுகளாக உலா வருவதை அறிந்தனர்.

ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் தலிபான்கள் ஆதிக்கம்தான் செல்லுபடியாகிறது. இப்போதே பெண்கள் பர்தா அணியாவிட்டால் கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர். பொது இடங்களில் பெண்கள் முகத்தை மறைக்காமல் வரக்கூடாது என்ற தடையை தலிபான்கள் அமுல்படுத்துகின்றனர்.

இதனால் வருவது யார் பெண்ணா, பெண் வடிவில் ஆணா என்று கூட சோதிக்க முடியாமல் பாதுகாப்புப் படையினர் திணறிவருகின்றனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் பெண்களைச் சோதிக்காமல் இருக்க முடியாது; ஆனால் சோதித்தாலும் தலிபான்கள் சண்டைக்கு வருவார்கள். எனவே பாதுகாப்பு ஏற்பாடுகளில் புதிய நெருக்கடிக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் உள்ளாகியிருக்கின்றனர்.

## ரஷ்ய இராணுவ விமான விபத்து; 12பேர் பலி; இருவரின் சடலங்கள் மீட்பு

மாஸ்கோ, டிசெ. 31

ரஷ்யாவில் இராணுவத்துக்குச் சொந்தமான சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 12 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்ய விமானப்படைக்குச் சொந்தமான விமானம் ஏஎன்-22 அந்தேய், செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் (உள்ளூர் நேரப்படி) துலா விமான நிலையத்தை நெருங்குகையில் திடீரென மாயமானது.

அந்த விமானத்துடனான தகவல் முற்றிலுமாக அறுபட்டு போனது. ஐந்து மணி நேரத்துக்குப் பின்னர் இந்த விமானத்தின் பாகங்கள் அருகிலுள்ள கிராஸ்னி ஒக்டிபார் எனும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் பனி சூழ்ந்த பகுதியிலிருந்து விமானத்தில் பயணம் செய்த 12 பேரின் சடலங்களையும் மீட்டனர்.

விமானப் படையில் அதிக சரக்குளை ஏற்றிச் செல்லும் விமானமாக அந்தேய் கருதப்படுகிறது. இந்த விமான விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்ட பின்னரே விபத்துக்கான காரணம் தெரிய வரும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பாக். பிரதமரின் பதவிக்கு ஆபத்து கூட்டணிக்கட்சிகள் போர்க்கொடி

இஸ்லாமாபாத், டிசெ.31


பாகிஸ்தானில் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சி நடந்து வருகிறது. இந்தக் கட்சிக்கு போதிய பெரும்பான்மை இல்லை. பல்வேறு சிறு கட்சிகளைக் கூட்டணியில் சேர்த்துக்கொண்டு ஆட்சியில் உள்ளது.

இந்த நிலையில் கூட்டணி கட்சியான முதாகிடா குவாமி கட்சி கூட்டணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. இதனால் பெனாஸிர் கட்சி பெரும்பான்மையை இழந்துவிட்டது.

எனவே ஆட்சியைக் காப்பாற்றும் முயற்சியில் ஜனாதிபதி சர்தாரி இறங்கியுள்ளார். முதாகிடா குவாமி கட்சியை அவர் சமரசப்படுத்த தூதுக்குழுவை அனுப்பினார். ஆனால் சமரசம் ஏற்படவில்லை.

இன்னொரு கட்சியான ஜமாத் உலமா இஸ்லாம் கட்சி ஏற்கனவே ஏற்பட்ட பிரச்சினையால் கூட்டணியிலிருந்து விலகியிருந்தது. அந்தக் கட்சியை சமாதானப்படுத்தி மீண்டும் கூட்டணியில் இடம்பெறச் செய்ய முயற்சிக்கின்றனர்.

இதற்காக உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தலைமையிலான குழு ஜமாத் உலமா இஸ்லாம் கட்சித் தலைவர் பஸ்லூர் ரகுமானைச் சந்தித்து பேசியது. அவர் கூட்டணியில் சேர சம்மதம் தெரிவித்தார்.



ஆனால் பிரதமர் ஹிலானியை மாற்றிவிட்டு வேறு ஒருவரை பிரதமர் ஆக்கினால் மட்டுமே ஆதரவு கொடுப்போம் என்று நிபந்தனை விதித்துள்ளார்.

எனவே ஹிலானியை நீக்கலாமா? என்று சர்தாரி ஆலோசனை நடத்தி வருகிறார். இதனால் ஹிலானி பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் ஹிலானி பிரதமர் பதவியை விட்டு விலகத் தயாராக இல்லை. பதவியிலிருந்து விலகச் சொன்னால் அவர் சர்தாரிக்கு எதிராக அதிரடி நடவடிக்கையில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அணு ஆயுதக் குறைப்பு விவகாரத்தை இரு கொரியாக்களும் பேசித் தீர்க்கலாம்

### தென்கொரிய ஜனாதிபதி தெரிவிப்பு

சியோல், டிசெ.31

"இரு கொரிய நாடுகளுக்கிடையிலான அணு ஆயுதக் குறைப்பு விவகாரத்தைப் பேச்சுகள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்"

- தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பாக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எனினும், மீண்டும் ஆறு நாடுகள் பேச்சுகளை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் குறைவுதான் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். வடகொரியா, 2012 இற்குள் அணு ஆயுத வல்லரசாக வளரத் திட்டமிட்டுள்ளது.

அதற்கு அடிப்படைத் தேவையான அணுகுண்டு தயாரிப்பதற்கு யுரேனியம் செறிவூட்டலில் அது தற்போது ஈடுபட்டு வருகிறது.

ஏற்கனவே இரண்டு முறை அணுகுண்டுப் பரிசோதனை செய்த வடகொரியா, அடுத்த ஆண்டில் மூன்றாவது தடவையும் அணுகுண்டு பரிசோதனையில் ஈடுபடப்போகிறது என சமீபத்தில் தென்கொரியப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருந்தது.

இந்நிலையில், புதன்கிழமை தென்கொரிய வெளியுறவுக் கொள்கையை வெளியிட்டு பேசிய அந்நாட்டு ஜனாதிபதி லீ மியுங் பாக் கூறியவை வருமாறு:-

"வடகொரியா தனது அணு ஆயுதங்களை அகற்றுவது குறித்த விவகாரத்தை, ஆறு நாடுகள் பேச்சுகள் மூலம் தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

உலக அரங்கில்

அதேநேரம், தென்கொரியா தனது போர் ஒத்திகைகளைக் கைவிடாது. கொரிய தீபகற்பத்தில் அமைதி நிலவுவது ஒன்றுதான் முன்னேற்றத்திற்கு வழி. என்றாலும், அதை வெறும் இராஜதந்திர நடவடிக்கைகளால் மட்டும் சாதித்து விட முடியாது.

வட- தென்கொரியாக்களுக்கு இடையிலான பேச்சுகள் மூலம் அமைதியை நிலைநாட்டவும் முடியும்."

- இவ்வாறு பாக் தெரிவித்துள்ளார்.

ஆறு நாடுகள் பேச்சுகளோ அல்லது இரு கொரிய நாடுகளுக்கிடையிலான பேச்சுகளோ நடப்பதற்குப்பெரும்பான்மையும் வாய்ப்பில்லை.

அப்படி நடந்தாலும், வடகொரியாவின் அணு ஆயுதக் குறைப்பு என்பது அதில் இடம் பெறாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இரு கொரிய நாடுகள், சீனா, ரஷ்யா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய ஆறு நாடுகள் இவ்விவகாரத்தை வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகுகின்றன என்கின்றனர் அவர்கள்.

அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளின் கருத்தையே ஜப்பானும் வழி மொழிகிறது. ஆனால், பேச்சுக்கு இணங்கும்படி வடகொரியாவை வலியுறுத்துகிறது. முன் நிபந்தனை எதுவும் இல்லாமல் பேச்சு நடக்க வேண்டும் என ரஷ்யா கூறி வருகிறது.

சீனாவைப் போலவே தனது எல்லைக்கருகில் ஒரு அணு ஆயுத வல்லரசு உருவாகுவதை ரஷ்யாவும் விரும்பவில்லை.

## பாக். இராணுவத்துடன் மோதல்: 7 தலிபான் தீவிரவாதிகள் பலி


பெஷாவர்,டிசெ.31

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினருடன் புதன்கிழமை நடந்த மோதலில் தலிபான் தீவிரவாதிகள் 7 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் வடமேற்கு மாகாணத்தில் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியையொட்டி உள்ள குர்ரம் பழங்குடியின பகுதியில் பாதுகாப்புப் படையினர் தலிபான் மறைவிடத்தை சுற்றி வளைத்துத் தாக்கினர்.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகளின் 3 முகாம்களும் ஆயுத கிடங்கும் அழிக்கப்பட்டன என பாதுகாப்புப் படை அதிகாரி மேஜர் பஸ்லூர் ரெஹ்மான் தெரிவித்தார்.

குர்ரம் பகுதியில் தலிபான் இயக்கத்தினர் கடந்த பல ஆண்டுகளாக முகாம்கள் அமைத்து பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்காவின் நெருக்கடியை அடுத்து பாகிஸ்தான் இராணுவம் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.



(இடப்பக்கம் இருந்து) ஐவரி கோஸ்ட்டுக்கான ஐ.நா. தூதர் சோய் யாங் இன், சியரா லியோன் ஜனாதிபதி கொரமா, பெனின் ஜனாதிபதி யாயி, கேப் வெர்டே ஜனாதிபதி பிரஸ் ஆகியோர் பேச்சு நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப் பேற்றினால் மகிழ்ச்சியும் தாயிற்கு ஏற்படும் மன அழுத்தமும்



கருவுற்ற காலத்தில் வெளித்தோற்றத்தில் மட்டுமே நமக்கு மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

உடலினுள், ஹோர்மோன்களின் செயற்பாட்டினாலும் நம்முடைய உடலின் அனைத்து இயக்கங்களுமே மாறுபட்டுப் போகின்றன். இப்படிப் பத்து மாதகாலம் இந்த மாற்றங்களுக்கே பழகிப்போன நம் உடல், திடீரென்று ஒரே நாளில் பழைய நிலைமைக்குத் திரும்பிவிடாது. அந்த மாற்றங்கள் முற்றிலுமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது பழைய நிலைக்கு வரக் குறைந்தபட்சம் ஆறு வார காலமாவது ஆகும். சிசேரியன் ஆனவர்களுக்கும் இது பொருந்தும் என்றாலும், காயங்கள் 'இருப்பதால் அவர்களுக்குக் கூடுதல் நேரம் பிடிக்கும்.

குழந்தை பிறந்ததும், ''சூடாகச் சாப்பிடக்கூடாது..! பச்சைத் தண்ணீரில் கை வைக்காதே..! குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது மல்லிகைப்பூ ஆகாது! மாம்பழமா... கூடவே கூடாது!'' என்று நம் வீட்டுப் பெரியவர்கள் ஒரு பெரிய பட்டியலே போடுவார்கள். உண்மையில் இதெல்லாம் தேவையில்லாத பயங்கள்தான்!

இன்னும் சில வீடுகளில் குழந்தை பெற்றுக் கொண்ட பெண்ணுக்குத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வெறும் பாண் மட்டும்தான் சாப்பிடக் கொடுப்பார்கள். இதெல்லாம் ரொம்பத் தவறானது. பிரசவமான பெண்ணுக்குச் சாதாரணமாக, நாம் வீட்டில் சாப்பிடும் உணவு வகைகளைக் கொடுப்பதுதான் சிறந்தது. அப்படிக் கொடுத்தால்தான் அம்மாவுக்கு இயல்பாகத் தாய்ப்பாலும் சுரக்கத் தொடங்கும்.

சாதாரண பிரசவத்திற்கே சில சமயங்களில், தையல் போட வேண்டி வரலாம், சிசேரியனுக்கோ சொல்லவே வேண்டாம். இப்படிக் காயப்பட்ட பெண்களுக்குத் தண்ணீரே கொடுக்கக் கூடாது... அப்படியே கொடுத்தாலும் தொண்டையை நனைக்குமளவுக்குக் கொடுத்தால் போதும் என்று பல வீடுகளில் சொல்வார்கள்.

தண்ணீர் அதிகம் குடித்தால் காயத்தில் சீழ் பிடித்துவிடும் என்பது அவர்களின் விளக்கம். இந்தத் தண்ணீர்க் கட்டுப்பாடு சில நாள்கள்தான் என்றில்லை... சில மாதங்கள் வரைகூடத் தொடரும்! இதுவும் மிகவும் தவறான விடயம்.

உண்மையில் இந்தச் சமயத்தில்தான் தாய் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அப்படி நிறையத் தண்ணீர் குடித்தால்தான் தாய்க்கு 'யூரின் இன் பெக்ஷன்' போன்ற பிரச்னைகள் ஏற்படாது.

குழந்தை பிறந்தவுடனேயே அத்தனை நாளும் பெரிதாகி, குழந்தையைத் தாங்கி ஏந்திய தாயின் கர்ப்பப்பை மெதுமெதுவாகப் பழைய நிலைக்கு வந்துவிடும். அந்தச் சமயத்தில் இரத்தப்போக்கு வருவது இயற்கை. 45 வாரங்கள் வரைக்கும் இந்த இரத்தப்போக்கு நீடிக்கும். அதற்குமேல் போனால் தவறு.

இப்படி அதிகப்படியாக இரத்தப்போக்கு ஏற்படக் காரணம் என்ன..?

தாயின் கர்ப்பப்பையில் நோய்த்தொற்று ஏதேனும் ஏற்பட்டிருந்தால் இப்படி ஆகலாம். சில சமயம் தாயின் கர்ப்பப்பையில் நஞ்சின் பாகங்கள் அல்லது சில ரிசுக்கள் வெளி வராமல் விட்டுப் போயிருந்தாலும் அதிகப்படியான இரத்தப்போக்கு ஏற்படலாம்.

இப்படி ஆகும் போது மருத்துவரை அணுகுவதே சிறந்தது. மருந்து மாத்திரைகள் மூலம்தான் இதற்கு நிரந்தரத் தீர்வு கொடுக்க முடியும். இதைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்:

சில பெண்கள் பிரசவம் ஆனதும் தங்களையறியாமல் ஒருவித மன அழுத்தத்தால் அவதிப்படுவதுண்டு. இந்த நிலைக்கு ஆளாகும் பெண்கள் தங்களுக்குள் தாங்களாகவே காரணமின்றி அழுவார்கள். குழந்தையை கவனிக்கக் கூட ஆர்வம் காட்டாமல் ஒருமாதிரி விட்டேத்தியாக இருப்பார்கள். இதுபோன்ற சில அறிகுறிகளால் இவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த நிலைக்குத்தான் 'அரிதாக' என்று பெயர். பிரசவம் ஆன கொஞ்ச நாள்களில் இது தானாகவே சரியாகத் தொடங்கும்.

எவோன்

சிலருக்கு இதுபோல எல்லாம் சாதாரணமாக இல்லாமல் தீவிரமான பிரச்சினையாக இது உருவெடுக்கலாம். அப்படி அது மோசமான நிலையை அடையும் போது அதை அரிதாக என்று பெயரிட்டு அழைக்கிறோம். இது ஏற்கெனவே மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வரலாம். சாதாரண பெண்களுக்கும் இது போன்ற நிலைமை தீவிரமடைவதுண்டு.

இந்த நிலை ஏற்படும்போது சம்பந்தப்பட்ட பெண்ணைத் தனியாக விடுவது நல்லதல்ல. காரணம், அவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இந்தச் சமயத்தில் அதிகப்படியாக ஏற்படும். அதனால் அவர்களை மருத்துவரின் கண்காணிப்பில் வைத்திருப்பதுதான் நல்லது.

சிலசமயம் ஆவேசத்தின் உச்சியில் இந்தப் பெண்கள் தங்களையும் அறியாமல் குழந்தையைக் கொன்றுவிடும் அளவுக்கேகூடச் செல்வார்கள்!

சிறந்த மனநல மருத்துவரிடம் இவர்களை அழைத்துச் சென்று சிகிச்சை கொடுத்துவர, மெதுவாகக் குணம் தெரியும். சிகிச்சையின்போது இவர்களுக்கு மருந்துகள் கொடுக்க வேண்டி வரும்போது, சில சமயம் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதைக்கூட நிறுத்த வேண்டி வரலாம்..


குழந்தை பிறந்ததும் பெண்களுக்கு இதுபோன்ற மனரீதியான மாறுதல்கள் ஏற்படுவதோடு, வெளித்தோற்றத்திலும் பல மாற்றங்கள் ஏற்படலாம். நிறையப் பேருக்கு ஏற்படுவது தலைமுடி கொட்டும் பிரச்சினை இது சாதாரண விடயம்தான்.

கர்ப்பமாக இருந்த காலத்தில் நம்முடைய உடலில் ஹோர்மோன்களின் செயற்பாடுகள் சற்றே அதிகப்படியாக இருக்கும். அந்தச் சமயத்தில் கூடுதல் ஊட்டம் பெற்று முடி நன்றாக வளரத் தொடங்கும். குழந்தை பிறந்ததும் ஹோர்மோன்களின் செயற்பாடுகள் வழக்கம்போல ஒரு கட்டுக்குள் வந்துவிடும். அந்தச் சமயத்தில்தான் கூந்தல் உதிரும் பிரச்சினை தலைதூக்கும். இதைத் தடுக்க வழியில்லை என்றாலும் ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட்டுவர, மீண்டும் தலைமுடி இயல்பாக வளர வாய்ப்புள்ளது.

கர்ப்பகாலத்தில் நம் வயிற்றின் தசைப்பகுதிகள் கர்ப்பப்பை விரிவடைவதற்கு ஈடு கொடுத்து விரிவடையும். குழந்தை பிறந்ததும் கர்ப்பப்பை தானாகவே சுருங்கிவிடும். ஆனால் விரிவடைந்த வயிற்றின் தசைப் பகுதிகளோ பழைய நிலைக்கு வர நாளாகும்.

குழந்தை பிறந்தவுடன் அதுவரை விரிந்திருந்த வயிற்றுப் பகுதியின் தசைப்பகுதிகள் தளர்ந்து போயிருக்கும். பட்டி அணிவதன் மூலம் ஏற்படும் இறுக்கத்தால் இந்தத் தசைகள் வலுவிழந்துதான் போகுமே ஒழிய அளவில் மாறுதல் ஏற்படாது. தளர்ந்து போன வயிற்றுத் தசைகள் மேலும் தளர்ந்து போகாமல் இருக்கச் சரியான அளவிலான உடைகளை அணிந்தாலே போதும். அதனால், வயிற்றை இயல்பான நிலைக்குக் கொண்டுவர சிறந்தது. இதற்கென்று சில எளிய பயிற்சிகளும் உள்ளன அவற்றை நாளாந்தம் செய்வதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளும் விரைவில் சீராகிவிடும். தாயும் சேயும் நலமாகவும், சந்தோசமாகவும் வாழமுடியும்.

## பெண்ணுக்கான பழமொழிகள்....




எழுத்தாளச் சொன்னாலும் பெண் புத்திபின்புத்தி
கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்
எறியவன் பொண்டாட்டி எல்லார்க்கும் மைத்துனி
பேட்டுக் கோழி கூவி விடியுமா
ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாப் பிறந்தால் எருமை
இந்திரன் கெட்டதும் பெண்ணாலே சந்திரன் கெட்டதும் பெண்ணாலே
ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
மாமியார் உடைத்தால் மண்கலம்; மருமகள் உடைத்தால் பெண்கலம்
மாமியார் மெச்சின மருமகள் இல்லை; மருமகள் மெச்சின மாமியார் இல்லை
மகன் செத்தால் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினால் போகட்டும்

வாணி.

## பெண்ணாகப் பிறந்தால்



பெண்ணொருத்தி பிறந்து விட்டால்
பெற்றவர்களுக்குத் தொல்லை என்பர்
பெண்பிள்ளை பிறக்கவில்லை யெனின்
தாய்க்குப் பெண் பொருத்தம் இல்லை என்பர்

ஊழ் வசத்தால் ஒரு பாவை
ஊன் உடல் பெற்று விட்டால்
உதவாக்கரை என்றே
ஒதுக்கிவைப்பர் வாழ்வெல்லாம்

பெண் கொஞ்சம் படித்துவிட்டால்
செருக்கேறி விட்ட தென்பர்
படிக்காமல் இருந்து விட்டால்
பட்டிக்காடு என்றிடுவார்

ஆணோடு அவர் கொஞ்சம்
அண்டியே பழகி விட்டால்
அக்கம் இல்லை யென்று
கதை பரவும் ஊர் முழுவதும்

நெடுங்காலம் பெண்ணொருத்தி
மணம் இன்றி இருந்து விட்டால்
பெரியதொரு சுமையொன்று
பெற்ற வரும் கூறிடுவார்

பெண்ணாகப் பிறந்து விட்டால்
பேதை பெறும் வரையோ பலகோடி
ஏனிந்த நிலையென்று
பெண்ணெனக்கே புரியவில்லை....

சு.சரணியா

## என் அன்னையே...

அன்னையே.....!
என்னைப் பெற்றெடுக்காத
அன்னையே....
என் மேல் ஏன் உனக்கு
இப்படி ஒரு வெறுப்பு
பெற்றால்தான் பிள்ளையா
சொல் ஒரு வார்த்தை
உன் உதிரம் தானே
என் உடலிலும்...
அதில் ஏதும் சந்தேகமா
விடை தெரியாத
எத்தனையோ வினாக்கள்
என் இதயத்தைத் துளைத்து
உயிரை வெளியேற்றுகின்றது
சொல் ஒரு தடவை
உன் பதிலை....
'சிசேரியன்' மூலம் நான்
பிறந்ததுதான் இத்தனைக்கும் காரணமா?
சொல்லிவிடு என் அன்னையே....
எனக்கு ஒரு பதில் சொல்லிவிடு!



வீணா

## பெண்ணின் மகத்துவம்

★ சேற்றுமீன் சேற்றினுள் புதையுண்டு கிடைக்கிறது. ஆயினும் அம்மீன் மீது சேறு படிவது கிடையாது. அது போல் பெண்கள் எங்கிருந்தாலும் அதில் மாறிப் போய்விடலாகாது.

★ உண்மையான சமத்துவத்திற்கு மதிப்பு கொடுப்போமானால் அங்கு உண்மையான அன்பு இருக்கவேண்டும்.

★ உண்மையான பிள்ளைகளைச் சுமந்து பெறும் வேலையொன்றைத் தவிர மற்றக் காரியங்கள் இருபாலாருக்கும் ஒன்று போலவே இருக்கும் என்பது உறுதி.

★ மனைவிக்குத் தெரியாமல் தவறு செய்கிற கணவன் தனக்குத் தெரியாமல் மனைவியும் அதே தவறைச் செய்ய [illegible] என்பதே [illegible]

கறுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே முதல் வாரம் தமிழகத் தேர்தல் ஆயத்தப் பணிகளில் ஆணையம்

சென்னை, டிசெ. 31

எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் தமிழகத்தில் தேர்தலை நடத்தத் தேர்தல் ஆணையம் ஆலோசித்து வருகிறது எனத் தெரிகிறது.

இதனிடையே, பி.எட். உட்பட அனைத்து வகையான கல்லூரிப் படிப்புகளுக்கான தேர்வையும் ஏப்ரலிலேயே முடிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் தி.மு.க. அரசின் பதவிக் காலம் வரும் மே மாதத்துடன் நிறைவடைகிறது. மாநிலத்தில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஆயத்தப் பணிகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. புதிய வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கும் பணி ஜனவரி 25 ஆம் திகதி தொடங்குகிறது. முன்னதாக, இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 10 ஆம் திகதி வெளியிடப்படுகிறது. வாக்காளர் அடையாள அட்டைகள் ஒருபுறம் தயாராகிக் கொண்டிருக்க, அரசியல் கட்சிகளுடனும் தேர்தல் ஆணையம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இதுவரை இரண்டு கட்டமாக ஆலோசனைகளை நடத்தியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தியது. முதலில் நடந்த ஆலோசனையில், தமிழகத்தில் எத்தனை கட்டங்களாகத் தேர்தலை நடத்துவது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இரண்டாவதாக அண்மையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் வேட்பாளர்களின் வங்கிக் கணக்கில் பணத்தை வரவு வைத்து அதிலிருந்து தேர்தல் செலவுகளை மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறுவதால், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் வாக்குச் சாவடிகளாக மாறும். எனவே, தேர்தல் நேரத்தில் அவைகள் அனைத்தும் தேர்தல் பணிக்குப் பயன்படுத்தப்படும்.

இதனால், அனைத்துத் தேர்வுகளையும் ஏப்ரலுக்குள் முடிக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. ஏப்ரலுக்குள் தேர்வுகள் நிறைவடைவதால் அதன்பின் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வேட்புமனுக்கள் ஏப்ரல் இறுதி வரை பெறப்பட்டு, மே முதல் வாரத்தில் தேர்தல் நடத்த வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தெரிகிறது.

# மீனவர் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்த இலங்கையை இந்தியா வலியுத்த வேண்டும்

## கடலோரக் காவல்படை ஐ.ஜி. கோரிக்கை

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்குமாறு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்த வேண்டும் - என்று கிழக்குக் கடலோரக் காவல்படை ஐ.ஜி.ராஜசேகர் கூறியுள்ளார்.

கிழக்குக் கடலோரக் காவல் படை ஐ.ஜி. ராஜசேகர் விரைவில் ஓய்வு பெறுவதையடுத்து, புதிய ஐ.ஜியாக சத்திய பிரகாஷ் சர்மா பதவியேற்றுக்கொள்ளும் நிகழ்ச்சி, சென்னையில் கிழக்குக் கடலோரக் காவல்படை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அங்கு ஜி.ஜி.ராஜசேகர் தெரிவித்ததாவது:-

மும்பைத் தாக்குதலுக்கு பின்னர், கிழக்குக் கடற்கரை முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது முக்கியமான பிரச்சினை. இதுகுறித்து இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். தாக்குதலைத் தடுக்குமாறு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்த வேண்டும். தாக்குதல் தடுக்கப்பட வேண்டும்.

ரோந்தின்போது பலமுறை தமிழக மீனவர்களைக் காப்பாற்றி இருக்கிறோம். கடந்த 15 மாதங்களில் இந்திய எல்லையில் அத்துமீறி நுழைந்த 589 வெளிநாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களுக்கு அவசர கால எச்சரிக்கை கருவிகளைக் கடற்படை வழங்கியுள்ளது. தூத்துக் குடி மற்றும் புவனேஷ்வரில் தலா ஒரு கடற்படை விமானப் படைத்தளம், ஆந்திரா, காரைக் கால், ஒரிஸா மற்றும் மேற்கு வங்க மாநிலத்தில் புதிதாக கடலோரக் காவல்படைத் தளத்தை அமைக்க கிழக்கு கடலோர காவல் படை திட்டமிட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித் தார்.

# அரசியலில் குதிக்கிறார் வனிதா



சென்னை, டிசெ.31

தந்தை விஜயகுமாருடன் கடுமையாக மோதி வரும் நடிகை வனிதா விரைவில் அரசியல் கட்சி ஒன்றில் சேர்ந்து பணியாற்றப் போகிறார். இதை அவரே கூறியுள்ளார்.

விஜயக்குமார் குடும்பத்துடன் மிகக் கடுமையான மோதலில் வனிதா ஈடுபட்டுள்ளார். தற்போது அவருக்கும், முதல் கணவர் ஆகாஷுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

மகன் விஜய ஸ்ரீஹரி யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பாக விஜயக்குமார், ஆகாஷ் ஆகியோருடன் மோதலில் வனிதா ஈடுபட்டுள்ளார். குழந்தையை வனிதாவிடம் ஒப்படைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ள போதிலும் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

இதுதொடர்பாக சென்னை விமான நிலையத்தில் வைத்து தந்தை விஜயக்குமாருடன் கடும் அடிதடியில் வனிதா குதித்தார்.

இந்த நிலையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் பேசியவை வருமாறு -

எனது மகன் என்னிடம் வந்து சேரும் வரை நான் விடமாட்டேன். இறுதி வரை போராடுவேன். யாருக்கும் நான் பயப்படமாட்டேன். கடவுள் என் பக்கம் இருக்கிறார். அவரது துணையுடன் கடுமையாக போராடுவேன். எனது மகனை நான் விட்டுத் தர மாட்டேன். 9 வருடம் நான் அவனை வளர்த்தேன். ஆனால் என்னிடம் வர மாட்டேன் என்று அவன் கூறுகிறான். அந்த அளவுக்கு அவனைக் குழப்பி வைத்துள்ளனர். அரசியல் கட்சி ஒன்றில் சேர்ந்து பணியாற்றவுள்ளேன். விரைவில் நான் அக்கட்சியில் இணைவேன். எந்தக் கட்சி என்று இப்போது சொல்ல முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

# வீரபாண்டி ஆறுமுகத்தின் மிரட்டலுக்கு அஞ்சமாட்டேன்

## முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவன் தெரிவிப்பு



சென்னை, டிசெ. 31

அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டேன் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சிக்குத் துரோகம் செய்து வருகிறார் என இளங்கோவன் மீது தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் குற்றம்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் இளங்கோவன் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழக அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் என்னைத் தாக்கியும், மறைந்த எனது தந்தை ஈ.வி.கே. சம்பத்தை வம்புக்கு இழுத்தும் அறிக்கை வெளியிட்டுள்ளார். இதனைப் பார்த்ததும் எனக்கு ஐயோ பாவம் என்றுதான் தோன்றியது.

பெரியவர் ஆறுமுகம், இப்போது பொதுவாழ்விலும், அவர் சார்ந்துள்ள கட்சியிலும் இறங்குமுகமாக உள்ளார். அதனைச் சரிகட்ட என்னைக் கொச்சைப்படுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தருவதை நான் வாங்கி கட்டிக் கொள்ள வேண்டும் என்று அதில் கூறியிருக்கிறார். எப்படி என எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அவரது அண்ணன் பழ்னியப்பனுக்கும், அவரது மகன் சுகுமாரனுக்கும், மதுரையில் தா.கிருஷ்ணனுக்கும் ஏற்பட்ட முடிவுபோல எனக்கும் ஏற்படும் என்று பயம் காட்டுகிறாரா எனத்தெரிய வில்லை. உயிரைப்பற்றி எப்போதும் கவலைப்படாதவன் நான்.

நாட்டைக் கொள்ளையடிப்பவர்களையும், பதவியைப் பயன்படுத்தி மக்களின் வாழ்வைப் பாழாக்குபவர்களையும் தட்டிக் கேட்கும் கடமையில் இருந்து எக்காலமும் தவறமாட்டேன்.காங்கிரஸ் கட்சிக்கு எது நல்லதோ, அதைத் தொடர்ந்து செய்வேன். கோடானுகோடி காங் கிரஸ் தொண்டர்களின் உணர்வுகளை யாருக்கும் அஞ்சாமல் தொடர்ந்து சொல்வேன். அதே நேரத்தில் காங்கிரஸ் தலைமைக்கும் குறிப்பாக சோனியா காந்திக்கும் என்றும் கட்டுப்பட்டவனாக இருப்பேன்.

வீரபாண்டி ஆறுமுகம் போன்றவர்களின் மிரட்டலையும், அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராகவே இருக்கிறேன்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெலுங்கானா விவகாரம் குறித்து கிருஷ்ணா குழு இன்று அறிக்கை

# ஆந்திராவில் கலவரம் வெடிக்கும் ஆபத்து: இராணுவம் குவிப்பு

டில்லி, டிசெ.31

தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து, நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா கமிட்டி மத்திய அரசிடம் இன்று அறிக்கை தாக்கல் செய்கிறது. இதையொட்டி கலவரம் வெடிக்கும் ஆபத்து உருவாகி இருப்பதால், ஆந்திர மாநிலத்தில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பெரிய மாநிலங்களில் ஒன்றான ஆந்திராவில் தெலுங்கானா, ராயல சீமா, கடலோர ஆந்திரா ஆகிய மூன்று பிராந்தியங்கள் உள்ளன.

அவற்றில், தெலுங்கானா பகுதியை ஆந்திராவில் இருந்து பிரித்துத் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பது நீண்ட கால கோரிக்கையாகும். கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதியில் இந்தக் கோரிக்கை வலுப்பெற்றுத் தொடர் போராட்டங்கள் நடைபெற்றன.

இதனால், ஆந்திர மாநிலத்தில் அரசு நிர்வாகம் ஸ்தம்பிக்கும் அளவுக்கு நிலைமை மோசமானது. அதைத்தொடர்ந்து, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்று நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் 5 பேர் கொண்ட கமிட்டி ஒன்றை மத்திய அரசு நியமித்தது.

தனித் தெலுங்கானா மாநில கோரிக்கை மற்றும் ஐக்கிய ஆந்திரா கோரிக்கை தொடர்பாக அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று அந்தக் கமிட்டி கேட்டுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டதில் இருந்து அதன் பல்வேறு பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள், அதனால் ஏற்பட்ட பயன்கள் குறித்தும் ஆய்வு செய்து தீர்வுகாண வேண்டிய முக்கிய பிரச்சினைகளை இனம் காணுவது பற்றியும் இந்த கமிட்டி ஆய்வு செய்தது.

உலகம் முழுவதிலும் பரவியுள்ள தெலுங்கு பேசும் மக்கள் மட்டுமின்றி, நாடு முழுவதும் பரபரப்புடன் எதிர்பார்க்கும் ஸ்ரீகிருஷ்ணா கமிட்டி, தனது அறிக்கையை இன்று (வெள்ளிக்கிழமை) மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம் தாக்கல் செய்கிறது.

ஸ்ரீகிருஷ்ணா கமிட்டியின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் அதன் முழு விவரங்களும் உடனடியாக வெளியாகாது என்று தெரிகிறது. அறிக்கையை மத்திய அரசு பரிசீலித்த பின்னர் தான் அது பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், அறிக்கையின் தகவல்கள் கசியக்கூடும் என்பதால், ஆந்திர மாநிலத்தில் கலவரம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அறிக்கையின் முடிவு எப்படி இருந்தாலும், ஒரு தரப்பினருக்குப் பாதகமாக அமையும் என்பதால், ஆந்திர மாநிலம் முழுவதும் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற போராட்டங்களின்போது ரயில் - பஸ் போக்குவரத்து முடக்கப்பட்டு ஆந்திர மாநில அரசின் நிர்வாகமே செயலிழந்தது. மீண்டும் அதுபோன்ற ஒரு சூழ்நிலை உருவாகலாம் என்ற அச்சுறுத்தல் எழுந்துள்ளது.


அதைத்தொடர்ந்து எந்த ஒரு சூழ்நிலையையும் சமாளிக்கும் விதத்தில், ஆந்திர மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஏறத்தாழ 5 ஆயிரம் பேரைக் கொண்ட 50 கம்பனி மத்திய துணை இராணுவப் படையினர் ஆந்திராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தலைநகர் ஐதராபாத் மற்றும் புறநகர் சைபர் பாத் பகுதிக்கு மட்டும் 23 கம்பனி துணை இராணுவப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஆந்திர நிலைமை குறித்து பிரதமர் மன்மோகன்சிங் நேற்றுமுன்தினம் மூத்த மத்திய மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

மத்திய அமைச்சகள் பிரணாப் முகர்ஜி (நிதி), ப.சிதம்பரம் (உள்துறை), ஏ.கே.அந்தோனி (இராணுவம்), வீரப்பமொய்லி (சட்டம்) மற்றும் பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். முக்கியத்துவம் இன்று தாக்கல் செய்யப்படும் ஸ்ரீகிருஷ்ணா கமிட்டி அறிக்கையில், தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான சாதக - பாதக அம்சங்கள் இடம்பெறும் நிலையில், பிரதமரின் இந்த ஆலோசனைக் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் விளையாட்டு ஊழல் சுரேஷ் கல்மாடிக்கு சி.பி.ஐ. நோட்டீஸ்



புதுடில்லி, டிசெ. 31
கொமன்வெல்த் விளையாட்டு ஊழல் தொடர்பாக அப்போட்டி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடிக்கு சி.பி.ஐ. நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஜனவரி 3 ஆம் திகதிக்குப் பின் சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜராவதாக கல்மாடி பதிலளித்துள்ளார் என்று சி.பி.ஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொமன்வெல்த் விளையாட்டு ஏற்பாடுகளையும், மைதான வடிவமைப்பு உள்ளிட்ட கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது.

லண்டனில் நடைபெற்ற கொமன்வெல்த் ஜோதி ஓட்டம் நிகழ்ச்சியில் நிதியை முறைகேடாக செலவிட்டது உட்பட பல முக்கிய விவகாரங்கள் குறித்து கல்மாடியிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் கேள்வி எழுப்புவார்கள் என்று தெரிகிறது.

தவிர கல்மாடியின் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கணினிகளில் இருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலும் சி.பி.ஐ. அதிகாரிகள் அவரிடம் விசாரணை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்மாடி எம்.பி.யாக இருப்பதால் அவரிடம் விசாரிப்பதற்கு மக்களவைச் செயலரிடம் ஏற்கெனவே சி.பி.ஐ. அனுமதி பெற்றுவிட்டது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 8,000 கோடி அளவுக்கு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் 3 வழக்குகளைப் பதிவு செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த விஷயத்தில் கல்மாடிக்கு ஆதரவு அளிக்க முடியாது என்று காங்கிரஸ் ஏற்கனவே கூறிவிட்டது. இந்நிலையில் கல்மாடி மீதான சி.பி.ஐ. யின் பிடி மேலும் இறுகிவருகிறது.

முன்னதாக கல்மாடிக்கு நெருக்கமான கொமன்வெல்த் போட்டி ஒருங்கிணைப்புக் குழு பொதுச் செயலர் லலித் பானோத், இணை பொது இயக்குநர் ஆர்.கே.சச் ஷெட்டி, கல்மாடியின் அரசியல் ஆலோசகர் மனோஜ் போரி ஆகியோரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொமன்வெல்த் போட்டி தொடர்பான பல முக்கிய ஆவணங்கள் ஏற்கெனவே மாயமாகிவிட்டன.

இந்நிலையில் கல்மாடி இப்போதும் கொமன்வெல்த் போட்டி ஒருங்கிணைப்புக் குழு தலைவராக இருக்கிறார். இது வழக்கு விசாரணைக்கு இடையுறாக இருக்கும். எனவே கல்மாடியை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென மத்திய அரசிடம் சி.பி.ஐ. வலியுறுத்தியுள்ளது.

சமீபத்தில் டில்லி, மும்பை, பூனாவில் உள்ள கல்மாடியின் வீடு, அலுவலகங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (23)

# யாழ்.சென்றலில் உள்ளக விளையாட்டரங்கு



யாழ்பாணம்,டிசெ.31
யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உள்ளக விளையாட்டு அரங்கம் நேற்று முன்தினம் மக்கள் வங்கி வட வலய பிரந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதனால் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபர். எஸ். பத்மநாதன், மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.நாகேஸ்வரன், இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் சந்தன பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-23)

# விளையாட்டு பயிற்றுநர் பதவிக்கு கொழும்பில் நேர்முகப் பரீட்சை

வலி.வடக்கு,டிசெ.31
வட மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் மீண்டும் ஒரு தொகுதியினருக்கு விளையாட்டு பயிற்றுநர் நியமனம் வழங்குவதற்காக இரண்டாவது நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் 12 விளையாட்டு அலுவலர்கள் பதவி உயர்வு பெற்று பயிற்றுவிப்பாளர்களாக யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு நியமனம் செய்யப்பட்டு கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்கள்.

இந் நிலையில் மேலும் வெற்றிடமாகவுள்ள ஒரு தொகுதி பயிற்றுவிப்பாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக இரண்டாவது நேர்முகப் பரீட்சை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-23)

# விளையாட்டு அலுவலர் கௌரவிப்பு

வலி.வடக்கு, டிசெ.31
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் விளையாட்டு அலுவலகராக இருந்து யாழ். மாவட்ட கபடி பயிற்றுநராக பதவி உயர்வைப் பெற்றுச் சென்றுள்ள கு.முகுந்தனுக்கு காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக பெண்கள் கரப்பந்தாட்ட அணியினால் பாராட்டு விழா ஒன்று கிராம அலுவலர் க.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விளையாட்டு அலுவலர் கடந்த காலத்தில் மேற்கொண்ட சேவைகள் பற்றி வீராங்கனைகளால் பாராட்டப்பட்டதுடன் அவரின் விளையாட்டுச் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பத்திரமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (ஐ-86)

# பமிலியன்ஸ், கே.ஸி.ஸி.ஸி. வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.31
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த புதன் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டங்களில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம், கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதியது.

பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பட்டபிளை விளையாட்டுக் கழக அணியை 64:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெறவிருந்த ஆட்டத்தில் இந்துமகளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி.விளையாடுக் கழகம் மோதுவதாக இருந்தது.

இந்து மகளிர் விளையாட்டுக்கழக சமுகம் கொடுக்காததினால் எதிர் அணியான கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ஐ-23)

குதூகலம்...



யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் யாழ். மட்டத்தில் நடத்திய சிறந்த கிரிக்கெட் அணித் தரப்படுதலில் மூன்றாவது இடத்தைப் பெற்ற யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி (ஐ-23)

# அரையிறுதி ஆட்டம்




யாழ்ப்பாணம்,டிசெ.31
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினர் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 2010ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்களுக்கான அரை இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் வி.க.'ஏ'.அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. வி.க. அணி மோதவுள்ளது. (ஐ-23)

# உலகக் கிண்ண போட்டி பாடலுக்கு சங்கர் மகாதேவன் இசையமைக்கிறார்



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் பாடலுக்கு இந்திய பாலிவுட் இசையமைப்பாளர்கள் சங்கர் மகாதேவன், இசான்,லாய் ஆகியோர் இசையமைக்கிறார்கள் என ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணம் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடப்பதால் இந்தப் பாடல் ஹிந்தி, வங்காளம், சிங்களம் ஆகிய மொழிகளில் இசையமைக்கப்படுகிறது.

இந்தப் பாடல் இன்று முதல் முதன்முறையாக இந்தியாவின் பல்வேறு வானொலிகள் மற்றும் ஈ.எஸ்.பி.என், ஸ்டார் ஸ்போர்ட்ஸ் ஆகியவற்றில் ஒளிபரப்பாகிறது. பாடலுக்கு இசையமைக்கும் சங்கர் மகாதேவன், இசான், லாய் ஆகியோர் பாலிவுட்டில் மிகவும் புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள் ஆவர். உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறுகிறது. (23)

# உலகக் கிண்ணத்தில் ஹாரிஸ் ஆடுவது சந்தேகம்



ஆஷஸ் தொடரில் காயமடைந்த ஆஸ்திரேலிய வீரர் ரியான் ஹாரிஸ் உலகக் கிண்ண(2011) தொடரில் இடம்பெறுவது சந்தேகமாகியுள்ளது.

ஆஷஸ் தொடரின் 3ஆவது டெஸ்டில் 9 விக்கெட்க்களை வீழ்த்தி, ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு உதவியவர் ஹாரிஸ். நான்காவது டெஸ்டில், இடது கணுக்காலில் ஏற்பட்ட காயத்தால், பாதியில் விலகினார். இதனால் கடைசி டெஸ்டில் பங்கேற்க மாட்டார் என் அறிவிக்கப்பட்டது. காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்ய இருப்பதால், இனி அடுத்த 4 மாதங்கள் போட்டிகளில் பங்கேற்க முடியாது. இதனால், உலகக் கிண்ணத் தொடரில் ஹாரிஸ் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு ஆறுதல் வெற்றி; தொடர் நியூஸிலாந்து வசம்

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது 'இருபது-20' போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறுதல் வெற்றிபெற்றுள்ளது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' தொடர் நடைபெற்றுவந்தது.

முன்னர் நடந்துமுடிந்த 2 போட்டிகளிலும் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, 2-0 என்ற கணக்கில் தொடரைத் தன்வசப்படுத்திக்கொண்டது.

இந்நிலையில் நேற்று மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ஓட்டங்களைச் சேர்த்தது. அந்த அணிக்காக அஹமட் ஷெக்சட் (54), மெகஹமட் ஹபீஸ் (34), உமர் அக்மல் (30), அப்துல் ரஸாக் (34-ஆட்டமிழக்காமல்) ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், பிராங்ளின் 2 விக்கெட்டுகளையும், மில்னே, சௌத்தீ, நதன் மக்கலம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 184 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 15.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 103 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றிபெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில், ஸ்ரைரிஸ் (45) தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டையிலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தொடவில்லை. அதேவேளை, 5 வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்திருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், அப்ரிடி 4 விக்கெட்டுகளையும், அப்துல் ரஸாக் 3 விக்கெட்டுகளையும், தன்வீர் அஹமட், அப்துல் ரெஹ்மான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அப்துல் ரஸாக் தெரிவுசெய்யப்பட்டார்.



## அஸாருதீனின் சாதனையை சமன் செய்தார் டோனி

டர்பன், டிசெ. 31

டர்பன் டெஸ்டில் கிடைத்த வெற்றி டோனி தலைமையில் இந்திய அணி பெற்ற 14ஆவது வெற்றியாகும். இதன்மூலம் இந்திய அணியின் முன்னாள் தலைவரான முகமது அஸாருதீனின் 14 வெற்றிகள் என்ற சாதனையை அவர் சமன் செய்தார்.

இந்திய அணித்தலைவர்களில் அதிக டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தவர் சௌரவ் கங்குலி. அவரது தலைமையில் இந்தியா 21 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் டோனி உள்ளார்.

### ஆஷஸ் தொடரின் 5ஆவது போட்டியில்

# ரிக்கி பொண்டிங் விலகல்; அணித் தலைவர் கிளார்க்



மெல்பேர்ண்,டிசெ.31

கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங், சிட்னியில் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார். அதன் காரணமாக அணித் தலைவர் பொறுப்பு மைக்கல் கிளார்க்கிற்கு வழங்கப்படவுள்ளது.

5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜனவரி 3ஆம் திகதி சிட்னியில் தொடங்குகிறது. இந்தப் போட்டியில் காயம் காரணமாக பொண்டிங் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக அணித் தலைவர் பொறுப்பை துணைத் தலைவரான கிளார்க் ஏற்றுள்ளார்.

இவருக்குப் பதிலாக புதிய வீரர் கவஜா அணியில் இடம்பிடித்துள்ளார்.

# ஆஷஸ் கிண்ணத்தை தக்கவைத்தமை மகிழ்ச்சி

ஆஷஸ் கிண்ணத்தைத் தக்க வைத்தமை எங்கள் மனதில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும்.

- இவ்வாறு இங்கிலாந்து அணியின் தலைவரான ஸ்டிரஸ் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவுடனான நான்காவது டெஸ்ட் வெற்றிக்குப் பின்னர் கருத்துக் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மெல்பேர்னில் பெற்ற இந்த வெற்றி சிறப்பு வாய்ந்தது.



நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறோம். இங்கு ஆஷஸ் கிண்ணத்தைத் தக்க வைத்தது எங்கள் மனதில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும். டெஸ்ட் தரவரிசையில் உலகின் முதல் நிலை அணி என்ற இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எங்களது ஒட்டுமொத்த இலக்கு. - என்றார்.

## டர்பன் களத்திலிருந்து..

டர்பன், டிசெ.31

தென்னாபிரிக்காவுக்கு எதிராக டர்பனில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா வெற்றிபெற்று, தரவரிசையில் முதலிடத்திற்குத் தகுதியான அணி என்பதை நிரூபித்திருக்கிறது. அத்துடன், இந்த வெற்றியின் மூலம் மேலும் சில சாதனைகளைப் படைத்திருக்கிறது.

★ டர்பன் ஆடுகளத்தில் பந்து பயங்கரமாக எகிறிச் (பவுன்ஸ்) சென்று மிரட்டியது. வேகப்பந்து வீச்சாளர்களின் பிடியில் சிக்கிய இந்த டெஸ்டில் மூன்றரை நாட்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளும் (மொத்தம் 40 விக்கெட்டுகள்) சரிந்ததை ரசிகர்கள் ரசிக்க முடிந்தது.

★ டர்பன் மைதானத்தில் இந்தியா பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும். இதற்கு முன்பாக இங்கு விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளில், 1992 ஆம் ஆண்டு நடந்த போட்டியை சமனிலை செய்திருந்தது. 1996 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் முறையே தென்னாபிரிக்காவிடம் 328 ஓட்டங்கள் மற்றும் 174 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா தோற்றிருந்தது.

★ டெஸ்டில் தென்னாபிரிக்க மண்ணில் இந்தியா பெற்ற 2ஆவது வெற்றி இதுவாகும். இதற்கு முன்பாக 2006 ஆம் ஆண்டு ஜோகன்னஸ்பேர்க்கில் நடந்த போட்டியில் 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வென்றிருந்தது.

★ 1992ஆம் ஆண்டு முதல் தென்னாபிரிக்காவில் விளையாடிவரும் இந்திய அணி, இதுவரை அங்கு 14 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது. அதில் 2இல் வெற்றியும், 7இல் தோல்வியும், 5இல் சமனிலையும் கண்டுள்ளது.

★ தென்னாபிரிக்க அணியைப் பொறுத்தவரை டர்பன் மைதானம் அந்த அணிக்கு எப்போதும் ராசியாக இருந்ததில்லை. இங்கு தொடர்ச்சியாக 3ஆவது முறையாகத் தோற்றிருக்கிறது.

முன்னதாகக் கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவிடம் 175 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், இங்கிலாந்திடம் இன்னிங்ஸ் மற்றும் 98 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தென்னாபிரிக்கா தோல்வி கண்டிருந்தது.

# உலகக் கிண்ணத்துடன் பொண்டிங் விலகவேண்டும்–சப்பல்



''அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடர் முடிந்த பின்னர் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பதவியிலிருந்து பொண்டிங் விலகவேண்டும்''

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஜாம்பவானான இயன் சப்பல் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டிலும் ஆஸ்திரேலியா தோற்றால் ஆஷஸ் தொடரை மூன்று தடவைகள் இழந்த முதலாவது ஆஸ்திரேலிய அணித்தலைவர் என்ற அவப்பெயரை பொண்டிங் சுமக்க நேரிடும்.

அதேவேளை, உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் முடிந்த பிறகு பொண்டிங் அணித்தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும். அவருக்குப் பதிலாக விக்கெட் காப்பாளர் பிராட் ஹடின் அல்லது மைக்கல் கிளார்க்கை அணித்தலைவராக்க வேண்டும்'' - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

# இருபது - 20' போட்டியில் அம்லா

டர்பன், டிசெ.31

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் முடிந்ததும், இரு அணிகளுக்குமிடையே ஓர் 'இருபது -20' கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி டர்பனில் நடக்கவுள்ளது.

இதற்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியில் அம்லாவுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கலிஸ், ஸ்ரெயின், மோர்கல் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அணி விவரம் வருமாறு:-

ஜோகன் போத்தா (அணித்தலைவர்), அம்லா, டிவில்லியர்ஸ், டுமினி, இங்ராம், டேவிட் மில்லர், நிட்னி, வெய்ன் பார்னல், ரோபன் பீற்றர்சன், ஸ்மித், தெரோன், சோட்சோப்.



# ஒரு நாள் அணியில் ஷேவாக் இல்லை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரிலிருந்து இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஷேவாக்குக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ள தன் காரணமாகவே அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது எனவும், அவருக்குப் பதிலாக ரோஹித் சர்மா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் இந்தியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எனினும், நாளைமறுதினம் 2ஆம் திகதி கேப்டவுனில் நடைபெறவுள்ள 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடுவார். தோள்பட்டைக் காயம் காரணமாகவே டெஸ்ட் போட்டியில் ஷேவாக் பந்துவீசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம்பிள்ளை பாறுபதிப்பிள்ளை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் பூநகரி, மட்டுவில் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை பாறுபதிப்பிள்ளை நேற்று (30.12.2010) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் பரமநாதன் (வெள்ளாம்போக்கட்டி), புவனேஸ்வரன் (C.T.B, வவுனியா சாலை), குணலட்சுமி (பூநகரி), புனித செல்லம்மா (கச்சாய்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளாம்போக்கட்டி, சு.பரமநாதன் இல்லத்தில் நாளை (01.01.2011) சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளாம்போக்கட்டி, கெற்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P : 0213219936

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
(ஷ/574109)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் திருஞானம் ஞானேஸ்வரன்



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1/15, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்வன் திருஞானம் ஞானேஸ்வரன் நேற்று (30.12.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானம் மற்றும் திருப்பதி தம்பதியரின் அன்பு மகனும் அமுதன் (கொழும்பு), அமுதினி, அஜந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆச்சிமுத்து, சீவரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் பேரனும் திருச்செல்வம் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுகதேவன், பரமசிவன், தங்கரத்தினம், சீதாலெட்சுமி, பூபதி மற்றும் சிவானந்தநாயகி, பகவதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான செவ்வேள், சிவலிங்கம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2010) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/15, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777894997.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆழ்வார் செல்லையா



இல. 05, பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சமூகசேவகர் ஆழ்வார் செல்லையா நேற்று (30.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ.ரகுலராஜா
(பவா-மகன்)

(108231)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி நல்லதம்பி**
(திதி: மார்கழி அபரபட்ஷ ஏகாதசி)

மலர்வு
17★10★1938

உதிர்வு
11★01★2010

மண்ணில் நல்ல வண்ணம்-வாழ்ந்தீரே!
பண்பில் உயர்ந்தவரே-நல்லதம்பி உம்
மாண்புதனை மறப்போமோ?
ஆண்டொன்று ஆனபோதும் ஆறுமோ
எம்மனது.... உமது ஆத்மா
சாந்திக்காய் என்றென்றும் வேண்டி நிற்போம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்மன் கோவிலடி,
அராலி கிழக்கு.
(108212)

பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## புத்தாண்டுத் திருப்பலி

குருநகர்,டிசெ.31

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புத்தாண்டுத் திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கும், நாளை ஜனவரி முதலாம் திகதி இரவு ஒரு மணிக்கு இரண்டாம் திருப்பலி குருநகர் புதுமைமாதா தேவாலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் என குருநகர் பங்குத் தந்தை வண பிதா. றோ. நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.

இதே வேளை நாளை முதலாம் திகதி அதிகாலை 5 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மேலும் ஒரு திருப்பலி இடம்பெறும் எனவும், அன்று மாலை இவ்விரு தேவாலயங்களிலும் வேறு திருப்பலிகள் எதுவும் இடம்பெறாது எனவும் பங்குத் தந்தை மேலும் தெரிவித்துள்ளார். (த-51)

## ஊர்காவற்றுறையில் திருட்டுகள் அதிகரிப்பு

ஊர்காவற்றுறை,டிசெ.31

ஊர்காவற்றுறையில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தம்பாட்டியில் உள்ள ஆலய அர்ச்சகர் ஒருவரின் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அர்ச்சகரை அச்சுறுத்தி சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேபோன்று ஊர்காவற்றுறை நகரில் லைடன் தேநீர்க்கடை ஒழுங்கையிலுள்ள வீடொன்றினுள் இரவு புகுந்த திருடர்கள் வீட்டின் அலுமாரியில் இருந்த இரண் டரை லட்சம் ரூபா பெறுமதியான நகை களை எடுத்துச் சென்றுள்ளனர். இந்த வீட்டில் மன்னாரில் இருந்து வந்த உறவினர்களும் தங்கியிருந்தனர். அவர்களும் தமது நகைகளைப் பறிகொடுத்துள்ளனர்.

அதே நாளில் இதற்கு அருகில் அமைந்துள்ள மற்றுமொரு வீட்டிலும் ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்தில் நகை உள்ளதா எனத் தடவியுள்ளனர்.

விழித்தெழுந்த சிறுமி கூக்குரலிடவே திருடர்கள் தப்பியோடி விட்டனர்.

இத்தகைய திருட்டுச் சம்பவங்களால் ஊர்காவற்றுறை நகரில் மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-21)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

கதிரவேற்பிள்ளை சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்க அறநெறிப் பாடசாலை ஆதரவில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயத்திலும், நாளை சனிக்கிழமை தம்பசிட்டி பண்டாரி அம்மன் ஆலயத்திலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறும். (த)


## திருமண சேவை

பொறியியலாளர்கள், மருத்துவர்கள், M.Sc., B.Sc, B.Com, B.A பட்டதாரிகள், ஆசிரியர்கள், அரச, தனியார் துறையினர் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. மணமக்களை எதிர்பார்ப்போர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

த.சிவானந்தன் - பிரபல சோதிடர்
100, அரசடி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
தொ.பே: 0212220343, 0778996281

## இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சை 2011 இற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

காலம் :
02.01.2011 காலை 8.30 - மாலை 5.00
இடம் :
யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி,
கல்வியங்காடு.
நுழைவுக் கட்டணம் : 500/-
தொடர்புகளுக்கு : 0777216725.


## யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரி அறிவித்தல் - 2011

மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் மாநகரசபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 230 ஆம் பிரிவுகளின் பிரகாரம் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனங்களுக்கான ஆதனவரியை 50%த்தால் அதிகரிப்பதென 23.12.2010இல் நடைபெற்ற மாதாந்த விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஆதனங்களுக்கான தற்போது நடைமுறையிலுள்ள ஆதனவரி 50% த்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை செலுத்தி ஒத்துழைக்குமாறு பொதுமக்களை நாடி நிற்கின்றோம்.
2. 2011ஆம் ஆண்டுக்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2011ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.
3. 2011ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீதவரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு பத்து (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய வரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து (5%) சதவீதம் கழிவு அனுமதிக்கப்படும்.
4. மேற்கூறப்பட்ட பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து (15%) சதவீதத்திலும் ஏனைய இடங்கள் மீது இருபது (20%) சதவீதத்திலுமான விறாத்துச்செலவு அறவிடப்படும்.
5. மேலும் புதிதாக காணி கட்டடங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றுக்கான ஆதனப்பெயர் மாற்றங்களை உடன் மேற்கொள்ளவும். புதிய கட்டடங்களைக் கட்டும் போதும், சேதமடைந்த ஆதனங்களைத் திருத்தம் செய்யும் போதும் மாநகரசபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்துகின்றேன்.
6. ஏற்கனவே 2011ம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இவ்வதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
7. மேலும் 2011.01.01 முதல் பின்வரும் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும் என்பதனை அறியத்தருகின்றேன்.

*அ) பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் ரூபா 750.00 உம் வரிகளும்.*
*ஆ) பெயர்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூபா 750.00 உம் வரிகளும்.*
*இ) உடைமைச் சான்றிதழ் கட்டணம் ரூபா 750.00 உம் வரிகளும்.*
*ஈ) சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் கட்டணம் ரூபா 750.00 உம் வரிகளும்.*

திருமதி யோ.பற்குணராசா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2010.12.30
(ஒ/574105)


## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட்
யாழ்ப்பாணம்.

கே.கே.எஸ்.வீதி
இணுவில்.

### A/L 2013

கலை - வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 02.01.2011

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரிய குழுவினால்

| பாடம் | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| அரசியல் | கோகுலன் | கோகுலன் |
| அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் |
| நாடக - அர | கணேஷ் | கணேஷ் |
| விவசாயம் | விக்கி | விக்கி |
| கிறிஸ்தவம்/கிறி.நாகரிகம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் |
| இலகுகணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் |
| சித்திரம் | சிறீஸ் | சிறீஸ் |
| மனைப்பொருளியல் | தர்சிகா | தர்சிகா |
| சங்கீதம் | குமுதினி | குமுதினி |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| | ஜைசன் | ஜைசன் |

| | |
|---|---|
| யாழ்.நகரில் | |
| கலைப் பிரிவு | 8 A.M |
| வர்த்தகப் பிரிவு | 9 A.M |
| இணுவிலில் | |
| கலைப்பிரிவு | 8 A.M |
| வர்த்தகப் பிரிவு | 2 P.M |

இடநெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக உங்கள் அனுமதிகளை 02.01.2011இக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.
A/L DAY CLASS திங்கள் முதல் வெள்ளிவரை நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க் குரல்களை ஒடுக்குவதற்காகத்தான் குடாநாட்டில் கொலைகள் அரங்கேற்றமா?

## மாநகர சபை உறுப்பினர்கள் சீற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

''இன்று நடப்பதென்ன? யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏன் இந்தக் கொலைகள்? எதிர்க் குரல்கள் கொடுக்கப்படக் கூடாது என்ற எச்சரிக்கையா?''

- இவ்வாறு கேள்வி எழுப்பினர் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள். குடாநாட்டில் இடம்பெற்று வரும் கொலைகள், கொள்ளைகள் தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிப் பேசும் போது ஆளும், எதிர்க் கட்சி வேறுபாடின்றி உரையாற்றிய உறுப்பினர்கள் நடைபெற்ற சம்பவங்களுக்கு ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலரும் பதில் கூற வேண்டும் என வலியுறுத்தினர். அங்கு உரையாற்றிய அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களைப் தொடர்ந்தும் பீதிக்குள் வைத்திருக்க வேண்டும், தாங்கள் சொல்வதை மட்டுமே எல்லோரும் செய்ய வேண்டும் என்று எண்ணுபவர்களே திட்டமிட்டு இந்தச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். போர் முடிந்த பின்னர் தமிழ்ப் பகுதிகளில் மட்டும்தான் இத்தகைய கொலைகள் இடம்பெறுகின்றன.

எதிர்காலத்தில் வெடிச் சத்தங்கள் கேட்காது; அப்படிக் கேட்டால் அது அரசினுடையதாகத்தான் இருக்கும் என முள்ளிவாய்க்காலில் சொல்லப்பட்டது. பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது; இனி எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அரசு அறிவித்து, 21 பீரங்கி வேட்டுக்களை கடல் நோக்கித் தீர்த்தது. அந்நியப் படைகள் ஏதும் இந்த நாட்டுக்குள் நுழையக் கூடாது என்பதற்காகவே இந்த வேட்டுக்கள் எனவும் கூறப்பட்டது.

ஆனால், இன்று நடப்பதென்ன? யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏன் இந்தக் கொலைகள்? எதிர்க் குரல்கள் கொடுக்கப்படக் கூடாது என்ற எச்சரிக்கையா?

நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். மக்கள் கொல்லப்படும் போது வாய்மூடி அமைதியாக இருக்க முடியாது. எந்த ஒரு நெருக்கடி நிலையையும் எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இராணுவமும் பொலிஸும் இருக்கின்றன என்று அரசு கூறுகின்றது. ஆனால் கொலைகளும் கொள்ளையும் நடந்து முடிந்த பின்னர்தான் அந்த இடங்களுக்கு அவர்களால் போக முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சம்பவங்களுக்கு ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்தால் மீண்டும் இந்த நாட்டில் போர்ச் சூழல் ஏற்படும் என்று அனைத்துக் கட்சிகளும் சொல்கின்றன. வீதித் தடைகளையும் சோதனை நிலையங்களையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை தானா இது என்ற சந்தேகமும் பொது மக்களிடம் இருக்கின்றன.

இது போன்ற சம்பங்களைத் தடுத்து நிறுத்த ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு என்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றுபட வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விரைவாகச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை இந்தச் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து அரசிடம் முன்வைக்கிறோம்.

-இவ்வாறு கூட்டத்தில் உரையாற்றிய உறுப்பினர்கள் தெரிவித்தனர்.(உ-7)

## தமிழில் தேசிய கீதம் பாடத் தடை: வழக்குத் தாக்கல் செய்யலாம்

கொழும்பு,டிசெ.31

''அரசமைப்பில் உள்ளபடி தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதிக்காவிட்டால், அதை எதிர்த்து, உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம்'' என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் பிரதமர் கலந்துகொண்ட வைபவமொன்றில் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது குறித்து செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

(சி)

## கொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாகக் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு முன்னாள் ஆயுதக் குழுக்களே காரணம என்று யாழ். படைகளின் தளபதி கூறியுள்ளார்.

இந்தச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். சம்பவங்களைத் தடுத்து நிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொலைகள் குறித்த சபையின் கண்டனம் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலருக்கும் உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (உ-ஐ-7)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் மூன்று கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சுமார் 15 வரையிலான பெரிய கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன.

மக்களைப் பீதிக்குள்ளாக்கும் இந்தகைய குற்றச் செயல்களைத் தடுக்கப் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று குடாநாட்டுக் கல்விமான்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

(உ-சி)

## வெளிநாட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்தது. நிபுணர் குழு இலங்கை வருவதற்கு விசா வழங்கப்படமாட்டாது எனவும், அப்போது வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், இப்போது அந்த நிபுணர் குழு ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு முன்னால் சாட்சியமளிக்கவே இலங்கை வருகின்றது. இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம் பெற்றவை தொடர்பாகப் புலனாய்வு செய்ய அல்ல.''

செய்தியாளர் எழுப்பிய கேள்வி வருமாறு:-

''இலங்கையில் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த ஆணைக் குழுவை இலங்கைக்கு வரவிடமாட்டோம் என அரசு ஆணித்தரமாகத் தெரிவித்தது. ஆனால், இப்போது ஆணைக் குழுவை இலங்கை வர அரசு அனுமதியளித்துள்ளது. அதேபோல் நேபாள அரசியல் சர்ச்சை குறித்து வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்தும் முரண்பட்ட கருத்துகளாக வெளியாகியுள்ளன. எனவே, அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?''

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர்:- ''ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு இலங்கை வருவதற்கு ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டோம் என அரசு தெரிவித்திருந்தது. அரசுடன் இணைந்த தேசிய சுதந்திர முன்னணி, ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவையும், நிபுணர் குழுவை இலங்கையில் காலடி வைக்க இடமளிக்கமாட்டோம் என சூளுரைத்தன. ஆனால் இப்போது நிபுணர் குழு இலங்கை வருவதற்கு அரசு அனுமதித்துள்ளது. ஏன் இந்தத் திடீர் மாற்றம்?''

அமைச்சர்:- ''நிபுணர் குழுவை ஒருபோதும் இலங்கை வர அனுமதிக்கமாட்டோம் என அரசு தெரிவிக்கவில்லை. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து புலனாய்வு மேற்கொள்ள இலங்கை வர அனுமதிக்கமாட்டோம் என அரசு தெரிவித்தது. ஆனால் நிபுணர் குழு ஜனாதிபதி நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சிமளிக்கவே இலங்கை வருகிறது, புலனாய்வுக்கல்ல'' -இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(சி)

## உடுநர்ப்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரே கடத்தப்பட்டார் என்று கூறப்பட்டது. இரண்டு மோட்டார் சைக்கிள்களிலும் 'ஹைஏஸ்' வானிலும் வந்தவர்கள் அவரைக் கடத்தினர் என்று சம்பவத்தை நேரில் கண்டனர் எனக் கூறும் சாட்சிகள் உதயனிடம் தெரிவித்தனர்.

இளைஞர் ஒருவரின் கூக்குரல் கேட்டு தாம் வந்து பார்த்த போது வானில் வந்தவர்கள் இளைஞரைப் பலவந்தமாக அதில் ஏற்றிச் சென்றனர் என்று அவர்கள் கூறினர். இளைஞனால் கைவிடப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிளை பொலிஸார் எடுத்துச் சென்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும், அவ்வாறான எந்த ஒரு சம்பவமும் இடம்பெறவில்லை என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். அது வெறும் வதந்தி எனவும் கூறினர். எவரும் காணாமல் போனார்கள் என்று தமக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

அந்தப் பகுதியில் இருந்து மது போதையில் ஒருவர் கைவிட்டுச் சென்ற சைக்கிள் ஒன்றைத் தாம் மீட்டுள்ளனர் என்று கோப்பாய் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்த செய்தி காட்டுத் தீ போலப் பரவியதனால் மக்கள் மத்தியில் கிலேசமும் பதற்றமும் பரவி இருந்தன.

யாழ். குடாநாட்டில் எவரும் கடத்தப்பட்டனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிலோ வேறு எங்குமோ நேற்றிரவு வரை முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை.

(உ-9-14)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. கிழக்குப் பிரிவின் தலைவர்
இளையதம்பி மயில்வாகனம்
அவர்களின் சிரேஷ்ட புதல்வன்
**மயில்வாகனம் கிரேஷியன்**
அவர்கள் கொழும்பு உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து சட்டத்தரணியாகப் பதவியேற்றதையிட்டு மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

நெடுந்தீவு.
நா.கணபதிப்பிள்ளை,
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்).



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செபஸ்ரியாம்பிள்ளை டெனோசன் புஸ்பகரன்

Dip. in Sp. Trd. (WR), HNDA, P.G. Dip. in Edu.

(ஆசிரியர், யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்)



கடந்த 23.12.2010 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டமேற் கல்வி டிப்ளோமா (P.G. Dip. in Ed.) பட்டத்தைப் பெற்ற எமது கல்வி நிலையத்தின் கணித பாட ஆசிரியர் செபஸ்ரியாம்பிள்ளை டெனோசன் புஸ்பகரன் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**ஆவர்ஸ் கல்வி நிலையம்**
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

நிர்வாகியும்
சக ஆசிரியர்களும்

(108206)



அதிவண. கலாநிதி
எஸ். ஜெபநேசன் அடிகளாரின்



*தொடரும் ஆன்மீக கல்விசார் பயணம்*
*(சுயசரிதை)*

**நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்**

இடம்
கேட்போர் கூடம், நூல்நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

காலம்
31.12.2010 வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணி

தலைவர்
வண. பிதா மரிய சேவியர்
இயக்குநர், கலைத்தூது அழகியற் கல்லூரி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதி விலை ரூபா 500/- விழாக்குழு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHYSICS PARK

**A.ANAPAYAN** B.Sc (HONS) Spl.in. phy
2013 A/L English Medium Physics
Commencing on 01.01.2011 (Sat)
Sat - 4.00 p.m. - 5.30 p.m.

VAIDYESHWARA COLLEGE JUNCTION,
ABOOBUCKER ROAD.

## பணியாள்கள் தேவை

01) விற்பனையாளர் } இருபாலரும்
02) சிட்டை எழுதுநர் }
03) தொலைபேசி / திருத்துநர்
04) மேற்பார்வையாளர் (சிங்களம் தெரிந்தவர்)
நேரில் வரவும் :
யாழ். போன் சொப்,
10, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ/573794)

## நாளைய நன்நாளில்

01.01.2011 சனி 3.00 P.M. இல்
**2013 A/L**
கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பம்
Phy: M.கருணாநிதி Maths: P.விமலநந்தன்
Che: N.வாகீசன் Bio: R.குகானந்தன்
G.Beno
N.E.W. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

## 2011 / 2012 ஆண்டுக்கான

G.A.Q. யாழ் / பேராதனை
1ST IN COM விரிவுரைகள்
01.01.2011 ஆரம்பமாகிறது.
விவரங்களுக்கு :
பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/18, ஸ்ரான்லி வீதி
(இலங்கை வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.

36 ஆவது வருட கல்விச் சேவையில்
அதே இடம்... அதே நிர்வாகம்... அதே ஆசிரியர்கள்...
**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தரம் 6, 7, 8, 9, 10, **O/L** EVENING CLASS
பிரிவு 2

| | |
|---|---|
| SCI. N. தேவா, வைகுந்தன், ஜெயவதனன் | MATHS S. விக்கிரூபன் |
| ENG. S. விஸ்வநாதன், செல்வரட்ணம் | TAM J. தயாபரன், விஜய், திருமதி பிரபாவதி |
| SOCI. மா.பார்த்திபன், சதீஷ் | RELI. N.T. தரன், திருமதி பிரபாவதி |
| COM. நிஷாந்தன் | GEO. சர்வேஸ்வரன் |

ஆரம்பம் 03.01.2011 மாலை 3.30 P.M.

உயர் கலைக் கல்லூரி
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு.
**A/L 2013**
கலைப்பிரிவு ஆரம்பம்
ஜனவரி - 02, பிற்பகல் 2.00 மணி

| | |
|---|---|
| தமிழ் | சந்திரசேகர் |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | சிறீதரன் |
| புவியியல் | குமரன் |
| அரசியல் | இளங்கோ |
| வரலாறு | பத்மன் |
| நாடகம் | ரமேஷ் |
| அளவையியல் | நிதன் |
| மனைப்பொருளியல் | ரஜீத்தா |
| தகவல் ஊடகம் | இளங்கோ |

"அறிவை அறிவால் அறிவோம்" (108209)

புதிய வகுப்புகள் ஆரம்பம்.....
A/L 20013 Physics
தமிழ் மொழி மூலம்
* இறுதிப் பரீட்சையை நோக்கிய வழிகாட்டல் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு மாத இறுதியிலும் நடைபெறும்.
* குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்கள் மட்டும் உள்வாங்கப்பட்டு தனிப்பட்ட ரீதியாகவும் கவனிக்கப்படும்.
In English medium
* You will be trained in an exam view
* For the best result in your Advanced Level.
* Learn Physics by easy way
Batch I january 01 2011 12.00 - 02.00
Batch II january 01 2011 02.00 - 04.00
Place :- GREEN PEARL INSTITUTION
Navalar junction
By : M.KUGAN B.Sc. (Hons)
For more details:- T.P:- 0774287373
Web :- www.jaalpaaner.tk (108219)


## பத்திரிகையாளர்கள் வெளியேற்றம்

# நல்லிணக்க ஆணைக்குழு பூஸாவுக்கு சென்றது

கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவுடன் பூஸா தடுப்பு முகாமுக்குச் சென்ற செய்தியாளர்கள் விசாரணையின் இடைநடுவில் வெளியேற்றப்பட்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழு பூஸா தடுப்பு முகாமிலுள்ள அரசியல் கைதிகளிடம் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக நேற்றுக் காலை 9மணிக்கு அங்கு சென்றது.

ஆணைக்குழுவின் அமர்வின் போது செய்தி சேகரிப்பதற்காக அங்கு சென்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செய்தியாளர்கள் ஆரம்பத்தில் முகாமுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் முகாம் அதிகாரிகளால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர் எனத் தெரிய வருகிறது.

பூஸா முகாமில் நடைபெறும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வின்போது செய்தி சேகரிப்பதற்கான அனுமதியை தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ் மன் ஹுலுகல்ல வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும்; இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தலோ அல்லது பொலிஸ் மா அதிபரின் அனுமதியோ தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று பூஸா முகாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்தே செய்தியாளர்கள் முகாமிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை, ஏனைய சிறைச்சாலைகளைப் போன்றல்லாது, பூஸா தடுப்பு முகாமில் தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களும், முன்னாள் போராளிகளும் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பூஸா முகாமுக்குள் அனுமதியின்றிச் செல்ல முடியாது என்று ஊடகவியலாளர்களுக்கு முகாம் அதிகாரிகள் பதிலளித்துள்ளனர் என மேலும் கூறப்படுகின்றது. (சி)


இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்ட கற்கைநெறி தெரிவு மாணவர்களுக்கான விசேட வகுப்பு
சனிக்கிழமை 8.30 - 2.30 வரை
P.உமாசங்கர் P.கமல்தாசன்
Note: தொடர்ச்சியாக வாராந்த வகுப்புகளும் நடைபெறும்
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

கணக்கீடு
A/L 2011 / DAY
பிரசுர கம்பனி முடிவுக் கணக்கு
ஆரம்பம் நாளை பி.ப. 4.00
A/L 2012
கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம் நாளை பி.ப. 3.00
A/L DAY CLASS
திங்கள் - வெள்ளி காலை 6.15
S.தயா
B.Com (Hons) (Acc.Spl.)
"தவிப்பா. அனுமதி உண்டு"
**Universal**
யா/இந்து மகளிர் அருகில்,
யாழ்ப்பாணம். (108188)

**A/L 2013** கலை, வர்த்தக கணித, உயிரியல்
ஆரம்பம் 08-01-2011 சனி 8.00 மணி
**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## SPOKEN ENGLISH & GRAMMAR

★ O/L பரீட்சை எழுதியவர்கள் முதல் அனைவருக்குமான ஆங்கிலம்
★ முன்பள்ளி முதல் தரம் 5 வரை
★ துரித பாடநெறிகளும் உள்ளடக்கம் By : T.KUNA M.Sc.
ஆரம்பம் 02.01.2011 சனி & ஞாயிறு 4.00 P.M. - 5.00 P.M.
தொ. பே. : 0777363797 உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய். (108200)

## NEW SCIENCE CENTRE

யாழ். நகர்
**CHEMISTRY DAY Class**
★ அலகுரீதியான மீட்டல்
★ அலகு ரீதியான வினாவிடை
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ 25 கருத்தரங்கு
★ பயிற்சிப் பரீட்சைகள்
By: அன்பு

## CHEMISTRY CENTRE

300. பலாலி வீதி. கந்தர்மடம்.
**A/L 2013**

| English Medium | Tamil Medium |
|---|---|
| Inaugurate on 03.01.2011 Mon. 6.00 p.m. | ஆரம்பம் 03.01.2011 Mon. 5 - 6 |

By: அன்பு

## THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA
உயர் கல்வி கற்போருக்கான
ஆங்கில வகுப்புகள்
ஆரம்பம் 01.01.2011 சனி மாலை - 4.00 pm
பிரிவு - I: திங்கள், புதன், வெள்ளி 5.00 to 6.00 Pm
பிரிவு - II: சனி, ஞாயிறு 4.00 to 5.30 Pm
ஆசிரியர்: S.P. VAGEESON B.Com
T.P. 0776271488

36வது வருட கல்விச் சேவையில்
அதே இடம்.. அதே நிர்வாகம்.. அதே ஆசிரியர்கள்
விக்னா
கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L 2013 கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 08.01.2011 காலை 8.00 மணி
இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
Day class கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
Mon to Fri 8.00 - 2.00 p.m.

Quick Learning Course
## Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM

## THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
2013 A/L TAMIL, ENGLISH MEDIUM
ஆரம்பம் : 01.01.2011 (சனி)
தமிழ் மொழி மூலம் காலை 11.00 மணி
English Medium 2.30 p.m

| | |
|---|---|
| Com.Maths | ஐங்கரன், சிவகரன் |
| Biology | பொன்திவாகரன், குகானந்தன் |
| Chemistry | ராஜா, அன்பு, பிரதீபன் |
| Physics | அநபாயன், செல்வன், செந்தில் |

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
DSI, BATA பாடசாலை மாணவர்களுக்கான பாத அணிகளை பெற்றுக்கொள்ளலாம்
கபிலா பாதணியகம் 13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கபிலா காலணியகம் 24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA
இரசாயனவியல் - 2013 A/L
(தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்)
ஆரம்பம்: 01.01.2011 (சனி) - 9.00 a.m.
நேர அட்டவணை அலுவலகத்தில்
By - RAJAH [B.Sc. (Chem. Spl.)]

A/L 2013 ஆரம்பம் ஜனவரி 02 ஞாயிறு
கலை, வர்த்தகம்
சனி காலை முதல் அனுமதி வழங்கப்படும்.
யூனிவேர்சல் யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகே.

## வீடு வாடகைக்கு
தனியார் நிறுவனங்கள், கம்பனிகள், அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக்கு 25 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதியுடன் புதிய மாடி வாடகைக்கு உண்டு. தொ.பே. 072699517

MyWay English ஆங்கில பயிற்
01.01.2010 சனி புதுவருட விடுமுறை
சனி, ஞாயிறு 3 மாத புதிய பிரிவு
ஆரம்பம் : 02.01.2011 முடிவு : 31.03.20
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்
ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களு
3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடிய
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
MyWay 077 33 63 45
182, Stanley Rd, Jaff

**A/L 2013 வர்த்தக பிரிவு** ஆரம்பம் : 08-01-2011 சனி 8.00 மணி
கணக்கீடு AP. பகீரதன் | பொருளியல் NB. கஜீதரன் | வணிகக்கல்வி S. யசோ
**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் ... கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.